www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
දිනමුරසු වාරමලර්
ஜூன். 16-22, 1996
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 157

## ஆட்சியை கவிழ்க்க

## புலிகளின் கோரிக்கை



## சதி



## கை விடப்பட்ட சாமியார்

## விளையாட்டுப்பிள்ளை வினோத் காம்ளி

## இளைய தளபதியின் புதிய காதலி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உறுதி தொடருமா?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

மின்சார சபை ஊழியர்களது
வேலை நிறுத்தம் தொடர்பாக
விசாரணைகள் நடந்துள்ளன.
வெளியாகியுள்ள தகவல்கள்-
வேலை நிறுத்தத்தின் பின்னணியில்
வேறு அரசியல் காரணங்களும்
விளையாடியிருக்கலாம் என்று
நினைக்கவைக்கின்றன.

வேலை நிறுத்தம் என்பது
தொழிலாளர்களின் உரிமை.
தமது கோரிக்கைகளை
நிர்வாகம் நிராகரிக்கும்போது
வேலை நிறுத்தம் தவிர
தொழிலாளர்களுக்கு வேறு வழியில்லை.

வேலை நிறுத்தப் போராட்டங்கள்
வன்முறையாக மாறிய
வரலாறுகளும் இல்லாமல் இல்லை.

தொழிலாளர்கள்
இரும்புக்கரம் கொண்டு
அடக்கப்படும் போது
அதற்குப் பதிலடியாக
வன்முறை வெளிப்படுவதுண்டு.

ஆரம்பகால வேலை நிறுத்தங்களில்
தொழிலாளர்கள் தமது கோபத்தை
தொழிற்சாலைகளது
இயந்திரங்கள்மீது காட்டினார்கள்.

அது தவறான போராட்டமுறை
என்பதை-நீண்ட நெடுங்காலத்திற்கு
முன்பாகவே
தொழிற்சங்க இயக்கங்கள்
ஏற்றுக்கொண்டன.

அதன்பின்னர்-
வேலை நிறுத்தப் போராட்டங்கள்
அரசாங்கத்திற்கு அல்லது நிர்வாகத்திற்கு
எதிரான போராட்டங்களாக
நடத்தப்பட்டு வருகின்றன.
இதுதான் வேலை நிறுத்த
போராட்டத்தின் வரலாறு!

ஆனால், நம் நாட்டில்
மின்சார சபையினரின்
வேலை நிறுத்தப் போராட்டம்
மிகத் தவறான அணுகுமுறைகளை
தமதாக்கிக் கொண்டதாகிவிட்டது.

மக்களை வாட்டத்தில் தள்ளி
அரசாங்கத்தை பணியவைக்கும்

தவறான திசையில்
போராட்டத்தை நகர்த்திவிட்டார்கள்.

விளைவு-மக்களின் வெறுப்பை
அமோகமாக அறுவடை செய்து
அரசாங்கத்திற்கு
தங்களைச் சாட தாங்களே
ஒரு வாய்ப்பையும்
உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

மருத்துவமனைகளிலும்,
நீர் விநியோக மையங்களிலும்கூட
மின்சாரம் கிடைக்கக்கூடாது
என்று நினைத்திருக்கிறார்கள்
என்றால்,
விரிவான திட்டம் ஒன்று
பின்னணியில் இருந்திருக்கிறது
என்றுதானே அர்த்தம்?

மக்கள் மீதும்,
உயிருக்காகப் போராடும்
நோயாளர்கள்மீதும்
கரிசனை இல்லாதவர்கள்
தங்கள் தரப்பு நியாயங்கள்
பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை.

மலையக தோட்டத்தொழிலாளர்கள்
வேலை நிறுத்தம் செய்தபோது
இனவாத சாயம் பூசி
இலாபம் சம்பாதிக்க
முற்பட்டவர்களும் இருந்தனர்.
மின்சார சபையினரின்
வேலை நிறுத்தம் பற்றி
அவ்வாறானவர்கள் எவருமே
மூச்சே விடவில்லை என்பதும்
கவனிக்கப்படத்தக்கது.

இனப்பிரச்சனை என்றாலும்,
பொருளாதாரப் பிரச்சனை என்றாலும்
சொந்த லாபம் தேடும் சக்திகள்
குட்டையைக் குழப்புவதே
வாடிக்கையாகிவிட்டது.

மின்சார சபையினரின்
வேலை நிறுத்த விடயத்தில்-
சற்றே தாமதித்து என்றாலும்-
உறுதியாக அணுகினார் சந்திரிகா.

உறுதியான போக்குக்கு
ஆதரவு கிடைத்ததே தவிர
அதிருப்தி ஏற்படவில்லை.

அதே உறுதியை
இனப்பிரச்சனை விடயத்திலும்
வெளிப்படுத்தினாரானால்
சுயலாப சக்திகளை
ஓரம் கட்டிவிடலாமே!
செய்வாரா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பாவத்தின் விளைவுகள்

நாம் நமது வாழ்க்கையில் செய்கின்ற பாவங்கள்...

1. நமக்குள்ளேயே பிரிவை ஏற்படுத்துகின்றது.

நாம் செய்த தவறை நினைத்து மனம் அமைதியின்றி தவிக்கின்றது, மனம் சஞ்சலப்படுகின்றது, துக்கம் நம்மை ஆட்கொள்ளும் நிலைக்கு நாம் ஆளாகின்றோம்.

2. நமக்கும் கடவுளுக்கும் பிரிவை ஏற்படுத்துகின்றது.

தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். (ஆதி 3:8) பாவமானது கடவுளின் சந்நிதியை விட்டு நம்மை தூரப்படுத்துகின்றது; கடவுளோடு இருக்கும் உறவை பிரிக்கின்றது.

3. நமக்கும் பிறருக்கும் பிரிவை ஏற்படுத்துகின்றது.

என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள், அவ்விருட்சத்தின் கனியை எனக்கு கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். (ஆதி 3:12)

பாவமானது பழியை இன்னொருவர் மேலே சுமத்தி நல்லுறவை கெடுக்கின்றது ஆதாம் தான் ஏற்ற துணையின்மீது பழியை போடுகின்றான். எனவே நமது மன அமைதியின்மைக்கு நல்லுறவின் கெடுதலுக்கு காரணமாயிருக்கிற பாவத்தை மேற்கொண்டு, கடவுளோடும் பிறமனிதர்களோடும் சரியான உறவை ஏற்படுத்துவோமாக.

சகோ.எஸ்.யேசுநாதன், மெதடிஸ்த ஆலயம், செங்கலடி.



## குறை காணுதல்

தனது சகோதரனுடைய குறையை மறைப்பவனுடைய குறையை, அல்லாஹ் பரலோகத்தில் மறைத்து வைப்பான். தனது முஸ்லிம் சகோதரனின் குறையை, பகிரங்கஞ் செய்பவனின் குறையை, அல்லாஹ்வும் பகிரங்கஞ் செய்வான். அவன் தன் வீட்டின் நடுவிலிருந்தாலும் அவனைக் கேவலப்படுத்துவது உறுதி.

(நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்)

பிறர் மரியாதையில் குறுக்கிட்டுத் திரியும் ஒருவன், "தான், இறைவன் அருளுக்குரியவன்" என மனப்பால் குடித்திருப்பது, விந்தையிலும் விந்தை ஆகும். இவன் தான் ஷைத்தான்-இறைவன் விரோதி என உணர்க!

(பிக்ருப்னு அப்துல்லாஹ் (ரஹ்).)

மஹான், அறிஞர், கண்ணியவான், சகலரிடத்திலும் ஏதாகிலுமொரு குறை இருக்கத்தான் செய்யும். ஆதலால், அவர்களின் நன்மையை மட்டும் கவனித்து குறைகளை தள்ளிவிடுவாயாக!

(ஸய்யித் இப்னு முஸய்யிப் (ரஹ்))

எஜமானர்களைப் போல் மக்களின் குறைகளைத் துருவி அலையாதீர்; நீங்கள் அடிமைகள் ஆதலால் முதலில் உங்கள் குறைகளை நீங்கள் கவனியுங்கள்.

(ஈசா(அலை))

எம்.கே.எம்.நியார், ஹாலி-எலை.

# கவிதைப் போட்டி இல.154

## பரிசுக்குரிய கவிதை

**************************



### நம்பிக்கை

அண்ணாவின் தம்பியே!
தமிழகம் உனக்கு
தந்தது அரியாசனம்!
நாமும் தந்தோம்
நெஞ்சில் அதற்கு சரியாசனம்!
நம்மையும் கவனி
நாமும் இருக்கிறோம்;
உன்னை நம்பி!

கே.சிவப்பிரகாசம், திருகோணமலை.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்**

### இனிமேல் நான்...

குற்றங்களில்லா குவலயமில்லை.....
ஊழல்களில்லா உலகமுமில்லை.....
திருந்திய மனிதனாய் துரத்தினேன் அவற்றை!
இனி-மக்கள் சேவையே மகேசன் சேவை!

எம்.ஐ.எம்.அஸ்ஹம், புதிய வீதி, வெலிகம.

### நல்லாட்சி

மாலையும் பூவும்
பாங்குடன் ஒட்டும்
முன்றும் கலந்துனக்கு
நான் தருவேன்....
சங்கத் தமிழ் வளர்த்த
தங்கத் தமிழா!
ஊழல் இல்லா
நல்லாட்சி தா.

ரோஜா ஆனந்தராஜா, ராகலை.

### பணி

'செந்தமிழர் பிணி தீர
பணி செய்திருப்பது
என் கடனே' என்றவனே,
நம் நெஞ்சை வென்றவனே.
இங்குள்ள
நம் தமிழர்
பிணி தீரவும்
முடிப்பாயா பணி?

ஏ.மகேந்திரன், குருமன்காடு.

### திராவிடக் கலைஞர்.

திருக்குவளை மறத்தமிழா!
முத்துவேலர் தவப்புல்வா!
கருணாநிதியெனும் தலைவா!
கழகக் கொள்கை தொடரட்டும்.
கண்ணீர்க் குளங்கள் காயட்டும்!!

எஸ்.ராஜ்கமல், திஹாரிய.

### வேற்றுமை

புகைவண்டிப் பாதை யோரம்
தலைசாய்த்த நேரம்
விழுந்திருக்க வேண்டிய மலர்
மாலை
இன்று விழுந்ததே புகழ் மாலை என..

இணுவில்-சுபா, கொழும்பு-6.

### வழக்கு

ஊழல் செய்வது இழிவு!
அடக்கி ஆழ்வது இழுக்கு!
உடன் பிறவா உறவால் விழுக்கு.
உண்மை சொன்னது தேர்தல் வழக்கு!

எஸ்.தமிழ்ச்செல்வம், வெளிமடை..

### உதவி நில்!

கலைஞருக்கு மாலை,
கலைந்தது மாயை;
தலைவனே நிமிர்ந்து நில்!
தமிழனுக்கு உதவி நில்!

செல்வி.ஆர்.பர்வின், மாத்தளை.

### பொறுமை

அகிம்சையின் வெற்றிக்கு காந்தி
அன்பின் வெற்றிக்கு புத்தர்
கருணையின் வெற்றிக்கு திரேஸா
பொறுமையின் வெற்றிக்கு கலைஞர்

க.ஜெயந்தி, கொழும்பு-05.

# கவிதைப் போட்டி இல-157



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.06.1996.

-முகவரி-
கவிதைப் போட்டி இல.157.
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

### கலைஞரின் வேலை!

தோள் மீது
விழுந்தது
பூமாலை!
இனித் தோள்
கொடுப்பது
கலைஞரின் வேலை!

-செல்வன் ஷஹிர்ஷா, தாஸிம் தர்கா நகர்.

### நாங்களும்

வெற்றிக்கு கலைஞர்
வீழ்ச்சிக்கு செல்வி
வாழ்த்துக்கு ரஜினி
தீர்ப்புக்கு நாங்களும்.
கலைஞரே
இங்கும் பாருங்கள்

வி.நவநீதன், மட்டக்களப்பு.

### நிரந்தரம்

தேர்தலில்
விழுந்தது புகழ்மாலை!
தேமதுர தமிழ் உலகும்
உனக்குத் தந்தது
தமிழ்மாலை...!
முன்னது உதிரலாம்,
பின்னது நிரந்தரம்.

எஸ்.கலைச்செல்வி, தெஹிவளை.

### நீதி?

உன் வாயிலில்
ஆராய்ச்சி மணி!
வந்தசைப்போம்!
நம் திசைக்கும்
சொல்வாயா நீதி?

பி.பார்த்திபன், பம்பலப்பிட்டி.

### தயவுசெய்து

ரோஜாப்பூ
மாலைகளும்,
ராஜா பட்டங்களும்,
எம்மை கொஞ்சம்
காக்க பயன்படட்டும்!

சுபா வரன், கண்டி.

### குரு

அல்லியின் கொட்டம்
அடக்கிய
அருச்சுனனோ....?
இல்லை-சூர்ப்பணகை காதறுத்த
இலக்குமணனோ....
இவனது குரு?

என்.கே.வேணி, பெரியமுல்லை, நீர்கொழும்பு.

### வாழ்த்துப் பூமாலை!..

கழுத்திலே பூமாலை-இவரோ
எழுபதிலும் காளை!..
எழுத்திலோ மன்னன்-இப்போ
ஆள்கிறார் மண்ணை!..
கருத்தாலே கவர்ந்தவர்-இன்று
பிடித்தாரோ ஆட்சியை!...
மனத்தாலே வாழ்த்துவோம்-வருக;
மீண்டும் நலம்+வளம் பெறுக!...

"பூநோனா"-பஹ்மிதா வாஹிட், அக்குறணை.

# வாசக(ர்)சாலை

அன்பின் தினமுரசிற்கு!

இம்முறை நாரதரின் அலசலில் ஒரு "நெத்தியடி" தனம் தெரிந்தது. பலவீனங்கள் பலமாக்கப்படும்.

சுபா, கண்டி.

அன்பிற்கினிய தினமுரசே, நீ சுமந்துவரும் ஆக்கங்களை மிகுந்த ஆர்வத்துடனும், ஆசையுடனும் பார்த்து வரும் உனது அன்பான வாசகர்களில் நானும் ஒருவன். நீ சுமந்து வரும் ஆக்கங்களில் என்னை மிகவும் கவர்ந்தது "கார்லோஸ், அரசியல் தொடர், தாய் தொடர் நவீனம் என்பவற்றோடு, "ஹலோ டாக்டர்," எங்கே? நாட்டு நிலைமையைக் காரணங் காட்டி அவரையும் தூக்கி விட்டார்களா?

ஏ.சி.எம்.மசூர், தெஹிகஸ்தலாவ, பலாங்கொடை.

"கண்ணுக்கு மை அழகு
கவிதைக்குப் பொய் அழகு
எனக்கோ முரசு நீ அழகு"

எத்தனை புதிய அம்சங்களுடன் வாரம் ஒருமுறை வந்து எம் போன்ற வாசக நெஞ்சங்களை நெகிழ வைப்பதில் முரசுக்கு நிகர் முரசுதான்.

ராஜேந்திரக்குமாரின் நீ நீயா? வெகு அருமை.

காதில பூ கந்தசாமி படு ஜோர் சார். தேன் கிண்ணம் என் போன்றவர்களுக்கு உண்மையில் அமுத கிண்ணம்தான். மென் மேலும் உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

செல்வி. மயில்வாகனம், பங்கேஸ்வரி, பரமேஸ்வரி எம். தியாகேஸ்வரி, எம். மங்கேஸ்வரன், பிரதான வீதி, மட்/முறக்கொட்டான்சேனை.

அன்பின் முரசே! உன்னை காண்பதற்கு ஒரு வாரம் காத்திருக்க வைக்கிறாய்! ஏன் நீ என்னை தினம் தோறும் பார் என்று கூற கூடாதா? முரசே சினிவிசிட் ரொம்ப பிரமாதம். முரசுக்கு என்றும் என் பாராட்டுக்கள்.

கே.புவனலோஜினி, சமகிபுர, இறக்குவானை.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- கிறிஸ்டி கிலேரியன், மட்டக்களப்பு.
- கே.சுப்பிரமணியம், மடுள்கல.
- யெஸ்மின் ஹஸன், கொழும்பு-14.
- வ.பிர்தௌஸ், கிண்ணியா-03.
- எம்.ஸாலிஹ் அஸீம், புத்தளம்.
- எம்.ரிஷான் ஷெரீப், மாவனல்லை.
- எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.
- எஃப். நேசன் இந்து, ஹட்டன்.
- எம்.எச்.எம்.ஹனீபா, அக்கரைப்பற்று.01.
- ரிபாதா ஜவ்ஹர், மாவனெல்லை.
- கோ.சிவலிங்கம், மூதூர்.
- எம்.ஐ.ஏ.ஹலீம், ஆலங்குடா.
- செல்வி ப்ரிய நேசி, களுத்துறை தெற்கு.
- ஆர்.இரத்தினவேல், பதுளை.
- எல்.சரோஜினி, நீர்கொழும்பு.
- பா.சிவச்சந்திரன், கொழும்பு-6
- ஏ.காந்திமதி, மாத்தளை.
- உ.தியாகராஜா, வவுனியா.
- அ.ஜெயக்குமார், திருமலை.

முரசில் இடம் பெறும் அனைத்து அம்சங்களும் இனிமை. காதிலைப் பூ கந்தசாமி வாரா வாரம் தூள் கிளப்புகிறார்.... கார்லோசின் சாகசங்கள் படு ஜோர். முரசுக்கும் ரசிகனுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

எம்.எஸ்.ரம்சியா, பதுளை.

காலத்துக்கேற்ற கற்பனையில்
காதிலை பூ கந்தசாமி
'கடிவாளமில்லாத குதிரை'
வாரந்தோறும் விளாசித்தள்ள
வாழ்த்துக்களோடு விடை பெறுகிறோம்.

சதாசிவம் குடும்பத்தினர்-மாத்தளை.

அன்பின் முரசே!

உன் தேகத்தின் பாகங்கள் காதிலை பூ கந்தசாமி மிகவும் சூப்பர். தொடரில் "கார்லோஸ் கலக்குகிறான். அதிலும் ரசிகன் எழுதும் படைப்பு யாவும் என்னை வியர்க்கவைக்கின்றன. திகில் மன்னன் ராஜேந்திரகுமார் எழுதும் "நீ! நீயா!" சூப்பர். அவருக்கு எனது கைக்குலுக்கல். முரசே! வளம் பெற எனது வாழ்த்துக்கள்.

எஸ்.ரீ. ரமேஷ்-அக்கரைப்பற்று-06.

நம் நாட்டு நிலவரங்களை மட்டுமன்றி கடல் கடந்தும் முன் கூட்டியே கணிப்பீடு செய்வதில் முரசுக்கு நிகர் எதுவுமில்லை என்பதை தமிழக தேர்தல் முடிவுகள் நிரூபித்துவிட்டன. எத்திக்கும் போற்றும் தித்திக்கும் முரசுக்கு மீண்டும் ஒரு சபாஷ்!

எம். எச். எம். தௌஸீக், புதியகாத்தான்குடி-06.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்—குடாநாட்டு மக்களுக்கு புலிகள் எச்சரிக்கை!

## "சொந்த மக்களை தண்டிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளவேண்டாம்"

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறையால் யாழ் குடாநாட்டு மக்களுக்காக ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. நான்கு பக்க அளவில் மிக நீண்ட விளக்கமும், அறிவுறுத்தலும், எச்சரிக்கையும் அப்பிரசுரத்தில் காணப்படுகின்றன.

அப்பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: பெரும் படைக்கான ஆட்சேர்ப்பும், யுத்த தளபாட கொள்வனவும் சிறிலங்கா அரசின் அன்றாட முக்கிய கடமையாகிவிட்டது.

எம் அன்பான மக்களே! நீங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். உங்களின் கண்ணெதிரே இப்பொழுது பிரச்சனைகள் இல்லாதிருக்கலாம். சுதந்திரத்தையும், சுயமானத்தையும் விட்டுவிட்டு துரோகத்தனமானதோர் அற்ப சொகுசு வாழ்க்கை உங்களில் சிலருக்கு பெரிதாகப்படுகின்றது.

அரசாங்கத்தின் பிரசார வலைக்குள் சிக்குண்டு எங்கள் தேசத்தில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்கின்ற மாயைக்குள் நீங்கள் வீழ்ந்து வாழ்கின்றீர்கள்.

இன்றைய போருக்கு காரணமானவர்கள் யார்? இலங்கைத்தீவு தமக்கே சொந்தம் என்கின்ற பேரினவாதிகளும், அவர்களை மீறமுடியாமல் அவர்களை நியாயப்படுத்தும் சிங்களத் தலைவர்களும், இவர்களை எல்லாம் நம்பி ஏமாந்துபோன தமிழ் பெரியவர்களுமேயாகும்.

இம்மண்ணில் வாழ்ந்திருக்கும் எம் அன்பான மக்களே, நீங்கள் எங்கிருந்தாலும் விடுதலைப் போராட்டத்திற்கு இயன்ற பங்களிப்பை செய்யுங்கள். அதைவிடுத்து உங்கள் சொந்த நலன்களுக்காய், தனிப்பட்ட சுகவாழ்விற்காய் துரோகத்தனத்தில் வீழ்ந்துவிடாதீர்கள். அவ்வாறு வீழ்ந்து விடுவதன்மூலம் எம் சொந்த மக்களையே தண்டிக்க வேண்டிய வேதனை மிகுந்த துர்ப்பாக்கிய நிலைக்குள் எம்மை தள்ளிவிடாதீர்கள்.

நாம் எமது போராட்டத்தை அணுவளவேனும் விட்டுக்கொடுக்கவோ தளர்த்தவோ முடியாது. மாறாக முழு மூச்சுடன் விரைவு படுத்துவோம்." இவ்வாறு புலிகளின் புலனாய்வுத்துறை வெளியிட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய அரசிடம் புலிகள் கோரிக்கை

## வெளியுறவு கொள்கையில் மாற்றம் வேண்டும்

## கலைஞர் எதிர் நிலைப்பாட்டை கைவிடுக

- இந்திய அரசு புலிகளுடன் நட்புறவை ஏற்படுத்த வேண்டும்.
- தமிழக அரசு தன்னாட்சி போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்.
- கலைஞர் கருணாநிதி புலிகளுக்கு எதிரான எதிர் நிலைப்பாட்டை கைவிடவேண்டும்.
- புலிகள் இயக்கத்தை இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் அங்கீகரிக்க வேண்டும்.

### புலிகளின் மாற்றம்

இந்தியாவில் நடைபெற்ற தேர்தல்களை அடுத்து புலிகள் இயக்கத்தினர் தமது நிலைப்பாட்டை முதன் முதலில் உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளனர்.

இறுதியாக வெளியான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் புலிகள் இயக்க தலைமைப்பீடத்தின் கருத்து வெளியாகியுள்ளது.

நீண்டகாலத்தின் பின்னர் இந்தியாவின் நட்பு தேவை என்ற கருத்து புலிகளிடம் இருந்து வெளிவந்துள்ளது.

புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தியாவில் புதிதாக ஆட்சியமைக்கும் நடுவன் அரசு (மத்திய அரசு) ஈழத் தமிழரின் தேசிய நலனைப் பேணும்வகையில் தனது வெளியுறவுக் கொள்கையில் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

தமிழீழ மக்களின் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளுடன் அது நட்புறவை வளர்த்துக்கொள்ள வேண்டும்."

தமிழ்நாட்டிலும், டெல்லியிலும் அதிகாரத்தில் இருந்த முன்னைய அரசாங்கங்கள் ஈழத் தமிழரின் நலன்கள் தொடர்பாக பாதகமான கொள்கைகளையும், பகைமை ரீதியிலான அணுகு முறைகளையும் கடைப்பிடித்து வந்தன.

ஆனால், இப்போது தமிழ்நாட்டிலும், டெல்லியிலும் நடந்துள்ள ஆட்சிமாற்றங்கள் தமிழீழ மக்களுக்கு புதியதொரு தென்பை ஊட்டியுள்ளன.

கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான தி.மு.கழகம் அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் தமிழ்நாட்டின் ஆட்சியை மீண்டும் கைப்பற்றி உள்ளது. புதுடில்லியில் அமைந்துள்ள தொங்கு நாடாளுமன்றத்திலும் செல்வாக்கு செலுத்தும் அளவுக்கு கணிசமான நாடாளுமன்ற ஆசனங்களையும் பெற்றுள்ளது.

### கலக்கம்

தி.மு.க.பெற்றுள்ள இந்த மாபெரும் வெற்றி ஈழத் தமிழர்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொடுத்துள்ளது.

கலைஞர் பெற்றுள்ள வெற்றியைப் பாராட்டி விடுதலைப் புலிகள் இயக்கம் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தி அந்த நம்பிக்கையின் பிரதிபலிப்பாகும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள வெற்றி பேரினவாத சக்திகளுக்கு கலக்கத்தை உண்டு பண்ணியுள்ளது.

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்துவரும் கலைஞர் அவர்கள், போராட்டத்திற்கு தலைமைத்தாங்கும் புலிகள் இயக்கம் தொடர்பாக சில பாதகமான கருத்துக்களை தெரிவித்துள்ளார். அது எமது மக்களுக்கு கவலை தந்திருக்கிறது.

கலைஞர் தெரிவித்துள்ள கருத்துக்களை இலங்கை அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும். எனவே- புலிகள் இயக்கம் தொடர்பாக கலைஞர் அவர்கள் இப்போது கடைப்பிடிக்கும் எதிர் நிலைப்பாட்டைக் கைவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

இலங்கை அரசுக்கு இந்திய மத்திய அரசு வழங்கிவரும் உதவிகளை நிறுத்த கலைஞர் முயல வேண்டும் என்பதும் எமது விருப்பமாகும்.

ஈழத் தமிழர் நடாத்தும் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கும் கலைஞரின் நிபந்தனையற்ற ஆதரவைத்தந்து, எமது போராட்டத்திற்கு உதவிபுரிய வேண்டும்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த இக்கட்டான நேரத்தில் தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்திற்கு தலைமை ஏற்று நடாத்தும் புலிகள் இயக்கத்திற்கு சார்பாகவும் தனது கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்." இவ்வாறு புலிகள் இயக்கத்தினர் தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளனர்.

### கோரிக்கைகள்

இந்திய மத்திய அரசிடம் பின்வரும் கோரிக்கைகளையும் புலிகள் இயக்கத்தினர் விடுத்துள்ளனர்:

* புலிகளுக்கு எதிராக முன்னைய இந்திய அரசுகள் மேற்கொண்ட சகலவிதமான நடவடிக்கைகளையும் நிறுத்திவிடுதல்.

* உரிமைப் போராட்டத்திற்கு புதிய அரசு ஆதரவளித்தல்.

தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் இந்தியாவின் தேசிய நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் என்ற முன்னைய அரசின் கொள்கை ஆதாரமற்றது. அவ்விதமான அச்சம் தேவையற்றது என்பதை சொல்லிக் கொள்ள விரும்பும் புலிகள் இயக்கம், தமிழ் மக்கள் எப்போதும் பாரத நாட்டின் நட்புறவு சக்தியாகவே திகழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறது.

மேற்கண்டவாறு புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளது.

புலிகள் இயக்கத்தினர் இந்திய நட்புறவை நாடுவதால், இந்தியா தவிர்ந்த வேறொரு நாட்டின் மத்தியஸ்தம் பற்றி தற்போதைக்கு அவர்கள் பேசமாட்டார்கள் என்று தெரிகிறது.

இதேவேளை இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் இலங்கையில் எந்தவொரு தனி இயக்கம் சார்பான நிலைப்பாட்டையும் தற்போதைக்கு மேற்கொள்ளப்போவதில்லை என்றும் அறியமுடிகிறது. ●

# பாடசாலை நேரமாற்றத்திற்கு வரவேற்பு

## போக்குவரத்து நெரிசல் பற்றியும் தெரிவிப்பு

கடந்த திங்கட்கிழமை முதல் பாடசாலை தொடங்கும் நேரத்தை காலை 8.00 மணியாக மாற்றியதை பல பாடசாலை அதிபர்களும் பெற்றாரும் வரவேற்றுள்ளனர். இருப்பினும் பாடசாலைகளும் அலுவலகங்களும் தொடங்கும் நேரத்தில் ஆக அரைமணி நேர வித்தியாசம் இருப்பதனால், போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படும் என்பதையும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மத்திய பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் ராமல் சிறிவர்தனா, பாடசாலைகளுக்கான பிரத்தியேக பஸ்கள், புதிய நேர ஒழுங்குக்கமையவே விடப்படும் என்றார். ஏனைய மத்திய போக்குவரத்து சபை வண்டிகளையும் மாணவர்கள் பயன்படுத்தலாம் என்றார் அவர்.

இதேவேளை புதிய நேரமாற்றம்பற்றி பாடசாலை அதிபர்கள் பலதரப்பட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளனர். தேர்ஸ்டன் மாவித்தியாலய அதிபர் ஆர்.டி.எம்.பி. வீரதுங்க, நேரமாற்றம் மாணவர்களுக்கு, குறிப்பாக வெகு தூரத்துக்கப்பாலிருந்து அதிகாலையிலேயே பள்ளிக்குப் புறப்பட்டு வரும் மாணவர்களுக்கு நன்மை பயக்கும் என்றார்.

அண்மையில்-நேரமாற்றத்துக்கு முன்னர் பாடசாலைகளுக்கு நேரம்தவறிவரும் மாணவர்களின் தொகை கணிசமாக அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிந்தது என்றும் கூறப்பட்டது.

டி.எஸ்.சேனநாயக்க வித்தியாலய அதிபர் ஜி.சி.அதிகாரி, புதிய நேரமாற்றத்தை புத்திசாலித்தனமான நடவடிக்கை என்றார் மிகவும் காலை வேளையில் பாடசாலை புறப்படும் மாணவர்களின் சிரமத்தை இது குறைக்கும் என்றார். மியூசியெஸ் கல்லூரி அதிபர் என். பிலப்பிட்டியா, தனக்கு பழைய நிலையில் 7.30க்கு பாடசாலை தொடங்குவதையே பிடிக்கும் என்றார். 8.00 மணிக்கு பாடசாலைகள் தொடங்குவதனால் வாகனப் போக்குவரத்து நெரிசல் அதிகமாகும். இதனால் மாணவர்கள் உரிய காலத்துக்கு வருவது தாமதமாகும் என்றார்.

புதிய நேரமாற்றத்தை பெரும்பாலான பெற்றோர் வரவேற்றுள்ளனர்.

# வலிகாமம் சென்றோருக்கு கிண்டல்

வன்னிக்கு வருமாறு புலிகள் இயக்கத்தினர் கூறியும் கேட்காமல் தமது வீடுகளுக்கு திரும்பியவர்களை கிண்டலடித்து ஒரு கவிதை எழுதப்பட்டுள்ளது. புலிகள் இயக்க ஆஸ்தான கவிஞர் என்றழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை, 'வியாசன்' என்ற புனை பெயரில் எழுதியுள்ளார்:

பொழுதெல்லாம் பொய்யாக இருந்துவிட்டா
வலிகாமம் புகுந்தீர்?
உள்ளே செல்ல வரிசையில் நின்ற சிலர்,
வெளியே வந்தவரைப் பார்த்து விசிலடித்தார்களாம்
பாட்டுக் கேட்கலாம், படம் பார்க்கலாம்,
தடுப்பாரின்றி தண்ணியடிக்கலாம்–
என்றபடி சிலர் சென்றனராம்.
வெட்கம் கெட்டதுகளுக்கு எப்படி
விடுதலை விளங்கும்?
வடமராட்சியிலிருந்து ஓடிவந்து
கொடிகாமத்தில் வரிசையில் நின்று
உள்ளே போனதுகளும் உண்டு.
பாலும், பழஞ்சோறும், பாணும் பருப்புமிவை
நாலும் கிடைக்குமெனில் நமக்கதுவே போதும்;
என்றெண்ணிப் போனவருக்கு
ஒன்றுரைப்போம்......
"அடிக்கடி நாக்கு வழித்துக் கொள்க.
உங்களில் உப்பு உறைக்கட்டும்
விரைவில் எம்முருள் வருவோம்......"

என்று தொடர்கிறது கவிதை.

# ஆளுநர் காமினி தடைவிதிப்பு

(காத்தான்குடி நிருபர்.)

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் பணியாற்றும் அரச ஊழியர்கள் அதே நேரத்தில் காப்புறுதி முகவர், மற்றும் நிருபர்போன்ற வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கு வடகிழக்கு மாகாண ஆளுநர் டாக்டர் காமினி பொன்சேகாவின் உத்தரவின்பேரில் மாகாண பிரதம செயலாளர் ஜீ. கிருஷ்ணமூர்த்தி தடை விதித்துள்ளார்.

பல்வேறு அரச–தனியார் பத்திரிகைகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் மாகாண சபையின் அரச ஊழியர்கள் நிருபர்களாகக் கடமைபுரிகின்றனர். அதுபோல் பலர் காப்புறுதி முகவர்களாகவும் உள்ளனர்.

இந்தத்தடை உத்தரவு வடக்கு கிழக்கு மாகாணசபையில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இப்படியும் ஒரு பிக்பொக்கட்

தமிழ்நாட்டில் கோவையில் கடந்த எட்டாம் திகதி நடைபெற்றுள்ள ஒரு பிக்பொக்கட் சம்பவம் விபரீதமானது. நம்நாட்டிலும் பயணிகள் ஜாக்கிரதை கருதி அச் செய்தியை கீழே தருகிறோம்:

கோவையில் பஸ் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்தார் கிருஷ்ணராஜ் என்னும் கூலித் தொழிலாளி. வயது 43. பஸ்சில் கூட்டம் அதிகமாக இருந்தது. கிருஷ்ணராஜ் நின்று கொண்டு பயணம் செய்தார். அவருக்கு அருகே நின்று கொண்டிருந்த பிக் பொக்கட் திருடன் கிருஷ்ணராஜின் அரைக்கால்சட்டை பொக்கற்றில் இருந்த பணத்தை எடுக்க முயன்றான். கூரான பிளேட்டை பாவித்து பொக்கற்றை வெட்டுவதுதான் அவனது பாணி. கிருஷ்ணராஜின் பொக்கற்றை வெட்டும்போது பஸ்குலுங்கியதால் பிளேட் பொக்கற்றையும் தாண்டி கிருஷ்ணராஜின் மர்ம உறுப்பையும் 'நறுக்' செய்து விட்டது.

உடனே வலி தாங்காமல் கிருஷ்ணராஜ் கத்தினார். திருடன் பஸ்சில் இருந்து குதித்து ஒரே ஓட்டமாக ஓடித்தப்பிவிட்டான்.

கிருஷ்ணராஜ் கோவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி அறிந்த பஸ் பயணிகள் மத்தியில் பீதி நிலவுகிறது. பீதி வரத்தானே செய்யும்!

# கட்டிப்புரண்டு இழுபறி

கொம்மாதுறை இராணுவ முகாமுக்கு அருகேவைத்து மோட்டார்சைக்கிள் சொந்தக்காரர் ஒருவரும், புலிகள் இயக்க உறுப்பினரும் கட்டிப்புரண்டு உருண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வந்துள்ளதாவது: கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் கொம்மாதுறை இராணுவ முகாமுக்கு சமீபமாக சென்று கொண்டிருந்தார். அவரை வழி மறித்த புலிகள் இயக்கத்தினர் மோட்டார் சைக்கிளை தருமாறு கேட்டனர். அவர் மறுக்கவே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் ஏற்பட்ட இழுபறியில்தான் அந்த ஊழியரும், புலிகள் இயக்க உறுப்பினரும் கட்டிப்புரண்டனர். ஆனாலும் எப்படியோ வாதாடி மோட்டார் சைக்கிளைக் கொடுக்காமல் திரும்பிவிட்டார் அந்த ஊழியர்.

அதன்பின்னர் அவ்வழியால் வந்த 'ரெட்பானா' நிறுவன ஊழியரின் மோட்டார் சைக்கிளை புலிகள் வாங்கிச் சென்றனர். அன்று மாலை களுவங்கேணியில் வைத்து அந்த மோட்டார்சைக்கிளை உடைந்த நிலையில் புலிகள் திருப்பி ஒப்படைத்தனர்.

தமது முகாமுக்கு 10 மீட்டர் தூரத்தில் இந்த சம்பவங்கள் நடந்துமுடிந்த பின்னர் வந்த இராணுவத்தினர் தமக்கு உடனே தெரியப்படுத்தவில்லை என்று மக்கள்மீது கோபப்பட்டுக் கொண்டனர்.

# பாகிஸ்தானுக்கு புலிகள் அச்சுறுத்தல்!

## இலங்கை வந்த வெளிநாட்டமைச்சர் தகவல்

புலிகள் இயக்கத்தினருக்கு பாகிஸ்தான் உதவுகிறது என்று இந்தியப் பத்திரிகைகள் குற்றஞ்சாட்டுவதை, இங்கு வந்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சர்தார் ஆசெஃம்ப் அஹமட் அலி, ஆதாரமற்ற வதந்தி என்று கூறினார். கொழும்பிலிருந்து வெளிவரும் 'தி ஐலண்ட்' ஆங்கில வார ஏட்டுக்கு அவர் அளித்த பேட்டியின்போதே அவ்வாறு குறிப்பிட்டார்.

இந்திய பத்திரிகைகளின் குற்றச்சாட்டை மிட்டு விமர்சிக்கும்போது "இதைப்போன்ற முட்டாள்தனமானது வேறு எதுவுமில்லை. ஒருபுறம், நாங்கள் புலிகள் இயக்கத்துக்கு உதவுவதாகக் குற்றஞ்சாட்டப்படும் அதே வேளையில், மறுபுறம் எல்.ரி.ரி.ஈ.யினால் பாகிஸ்தான் அச்சுறுத்தப்படுகிறது. இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளன." என்றார்.

புலிகள் இயக்கத்தினர் எவ்வகையில் பாகிஸ்தானை அச்சுறுத்துகின்றனர்? என்று கேட்டபோது, சிறிலங்காவுக்கு பாகிஸ்தான் உதவுவதனால் பாகிஸ்தான் விமான நிறுவனத்தை (பாகிஸ்தான் எயர்லைன்ஸ்) தாக்கப்போவதாக புலிகள் அச்சுறுத்தியுள்ளனர் என்றார். துரதிஷ்டவசமாக இத்தகைய செய்திகள் இந்தியாவிலிருந்துதான் உருவாகின்றன. பாகிஸ்தானில் புலிகள் பற்றி எதுவுமே தெரியாது என்றார் அவர்.

# பயணிகள் அவதி தொடர்கிறது

## பஸ்கள்மீது புலிகளும் பாய்ச்சல்

(ஏறாவூர் நிருபர்)

'மட்டக்களப்பிலுள்ள பல அரச காரியாலயங்களுக்குள் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கூட அவர்களது மோட்டார் சைக்கிள்களையும், துவிச்சக்கர வண்டிகளையும் பாதுகாப்புக் காரணங்களைக் கருதி உள்ளே எடுத்துச் செல்வதோ நிறுத்தி வைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவிலும் இத்தடை சென்ற 07.06.96 இலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது இதேபோல் மட்டக்களப்பு ரெலிகொம், பெற்றோலியக் கூட்டுத்தாபன அலுவலர்களும் தமது காரியாலய அருகிலுள்ள வீதிமருங்குகளிலேயே வாகனங்களை நிறுத்தி வைக்கிறார்கள்.

05.06.96 அன்று மட்டக்களப்பு-சத்துருக்கொண்டான் உள்ளூர் சேவையில் ஈடுபட்ட இ.போ.ச. பஸ் ஒன்று தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. புலிகளே இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க; பயணிகளை அலைக்கழித்து வெறுப்புண்டாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது மட்டக்களப்பு இ.போ.சபையினருக்கு சர்வசாதாரணமாகிவிட்டது. கடந்த 07.06.96 அன்று மாலை நீண்ட நேர இடைவெளிக்குப் பின் மட்டக்களப்பிலிருந்து செங்கலடி நோக்கி கடைசி பஸ்ஸாக ஒரு பஸ் புறப்பட்டது. மாணவர்கள், அலுவல் முடிந்து திரும்பும் உத்தியோகத்தர்களுடன் திக்குமுக்காடும் சன நெரிசலாக காணப்பட்ட அந்த பஸ் ஏதோ நிருவாகப் பிரச்சினை காரணமாக மட்டக்களப்பு டிப்போவடியில் அரை மணி நேரத்திற்கு மேலாக வீணாக நிறுத்தி வைக்கப்பட்டது. மாலை 4.30 மணி தொடக்கம் பஸ்ஸுக்காகக் காத்து நின்றவர்கள் செங்கலடியை அடையும் போது இரவு 7.30 மணியாகிவிட்டது.

# தடைசெய்யப்பட்ட பொருட்கள் தாராள விற்பனை!

## மட்டக்களப்பில் புலிகளின் பகுதிகளில் புதிய கடைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு எடுத்துச் செல்லத் தடைசெய்யப்பட்ட, மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் அப்பகுதிகளில் இப்பொழுது அதிகரித்த விலையில் தாராளமாகக் கிடைக்கின்றன.

நகர்ப்பகுதிகளுக்கு வந்து பொதுமக்கள் வாங்கிச் செல்வதற்காக முற்றாகத் தடை செய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைத் தற்சமயம் அப்பகுதிகளில் புலிகள் திறந்துள்ள சில்லறைக் கடைகளில் தாராளமாகப் பெறக்கூடியதாக உள்ளது.

படுவான்கரை, பதுளை வீதி, வாகரை போன்ற பகுதிகளில் புலிகள் தமது கடைகளைத் திறந்துள்ளனர். எந்த விலைக்கும் நகர்ப்பகுதிகளில் (படையினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகள்) டோர்ச் பற்றரிகளை வாங்க முடியாது. ஆனால், புலிகளின் கடைகளிலும் மற்றும் அப்பகுதிகளிலுள்ள பொதுமக்களின் சிறிய கடைகளிலும் எல்லா வகையான பற்றரிகளும் பெட்டிக் கணக்கில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒரு பெரிய டோர்ச் பற்றரி புலிகளின் கடையில் 50 ரூபாவாக விற்கப்படுகின்றது.

தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை இடைத்தரகு வியாபாரிகள் மூலமாகப் புலிகள் எல்லைப் பகுதிகளிலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் பகுதிகளிலிருந்து பெறுவதாக விசயம் அறிந்த வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. கைக்குள் தாராளமாகத் திணித்தால் எதையும் கவனிக்காமல் விடும் காவல்துறையினர் தாராளமான உதவியும் உண்டு என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## கொச்சிக்காப் போடியார் எழுதுவது:

# நாக்கால மூக்கத் தொடத் தெரியுமா?

*அய்யாத்துர அண்ணே!*

போன கிழம அவசர அவசியமாக கடதாசி ஒண்ட கீறிப் போட்டு அண்ணேய்க்கு போடுவமெண்டு நினைச்சநான். வேறசிக்கலொண்டு மூளையப் போட்டு குழப்பினத்தால ஒண்டும் செய்ய ஏலாமப் போயித்து.

கடதாசிய, கிடதாசிய கீறி எம்பலப் புக்குள்ள அடைச்சா மட்டும் போய்ச் சேர்ந்திடும் எண்டு நினைச்சனெண்டா. அங்கதான் அண்ண நான் புள உடுறன்.

மட்டக்களப்பில இரிக்கிற பெரிய போசிட்டாபீசுக்கு போய் வாறெண்டா, நினைச்சி விட்டா' எண்டு பாடிப் போட்டாரு.

சப்ஸெக்ர மாத்திப் போட்டு- கதைக்கனெண்டு நினைக்காதங்க அண்ண. அப்பிடி நினைச்சயளெண்டா அங்கத்தான் அண்ண புள விடுறிங்க.

நம்மட மட்டக்களப்பு போசிட்டாபீஸ்-காலுக்குள்ள அண்ண கிடக்கு-இப்ப என்னடா எண்டா- நாக்கால மூக்க கழுத்தச் சுத்தி தொட்ட மாதிரி அண்ண.

அவசர அந்திராமாபத்துக்கு ஓடிக்கீடிப் போய், கடுதாசிய போட்டுத்து வந்திருவமெண்டா அது சொல்லி ஓயிற கயிட்டமில்ல. போசிட்டாபீசுக்கு போற வேல வேணாம் சோறு கட்டித்துப் போகோணும் அண்ண. லேசாப் போற வழிய அடைச்சிப் போட்டானுகள் அரசாங்கத்திர ஆக்கள். றோட்டுக்கீட்டெல்லாம் நினைச்ச நினைச்ச மாதிரி கட்டையும், கம்புந்தானே அண்ண குவிச்சிருக்கு. கையில பூட்டுந் துறப்புந் தானே இப்ப மிச்சம்.

அண்ண! உங்களுக்கு நாக்கால மூக்கத் தொடத் தெரியுமோ? எனக்கெண்டா நீங்க- யாழ்ப்பாணத்தில சீவிக்கக்க, சொல்லித் தந்த ஞாபகம். பழைய கதையள எல்லாம் நம்மட நெஞ்சில அள்ளிப் போட்டுப் பாத்தா- நெஞ்சி வெடிச்சிப் போயிடும் போல. அதுதான் அண்ண நம்மட பாரதியாரும் 'நெஞ்சி பொறுக்குதில்லையே- இந்த நிலை கெட்ட மனுஷர எண்டு போயித்து.

நம்மட வேலாப் போடிர மகன் வீமாப் போடி ஆத்துக்கு அங்கால இருந்து வந்திட்டுப் போனான். கனகாலத்துக்குப் புறகு டவுணுக்கு வந்து எட்டிப் பார்த்துப் போவம் எண்டு வந்ததாம்.

சாதியா, உறவா எண்டும் இப்ப பாக்க ஏலா. திக்கால திக்கால எல்லாம் நம்மட வகுத்துவாரில உள்ள சனம் சிதறுண்டு போய் கிடக்குதெண்டு சொல்லித்துப் போறான்.


சீரழிவெண்டா, இப்பிடியொரு சீரழிவா, எண்ட ஜென்மத்திலயும் காண இல்லை அண்ண.

போற போக்கப் பாத்தா அண்ண- நிக்க நிலை இல்லாம இரிக்கி. றோட்டில நடக்க மனமிருக்கா? வீட்டில, சிவசிவா எண்டு சாலுவைய உதறி தலைக்க வச்சித்து- படுப்பமெண்டா அதுக்கும் மனம் வாறதா இல்ல. ஆரிட்ட அண்ண நமக்கு வந்திருக்கிற மாராயத்த சொல்லி குளறுற?

எவ்வளவு காரியம் இரிக்கி சொல்லிச் சிரிக்க; எவ்வளவு காரியம் இரிக்கி சொல்லிப் போட்டுக்குளற. இல்லையெண்டா குளறிப் போட்டுச்சொல்ல. அண்ண நம்மள படைச்ச அண்டவனுக்குத் தான் அண்ண நாமபடுற கடயாட்டம் தெரியும். நாமளும் பட்டுத் தேற வேணுமெண்டுதான் அந்தப் பெருமானும் நினைக்காரு போல.

இங்க- மட்டக்களப்பில எண்டா இனி இல்லெண்ட செக்கிங் அண்ண. கோட்ட முனப் பாலத்தால, வலையிறவுப் பாலத்தால டவுணுக்குள்ள வாறண்டா இங்கிலாந்துக்குப் போயித்து வந்திரலாம் அண்ண. கோட்ட முனப் பாலத்தில சயிக்கிள கம்பியால தட்டிற தட்டில டிங்....டிங்....டொங்...... அண்ண.

சயிக்கிள் குளாய்குள்ள குண்டு கிண்டு பூட்டியிருந்தா- கம்பியால தட்டேய்க்க டக்டிக் டோவாம் அண்ண. இப்பிடித்தான் அண்ண நம்மட சீவியம் போகுது.



# குமுறுகிறார் ஒரு தொலைக்காட்சி நேயர்

இலங்கையில் 80களில் இருந்ததோ ஒன்றோ இரண்டோ தொலைக்காட்சி அலைவரிசைகள். ஆனால் இன்றோ இது ஒன்பதாகப் பெருகிவிட்டது. ஆனால் இவ்வலைவரிசைகளில் தமிழுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த விடயம்தான்.

'ரூபவாஹினி'யைப் பொறுத்தமட்டில் ஒரு தேசியத்தொலைக் காட்சி. 90களில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட தற்போது குறைத்துக் கொண்டுள்ளது. புதிதாக நிகழ்ச்சிகள் தயாரிப்பதாகவே தெரியவில்லை. அப்படித்தயாரிப்பினும் அவை 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை'யாகவே விளங்குகின்றன. இலங்கையில் மிகத் திறமை படைத்த கலைஞர்களைப் பயன்படுத்தாது அக்கரைப்பச்சைகளான இறக்குமதிகளை ஏன் நம்பியிருக்க வேண்டும்?

சுயாதீனத்தொலைக்காட்சி ஓரளவேனும் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்து வந்துள்ளது. எனினும் 'வண்ணக் கோலங்கள்' என்ற நிகழ்சி நிறுத்தப்பட்டமை மனக்கிலேசத்தை உண்டுபண்ணியுள்ளது. இது தவிர, தமிழ் பாடல் நிகழ்ச்சிகள் அவற்றைத் தொகுப்பவருக்கும் அல்லது தெரிவுசெய்பவருக்கும் இன்றைய மக்களின் இரசனைகளுக்கும் இடையான மிகுந்த இடை வெளியினைக்காட்டுகிறது. 'நெஞ்சை விட்டகலா ஜனரஞ்சகப் பாடல்' என்றும் கூறிக்கொண்டு மக்கள் விரும்பாத கேட்டறியா பாடல்களை காண்பிக்கும் போது நகைப்புக்கிடமாய் உள்ளது. கேட்போரையெல்லாம் இலயிக்கச்செய்யக் கூடிய பல பாடல்கள் இன்று தமிழில் இருக்கின்ற போதும், தமிழ் தெரிந்தவர்களே தரமற்ற பாடல்களை ஒளிபரப்புவது கவலைக்குரியது.

இந்திப்படங்களைவிட இன்று தமிழ்ப் படங்கள் பல்வேறு வகையிலும் தர முயர்ந்து விட்டன என இந்திய திரைப்பட ஆய்வாளர்களே கூறுகின்றனர். 'இந்தியன்' 'குருதிப்புனல்' போன்றன இதற்குச் சான்று. ஆனால் இங்கு காட்டப்படுவதோ மிகவும் தரம் தாழ்ந்த படங்கள்.

கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன பாடல்களை பெரும்பாலும் ஒளிபரப்பும் ரி.என்.எல். ஜெயின் ரீவியில் 6 மணிக்கு தமிழ் அலைவரிசை ஆரம்பிக்கும்போது இடைநிறுத்துவது மனக்கவலையை உண்டு பண்ணுகிறது.

எம்.ரீ.வி வெள்ளிக்கிழமைகளில் அரை மணிநேரம் தமிழ் பேசுவது அதன் 'சிறப்பியல்பு.'

ஆக மொத்தத்தில் அலைவரிசைகள் அனைத்துமே தமிழ் மக்களின் மனக் கோட்டைகளை மண்ணாக்கி, அவர்களின் சின்னச்சின்ன எதிர்பார்புகளைக்கூட சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன.

வி.செல்வரஞ்சன்., கொழும்பு-06.

## ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் கவலை

அரச ஊழியர்களுக்கு அரசினால் கடந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய-இருபத்தைந்து சத வீத ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் இப்பகுதி அரச ஊழியர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டு இன்று அது பழைய கதையாகிவிட்டது. ஆனால் மட்/கல்வித்திணைக்கள ஆசிரியர்மார்களுக்கும், பல சிற்றூழியர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படவில்லை. ஒன்பது மாத காலத்திற்கு வழங்கப்படவேண்டிய இக்கொடுப்பனவுகள் ஆக மூன்று மாதத்திற்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

பணம் இல்லாதமையினாலேயே வழங்க முடியவில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே இது தொடர்பான அதிகாரிகள் கூடிய விரைவில் இக் கொடுப்பனவுகளை வழங்க முன்வரவேண்டும் என்று வேண்டுகிறேன். கல்லடிமூர்த்தி, மட்டக்காப்பு.

# தீ விழுங்கிய பேருந்துகள்

(அம்பாறை மாவட்ட நிருபர்)



மக்கள் மயப்படுத்தப்பட்ட கல்முனை பஸ்டிப்போவுக்குள் இரவு வேளையில் புகுந்த (31.05.1996 இரவு) ஆயுதம் தாங்கிய புலிகள் அங்கு நிறுத்திவைக்கப் பட்டிருந்த பத்து பஸ்களை தீயிட்டுக் கொளுத்தினர்.

மொத்தமாக சுமார் இரண்டு கோடிரூபா அளவில் இந்த தீவைப்பு சம்பவத்தால் டிப்போவுக்கு நஷ்டமேற்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பஸ்வண்டிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமையால் பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பஸ் பிரயாணிகளும் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளனர்.

தீயிட்டுக் கொளுத்தப் பட்டதால் முற்றாக எரிந்து நாசமான பஸ் வண்டிகள் சிலவற்றைப் படத்தில் காணக.


விளம்பரப் பகுதி



**கலை அலங்கார வகுப்புக்கள்**

- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கை நெறி

**ஆரம்பம்: 23.06.96**

FASNAZ BEAUTY SALON

இல. 142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06.
தொலைபேசி:589457

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

முதற்தர பாதணி விநியோக ஸ்தாபனமொன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. பிணை (SECURITY) அவசியம். மிகவும் வசீகரமான தரகுகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

உடன் விண்ணப்பிக்கவும்:-

சீட்டி ஷூ கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்,
129, காலி வீதி, பள்ளி-முல்லை,
பாணந்துறை.

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S. மணி**

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

**வெளிவந்துவிட்டது...**

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7,8,9,10,11
கல்வி மஞ்சரி
O/L வினாவிடை
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

BRIGHT BOOK CENTRE
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்தியிரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்.)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஜூன் 19 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax No. 436439 ஜூலை 4,5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஜூலை 7,8,9 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

## சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை

### 1996 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி

**கற்கையின் போதே வருவாய் பெறலாம்!**

**திருமலையில் நேர்காணல் தேர்வும் கருத்தரங்கும் (A SEMINAR AN INTERVIEW AT TRINCOMALEE)**

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பாடநெறிகளுக்காக சுவிட்சர்லாந்திலுள்ள ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(1) உணவு மற்றும் விடுதிகள் சிற்றுண்டிச்சாலைகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN FOOD & BEVERAGE MANAGEMENT (1YEAR COURSE)
(2) அறைகளைக் கொண்ட கட்டிட பிரிவுகளுக்கான முகாமைத்துவம். (1 வருடம்)
CERTIFICATE IN ROOMS DIVISION MANAGEMENT (1YEAR COURSE)
(3) ஹோட்டலை வழிநடத்துவதற்கான முகாமைத்துவம். (2வருடம்)
DIPLOMA IN HOTEL OPERATIONAL MANAGEMENT (2YEAR COURSE)
(4) உயர்முகாமைத்துவத்திற்கான, உல்லாச பிரயாணத்திற்கான முகாமைத்துவ டிப்ளோமா. (3 வருடம்)
HIGHER DIPLOMA IN HOTEL MANAGEMENT & TOURISM (3YEAR COURSE)

**தகைமைகள்:** க.பொ.த (சா.த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம்-17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறை பயிற்சிக்காலத்தின் போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூபா. 4,70,000 சேமிக்கலாம்.

முக்கிய குறிப்பு: 1996 ஜூன் 23ம் திகதி அன்று திருகோணமலை நகரசபைக் கட்டிட மகாநாட்டு மண்டபத்தில் காலை 9.00 முதல் பி.ப. 2.00 மணி வரையான நேரத்தில், சுவிற்சர்லாந்து ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலைய இலங்கைப் பிரதிநிதியால் கருத்தரங்கமும் நேர்காணல் தேர்வும் மேற்கொள்ளப்படும்.

திருகோணமலை மற்றும் அதனைச் சூழவுள்ள இடங்களில் உள்ள மாணவர்களும் பெற்றோர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பயன் பெறுங்கள். மாணவர்கள் தங்களது தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் நற்சான்றிதழ்களைத் தவறாது எடுத்து வரவும். நேர்காணல் தேர்வில் தேர்வுபெற்றுச் சுவிற்சர்லாந்து செல்ல இப்போதே தயாராகுங்கள்.

**தளுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்**
LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்
கொழும்பு-11.
தொ.பே. 320139
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)

Advt.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# எதிர்க்கட்சி முகாமில் அதிரடித் திட்டங்கள்

-நாரதர்-



# ஒருகையில் ஆயுதம்-மறுகையில் வலை

ஜனாதிபதி சந்திரிக்கா தனது தலைமைத்துவத்தின் ஆளுமையை நிரூபித்துக் காட்டுவதற்கு இரு முனைகளில் போராட வேண்டியிருக்கிறது. ஒரு முனை, புலிகளின் சவால்கள், மறுமுனை, தென்னிலங்கையில் உள்ள அரசியல் எதிரிகள்.

கடந்த 17 வருடங்களாக ஐ.தே.கட்சி செய்யமுடியாத சாதனையென்று, வடபுலப் போர்முனையில் பெற்றுள்ள வெற்றிகளை அரசாங்கம் பிரசாரம் செய்கிறது.

யுத்தம் புலிகளுக்கு எதிரானது என்று கூறப்பட்டாலும், சாதனை பற்றிய விளக்கம் ஐ.தே.கட்சிக்கும் அடியாகும் வகையில் தான் சொல்லப்படுகிறது.

இராணுவரீதியில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை, அரசியல் ரீதியில் பிரதான எதிர்க்கட்சிக்கு எதிராகவும் பயன்படுத்திக்கொள்வது வசதியான தந்திரம்தான். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்.

தென்னிலங்கை அரசியல் ஏதோ ஒரு வகையில் புலிகளை மையப்படுத்தித் தான் சுழன்று கொண்டிருக்கிறது.

வடபுலத்தில் படை நடவடிக்கைகளுக்கு புலிகளிடமிருந்து பதிலடி கிடைக்கும் என்று எதிர்பார்த்து காதுகளை தீட்டிக்கொண்டு காத்திருந்தது ஐ.தே.கட்சி தலைமை.

யாழ் குடாநாடு முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டில் வரப்போவதில்லை என்று ஐ.தே.கட்சி நினைத்திருந்தது. புலிகளிடம் அடிவாங்கிப் படையினர் திரும்பினால், அதனைவைத்து அரசாங்கத்தை ஒரு பிடி பிடித்துவிடலாம் என்பது தான் ஐ.தே.கட்சி போட்ட கணக்கு.

ஆனால், வடபுலப் போர்முனையில் ஐ.தே.கட்சி விரும்பக்கூடிய காட்சி மாற்றம் உடனடியாக ஏற்படக்கூடிய சாத்தியங்கள் தென்படவில்லை.

எதிர்கால விளைவுகள் எவ்வாறு இருப்பினும், யாழ்-குடாநாட்டை புலிகளிடம் இருந்து கைப்பற்றிக்கொண்டமை இராணுவரீதியில் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள பாரிய சாதகம்தான்.

பதினேழு வருடங்களாக அதனைச் செய்ய முடியாமல் போனது ஏன்? என்ற கேள்விக்கு பதில் சொல்ல ஐ.தே.கட்சி திணறவேண்டியிருக்கும்.

எனவே-வடபுலப் போர்முனை நிலவரத்தை நம்பி, தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக காத்திருப்பதில் அர்த்தமில்லையென்று ஐ.தே.கட்சி நினைக்கத் தொடங்கிவிட்டது.

அரசாங்கத்தை அடிக்க புலிகள் தரும் பொல்லுக்காக காத்திருப்பதைவிட, தாமே பொல்லுகளைத் தேடத் தொடங்கிவிட்டனர் ஐ.தே.கட்சியினர்.

ஆளும் கட்சியையும், எதிர்க்கட்சியையும் பொறுத்தவரை பிரபாகரன் ஒரே நேரத்தில் நண்பனாகவும் இருக்கிறார். எதிரியாகவும் இருக்கிறார்.

அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கும் தாக்குதல்களை புலிகள் தொடுக்கும் போது, எதிர்க்கட்சிக்கு பிரபாகரன் நண்பர்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் வெற்றிபெற்று, அதனை ஆளும்கட்சி தனது சாதனையாகச் சொல்லி அரசியல் லாபத்தை அறுவடைசெய்யும்போது ஆளும்கட்சிக்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்பவராகிறார் பிரபாகரன்.

தற்போதைய நிலையில் வடபுலப் போர்முனையில் தமது திட்டம் என்ன வென்று பிரபாகரன் ஒரு இரகசிய செய்தி கொடுத்தால்கூட எதிர்க்கட்சிக்கு ஆறுதலாக இருக்கும்.

புலிகள் தாக்குவார்களா? ஏன் பின் வாங்கினார்கள்? என்ன செய்யப்போகிறார்களாம் என்றெல்லாம் ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகர்கள் தமக்கு தெரிந்த தமிழ் கட்சி பிரமுகர்களிடம் கேட்டு துளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைக்கு யாழ்-குடாநாட்டில் தாம் எதிர்பார்க்கும் மாற்றம் ஏற்படாது என்று தெரிந்தபின்னர்தான் ஐ.தே.கட்சி புதிய முயற்சிகளில் ஈடுபடத்தொடங்கியுள்ளது.

ஆனால், புதிய முயற்சிகளும் யுத்தத்தையும், இனப்பிரச்சனையையும் சார்ந்ததாகவே இருக்கின்றன.

யுத்தத்தில் பெறும் வெற்றிகளை வைத்து அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளை ஓரம்கட்ட நினைக்கிறது.

அதே யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை முன்வைத்து அரசாங்கத்தை ஒரு உலுப்பு உலுக்க எதிர்க்கட்சி நினைக்கிறது.

பாண் விலை, மாவிலை, பால்மாவின் விலைகளை குறைப்பது என்பதுதான் கடந்த பாராளுமன்ற தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும் பொதுஜன முன்னணியின் பிரதான வாக்குறுதி.

வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய நிதி பலம் அரசாங்கத்திடம் இல்லை.

போரையும் நடத்திக்கொண்டு, பொருளாதார ரீதியில் மக்களைக் கவரும் திட்டங்களையும் நிறைவேற்றுவது இந்தநாட்டைப் பொறுத்தவரையில் குருவியின் தலையில் பனம்பழத்தை வைப்பதுமாதிரியாகிவிடும்.

போரா? பொருளாதார திட்டங்களா? இரண்டில் ஒன்றைத்தான் தெரிவுசெய்தாக வேண்டும்.

முதலாவதுதான் அரசின் தெரிவு. எனவே-பொருளாதார நெருக்கடி தொடரவே செய்யும்.

யுத்தத்தை மக்களைக் கவரும் மந்திர நடவடிக்கையாக்கிக் கொள்வதன் மூலமே, யுத்தத்தில் வெல்ல வேண்டுமானால், சில சுமைகளை தாங்கியே ஆகவேண்டும் என்ற மனநிலையை மக்களிடம் ஏற்படுத்தலாம். அரசாங்கத்திற்கு உள்ள ஒரே வழி அதுதான்.

ஆனால், மக்களை நேரடியாகப் பாதிக்கும் நெருக்கடிகளின்போது, மந்திரங்கள் பயனற்று போவதும் உண்டு.

மின்சார சபையினரின் வேலை நிறுத்தத்தின் போது, அதனை யுத்தத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கை என்று சித்தரித்தது அரசாங்கம்.

எனினும், அரசாங்கம் அதனை புத்திசாலித்தனமாக அணுகியிருக்கலாம். வேலை நிறுத்தம் ஏற்படாமல் தடுத்திருக்கலாம் என்ற கருத்தும் மக்களிடம் ஏற்படவே செய்தது. மின்சார சபையினரின் சில அதிரடி நடவடிக்கைகளில் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டதால், அந்தக் கருத்து அரசாங்கத்தை பெரியளவுக்கு பாதிக்கவில்லை.

எதிர்காலத்தில் வேறு துறைகளில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு, நெருக்கடி நேரடியாக மக்களைப் பாதித்தால் அரசாங்கம் தனது யுத்த வெற்றிகளைச் சொல்லி சமாளிக்கமுடியாமல் போகலாம்.

மின்சார சபை வேலை நிறுத்தம் முடிவடைந்தபின்னர் அரச சார்பு அமைப்புக்கள் மேற்கொள்ளும் பிரசாரங்கள் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் முயற்சிகள் போல இருக்கின்றன.

மின்சார சபை வேலை நிறுத்தக்காரர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக கூறும் சுவரொட்டிகள் தெற்கில் காணப்பட்டன.

யானையும், புலியும் பின்னால் நின்று தூண்டிவிட்டதாக அரச சார்பு ஆர்ப்பாட்டக் காரர்கள் கோஷம் போட்டனர்.

தமது வாதத்திற்கு நியாயம் கற்பிக்க, அரச சார்பு அமைப்புக்கள் சொல்லும் காரணம் சற்று வேடிக்கையாக இருக்கிறது.

மின்சார சபையினர் வேலை நிறுத்தம் செய்த நாட்டை இருளில் மூழ்கிய சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்தவில்லை. எங்கும் குண்டு வெடிக்கவில்லை. அப்படி குண்டு வெடித்திருந்தால் மின்சார சபையினருக்கு கெட்ட பெயர் ஏற்படும் என்று புலிகள் கையைக் கட்டிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். எனவே-தொடர்பும் கூட்டுச் சதியும் இருக்கிறது. அதுதான் அவர்கள் கூறும் நியாயம்.

புலிகள் குண்டு வைத்திருந்தால் இதே ஆட்கள் வேறு விதமாகக் கூறியிருப்பார்கள்.

ஆட்சியைக் கவிழ்க சதி. மின்சாரத்தை நிறுத்தி புலிகளுக்கு வசதி செய்து கொடுக்கப் பட்டது என்றெல்லாம் பேசியிருப்பார்கள்.

நல்லதொரு வாய்ப்பை நழுவவிட்டு விட்டோம் என்று புலிகளே கவலைப்படுமளவுக்கு தெற்கில் சிலரது பிரசாரம் அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் தமக்கெதிரான அரசியல் எதிரிகளின் நடவடிக்கைகளை புலிகளுக்கு எதிரான வெறுப்பை பயன்படுத்தி வெற்றிகொள்ள ஆளும்கட்சி நினைக்கிறது.

புலிகள் வீழ்த்தப்பட்டே தீரவேண்டும் என்று பிரசாரத்திற்கு வலுவூட்டினால்தான், யுத்த காலகட்டத்தில் ஏற்படும் விலைவாசி உயர்வு போன்றவை ஒரு பொருட்டல்ல என்று மனப்போக்கையும் ஏற்படுத்த முடியும்.

அவ்வாறு செய்ய வேண்டுமானால் தொடர்ந்து ஒரே விதமான பிரசாரத்தில் ஈடுபடமுடியாமல் போகலாம். புலிகளுக்கு எதிரான நடவடிக்கை இன கௌரவத்தின் வெளிப்பாடு என்றெல்லாம் வெளிப்படையாகவே பேசவேண்டிய கட்டத்துக்கும் செல்ல வேண்டி வரலாம்.

புலிகளின் வீழ்ச்சி எல்லாளன்-துட்டகைமுனு யுத்தத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படும் நிலைகூட தோன்றலாம்.

யுத்த வெற்றி தவிர, பிரதான எதிர்க்கட்சியை ஓரம்கட்ட வேறு துருப்புச்சீட்டு இல்லாதபோது, யுத்த வெற்றியை எழுச்சியாக்கி, அதனை வாக்குகளாக்கும் அரசியல் நிர்ப்பந்தம் ஆளும்கட்சிக்கு ஏற்படவே செய்யும்.

இவற்றையெல்லாம் கணக்குப் போட்டு பார்த்துவிட்டுத்தான், ஆளும் கட்சியை முந்திக்கொள்ள தனது முதலாவது காயை நகர்த்தியுள்ளது ஐ.தே.கட்சி.

ஒற்றையாட்சிக்கே ஆதரவு. ஒற்றையாட்சியை மாற்றுவது நாட்டின் பிரிவினைக்கு வழி செய்துவிடும். என்று பேசத்தொடங்கி விட்டது ஐ.தே.கட்சி.

அதன்மூலம் பாராளுமன்ற தெரிவுக் குழுவை பயனற்றதாக்கிவிட்டது பிரதான எதிர்க்கட்சி.

பிராந்தியங்களின் ஒன்றியம் என்று இலங்கையைக் குறிப்பிட்டு, பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பங்கிட்டுக் கொடுப்பதுதான் அரசின் தீர்வு திட்ட யோசனையின் அடிப்படை அம்சம்.

அந்த அடிப்படை அம்சத்தையே பிரதான எதிர்க்கட்சி என்று நிராகரித்ததோ, அன்றே அந்த நிமிடமே பாராளுமன்ற தெரிவுக்குழு பயனற்றுப் போய்விட்டது.

புலிகளை வெற்றி கொண்டுவிட்டோம் என்று அரசாங்கம் பெருமையாக சொல்லிக் கொள்ள முடியாமல் தடுக்க, எதிர்க்கட்சிக்கு ஒரு ஆயுதம் கிடைத்திருக்கிறது. அதுதான் ஒற்றையாட்சி. ஒற்றையாட்சி முறையை மாற்றுவது நாட்டை பிரிப்பதற்கு சமன் என்று உரத்துப் பேசப் போகிறது பிரதான எதிர்க்கட்சி. இந்த விடயத்தில் பிரபல இனவாதிகளது பூரண ஒத்துழைப்பும் கிடைக்கும்.

"புலிகளை வென்றது சரிதான், நாட்டை பிரித்துக் கொடுக்கவன்றோ முயல்கிறார்கள். நாம் அதனை அனுமதியோம். நாம்தான் நாட்டின் காவலர்கள்." என்று சொல்லி, ஜனாதிபதி சந்திரிக்காவை குறிவைத்து ஒற்றையாட்சி ஆயுதம் பயன்படுத்தப்படும்.

புலிகளை யுத்தத்தில் முறியடித்த சாதனையை படையினரின் சாதனையாகவும், அதனை ஜனாதிபதி சந்திரிக்கா விரயமாக்கப் போகிறார் என்றும் மூக்கால் அழுவதுதான் இனி பிரதான எதிர்க்கட்சியின் வேலையாக இருக்கும்.

அதன்மூலம் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆளுமையை சேதப்படுத்திக்கொண்டு, தென்னிலங்கையில் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வேலை நிறத்தங்களை தூண்டிவிடும் திட்டம் தற்போதே தயாராகிவருகிறது.

உடனடியாக ஒரு பொதுத்தேர்தலை சந்திக்க ஆளும் கட்சியும் தயாராக இல்லை. பிரதான எதிர்க்கட்சியும் தயாராக இல்லை.

தற்போது ஒரு தேர்தலைச் சந்தித்தால் வாக்காளர்களின் தீர்ப்பு எப்படி இருக்கும் என்பது இரு தரப்புக்கும் புதிரான விஷயமாக இருக்கிறது. உறுதியான கணிப்புக்கு வரமுடியாமல் தடுமாறுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு மாற்றான தலைவராக ரணில் மக்களிடம் செல்வாக்குப் பெறவில்லை. ரணிலின் செல்வாக்கு வளர்வதைவிட, ஜனாதிபதி சந்திரிக்காவின் செல்வாக்கு தேய்வதை நம்பித்தான் ஐ.தே.கட்சி காத்திருக்க வேண்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் தனியான பெரும்பான்மை பலம் இல்லாதபோதும், பொது ஜன முன்னணி அரசாங்கம் ஆட்டம் காணக்கூடிய பாராளுமன்ற நெருக்கடி எதுவும் ஏற்படவில்லை.

பொதுஜன முன்னணிக்குள் உள்ள கட்சிகள் மத்தியில் தேர்தலின்போது காணப்பட்ட தேன் நிலவு ரக ஒற்றுமை இப்போது இல்லை. ஒரே வீட்டில் இருந்துகொண்டு மனக் கசப்புகளோடு வாழும் தம்பதிகள் போலவே இருக்கின்றன. ஆனால், உறவை அவசரப்பட்டு கத்தரிக்க விரும்பவில்லை. ஏனெனில் ஆட்சி போய்விட்டால் மீண்டும் இப்படியொரு சந்தர்ப்பம் வராது. எதிர்க்கட்சி வரிசையில் கூட இடம் கிடைக்குமா என்பது இடதுசாரிகளைப் பொறுத்த வரை சந்தேகம்தான்.

எனவே-உப்பில்லையோ, புளியில்லையோ பரவாயில்லை, கிடைத்த விருந்தை வைத்துக்கொண்டு ஐந்து வருடத்தை கடந்து விடலாமே என்பது அமைச்சர் அணிக்குள் உள்ள அதிருப்தியாளர்களது எண்ணம்.

ஆனால், சிறிமணி அத்துலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு நேர் எதிராக இருக்கிறது.

ஐக்கிய தேசியக்கட்சிதான் அவர்களது பிறந்த வீடு. பொதுஜன முன்னணி புகுந்தவீடுதான்.

புகுந்தவீட்டில் கவனிப்பு சரியில்லை. கௌரவம் கிடைக்கவில்லை என்று நினைக்கத் தொடங்கிய உடனேயே அவர்களுக்கு பிறந்த வீட்டின் நினைப்பு வரத்தொடங்கிவிட்டது.

பிறந்த வீடு வரவேற்கத் தயாராக இருக்கிறது. ஆனால் ஒரு நல்ல முகூர்த்தத்தில் திரும்ப வந்தால் நல்லது என்று சொல்லிவைத்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஆளும் அணியின் பலத்தை ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் தோற்கடிக்கும் அழகான கனவு ரணிலிடம் இருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஆளும் அணியில் ஒரு குறிப்பிட்ட தொகை எம்.பிகளை இழுத்து, அரசாங்கத்தை தோற்கடித்து விட்டால், ஐ.தே.கட்சிதான் ஆட்சிக்கு வரவேண்டியிருக்கும்.

அந்த நேரத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் முரண்பாடு வெடிக்கலாம். அதற்கும் ஒரு மாற்று ஏற்பாடு இருக்கிறது.

முன்னர் பிரேமதாசாமீது கொண்டு வந்ததுபோல ஜனாதிபதிமீது தமக்கு நம்பிக்கை இல்லை என்று எம்.பிகளின் கையொப்பம் பெற்று பிரேரணை கொண்டு வரலாம்.

தேர்தலை சந்திப்பதைவிட, பொது ஜன முன்னணியால் ஆட்சி நடத்த முடியவில்லை என்று காட்டுவதைத்தான் ஐ.தே.கட்சி விரும்புகிறது. காரணம், ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆளுமையை சேதப்படுத்தாமல் ஒரு தேர்தலை துணிந்து சந்திக்க அவர்கள் தயாராக இல்லை.

ஆக, ஐக்கிய தேசியக் கட்சி ஒரு கையில் ஒற்றையாட்சி முறைக்கு ஆதரவு என்ற ஆயுதத்தை வைத்திருக்கிறது. அது, யுத்த வெற்றிகள்மூலம் அரசாங்கம் பெறும் இலாபங்களை சேதப்படுத்த.

மற்றொரு கையில் வலை வைத்திருக்கிறது. அது, ஆளும் அணி எம்.பிகளை இழுக்க.

கூட இருந்தே மெல்ல மெல்ல குழி வெட்டும் பொறுப்பு சிறிமணி அணியினருக்கு.

ஆனால், சிறிமணி அணியினர் தவிர பொது ஜன முன்னணியின் ஏனைய எம்.பிகள் பலர் ஐ.தே.கட்சியை நம்பத் தயாராக இல்லை. தமக்கு அங்கே போதியளவு மரியாதை கிடைக்காது என்று நினைக்கின்றனர். அதுதவிர ஐ.தே. கட்சிக்கு எதிரான அரசியலில் ஊறி வளர்ந்தவர்கள் தங்கள் முகாமை மாற்றிக் கொள்வதும் சுலபமல்ல.

என்றாலும், தனது ஆயுதத்தோடும், வலையோடும் சுழியோடிக் கொண்டிருக்கிறது ஐ.தே.கட்சி.

# அதிரடி அய்யாத்துரை



மலைப்பகுதி தனித்துவ தலைவர் தங்களை பயன்படுத்திவிட்டு, கைகழுவி விட்டதாக சங்கங்களின் வட்டாரங்கள் முணு முணுக்கின்றன. இப்படி நடக்கும் எண்டுதெரிந்துதான் நாங்களாகவே கழன்றுகொண்டோம் என்று 'கொலரைத்' தூக்கிவிடுகினமாம் சந்திரமான தலைவரின் கட்சிக்காரர்கள். மூச்சுக்கு மூச்சு ஒற்றுமை முழக்கம், பேச்சென்று வந்தால் மட்டும் தனியாகப் போய்விடுகினம். நாங்கள் எப்பதான் ஒன்றுபடுகிறதாம் என்று மூக்கைச் சிந்தினார் ஒரு சங்கத்தின் முக்கிய பிரதிநிதி. நான் என்ன பதிலைச் சொல்ல?

கூட்டான கட்சியினர் மேலிடத்தை சந்தித்தது தெரியும். என்ன பேசினார்கள் என்று ஏன் சொல்லவில்லை தெரியுமோ? கையோடு கொண்டுபோன சிபாரிசுகளிற்கு உடனே ஓ.கே கிடைத்துவிட்டதாம். தீர்வு சமாச்சாரத்தில் குறுக்கே நிற்கமாட்டோம் என்று உத்தரவாதம் கொடுத்ததாகவும் ஒரு தகவல். இதையெல்லாம் எப்படி வெளியே சொல்லுறது. அது சரியில்லைத்தானே?

மீன்பாடும் தேனாட்டில் மக்கள்படும்பாடு சொல்லிமாளாது. மீண்டும் தடி எடுத்துள்ள இயக்கம் ஒன்று தனியான படிவங்கள் விநியோகித்து கட்டாய நிதி வசூலில் கொள்கை உறுதியைக் காட்டி வருகிறதாம். நீண்டகாலமாக தேனகத்தில் தமது அதிரடி செயற்பாடுகள் இல்லாமலிருந்ததுக்கும் சேர்த்து வட்டியும், முதலுமாக நிதி சேர்க்கினமாம். இந்திய அமைதிப்படைக்கால நடவடிக்கைகளைப்போல, மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவது நியாயமோ?

ஐந்து கட்சிகளும் தெரிவுக்குழுமுன் உறுதியாகப் பேசியதுகண்டு, பெரும்பான்மை இன கட்சி பிரதிநிதிகளுக்கு கடும் வியப்பு. ஒற்றையாட்சி முறையை தமிழ் கட்சி பிரதிநிதிகள் சாடியபோது நீதிக்கு பொறுப்பானவர் முகத்தில் ஒரு திருப்தி தெரிந்ததாம். அடிக்கடி பச்சைக் கட்சிப் பிரதிநிதிகள் முகத்தை அவர் பார்த்துக்கொண்டாராம். அந்த முகங்களில் ஈயாடவில்லையாம் போங்கோ.

பச்சைக்கட்சியின் கௌரவத் தலைவராக முன்பு இருந்த மலைப் பகுதி மூஸ்லிம் தலைவர் மனமுடைந்து போயிருக்கிறார். பெரிய பெரிய யானைகள்கூட அவர் பேச்சை செவிமடுத்துக் கேட்டவைதானே. இப்ப முயல்குட்டிகள்கூட அவரைக் கணக்கில் எடுப்பதில்லையாம். சமீபத்தில் நடந்த கட்சிக் கூட்டத்தில் பலத்த சர்ச்சையாம். சிறுபான்மையோரின் வாக்கு இல்லாமல் கட்சி தேர்தலில் வெல்லாது எண்டு சொல்லி சத்தம் போட்டாராம். செவிடன் காதில் ஊதியசங்குதான்.

திருவான மலையின் தங்கமானவர் தனது ஆதரவாளர்களை மனம் கோணாமல் பார்த்துக்கொள்கிறாராம். தொலைபேசி துறையில் 50 பேருக்கு வேலைவாய்ப்பு வாங்கியிருக்கிறார். கிழக்கு சிங்கத்தாரும் குறைவைக்கேல்லை. பட்டியல் கொடுத்து வாங்கிப்போட்டார். அதிகாரத்தரப்போடு பகைமாதிரி காட்டிக்கொண்டாலும், உறவை இறுக்கமாக வைத்திருப்பதில் கூட்டான கட்சி. பிரதிநிதிகள் கெட்டிக்காரர்தான்.

கிழக்கில் தனியாக ஒருகட்சி தொடங்கும் யோசனை சிலருக்கு இருக்கிறதாம். கிழக்கின் தனித்துவக்கட்சி தலைவரின் ஆசீர்வாதம், ஆலோசனை இரண்டும் அதற்கு கிடைக்குமாம். இணைப்பு விவகாரத்தில் ஏற்பட்டுள்ள பிணக்கால்தான் தனித்துவ தலைவர் அப்படி ஒரு யோசனையை சிலருக்குள் பற்றவைத்திருக்கிறாராக்கும்.

தேசிய தொலைக்காட்சியில் தமிழ்பிரிவுக்கு பொறுப்பாக இருப்பவர் பச்சைக் கட்சிக்காலத்தில் தீவிர விசுவாசி. அவரது தாயாரின் மரணச்சடங்குக்கு முன்னாள் அதிகாரமுடையார் 'அன்பு தாசர்' சந்தன மரம் கொடுத்தவர். எல்லாம் சரி, ஆட்சிமாறினதும் தமிழ் பிரிவு தலைவருக்கு நீலக்கட்சிமீது திடீர் பாசம். நீல கட்சி தொழிற்சங்கத்தில் உறுப்பினராகச் சேரப் போட்டாராம் விண்ணப்பம். இழுத்தடித்துவிட்டு உறுப்பினராக்கினார்களாம். பிரதேசவாதம் பார்ப்பதிலும் முன்னணியில் இருக்கிறார் எண்டு தகவல். கவனிக்கப்படவேண்டிய ஆள்தானுங்கோ.

கட்டுப்பாட்டு பகுதியில் ரெண்டு எழுத்தாரின் நடமாட்டம் அதிகரிச்சிருக்கு எண்டுதான் தகவல். ரெண்டு எழுத்தார் பச்சை உடையினர் மாதிரி வருகினம், பச்சையினரோ ரெண்டு எழுத்தார் மாதிரி நாடகத்தந்திரம் செய்கினம். தந்திரங்களைப் பற்றி தமக்கென்ன பாருங்கோ, சனம் அந்தரத்தில் நிற்காமல் இருந்தால் சரி.

சொற்கள் என்றால் என்ன? சொக்கிப் போகும் வகையில் 'மேத்தா' தனது கவிதையில் சொல்லியிருப்பதில் ஒரு துளி.

"உண்மை என்பதுதான்
சொற்களின் கழுத்தில்
சூடப்படும் மாலை!
பொய்யோ-
வாக்கியச் சொற்களின்
தூக்குக்கயிறு."


படிப்பகம்

## கிட்டுவின் மன உறுதி

கிட்டுவுக்கு 'கிரனேட்' வீச மாத்தையா வால் அனுப்பப்பட்டவர் தற்போது கனடா வில் இருப்பதாக ஒரு தகவல்.

கிட்டு உயிர் தப்பியபோதும், கிட்டு வுடன் சென்ற அவரது மெய்க்காவலர் பலியானார். அவரது பெயர் சாந்தாமணி. மன்னார் மாவட்ட தளபதியாக இருந்து பலியான விக்ரருக்கு நெருக்கமானவர் சாந்தாமணி.

யாழ் பொது மருத்துவமனையில் கிட்டுவுக்கு சிகிச்சை செய்த டாக்டர்கள் அவரது மன உறுதியை வியந்து பாராட்டி னார்கள்.

கிட்டுவின்மீதான தாக்குதலை அடுத்து யாழ் மாவட்ட புலிகளின் தளபதி யாக ராதா நியமிக்கப்பட்டார்.

# 82

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அரசியல் தொடர்

### அற்புதன்- எழுதுவது

துறைக்கு பொறுப்பாக கிட்டுவால் நியமிக்கப்பட்டவர். கிட்டுவின் நண்பர். விலகிச் சென்று தற்போது இலண்டனில் இருக்கிறார். இவரை மீண்டும் இயக்கத் தில் சேருமாறு பிரபாகரன் அழைத்

# பொது மருத்துவமனையில் பயங்கரம்




ஷெல் இருக்கிறது. அது முன்னோக்கிச் சென்றுவிட்டு திரும்பிவந்து தாக்கும்!"

கிட்டுமீதான தாக்குதலின் பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமீபமாக விருந்த மாடிவீட்டை தமது பகிரங்க அலு வலகமாக புலிகள் பயன்படுத்தினார்கள்.

அங்கு வைத்து பொதுமக்களை சந்திப்

சிகிச்சைக்குப் பின்னர் செயற்கைக்கால் பொருத்திக்கொண்டு கார் ஓட்டிச்சென்று தனது இயக்க உறுப்பினர்களை ஆச்சரியப் படுத்தினார் கிட்டு.

செயற்கைக் கால் பொருத்தப்பட்ட பின்னர் யாழ் மாவட்ட தளபதியாக கிட்டு மீண்டும் செயற்பட்டிருக்க முடியும். அதனையே

திருந்தார். கில்டன் மறுத்துவிட்டார்.

இன்னொருவர் ஊத்தைரவி. இவர் இயக்கத்தில் இருந்து ஒதுங்கி கொழும் புக்கு சென்றார். இவரால் பாதிக்கப்பட்ட ஏனைய இயக்க உறுப்பினர்களால் கத்தியால் குத்தப்பட்டார். பின்னர் உயிர் தப்பி வெளிநாடு சென்றுவிட்டார்.

# விரக்தியில் ஒதுங்கிய கிட்டுவின் விசுவாசிகள்

விக்ரரின் மரணத்தின்பின்னர் மன்னார் மாவட்ட தளபதியாக இருந்த ராதாவை யாழ் மாவட்ட தளபதியாக நியமித்தார் பிரபாகரன்.

கிட்டு தாக்கப்பட்ட மறுநாள்- ஏப்ரல் 30ம் திகதி (1987) காலையில் யாழ் கோட்டை முகாம்மீது புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினார்கள்.

அதற்கு முன்னர்-ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிடம் இருந்து எடுத்த மோட்டார் களையும், ஷெல்களையும் ஈ.பி.ஆர். எல்.எஃப். உறுப்பினர்களைக் கொண்டே புலிகள் பரிசீலித்துப் பார்த்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் சொந்தத் தயாரிப்பான மோட்டார் ஷெல்கள், மோட்டார் குழாய்களுக் குள்ளேயே வெடித்துவிடும் ஆபத்து இருந்தது.

அதனால் தம்மால் கைது செய்யப் பட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் களை வைத்து அவற்றைப் பரிசீலித்துப் பார்த்தார்கள்.

ஷெல்லை போடுமாறு கூறிவிட்டு புலிகள் இயக்க உறுப்பினர்கள் தூரத்தில் போய் நின்றுவிடுவார்கள்.

அச்சுவேலியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பு ஒரு கிரேனேட் தயாரிப்பு பட்டறையும் வைத்திருந்தது. டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் அந்த கிரனேட் தயாரிப்பு பட்டறை உருவாக்கப் பட்டிருந்தது.

அங்கிருந்த கிரனேட் தயாரிப்பு கருவிகளும் புலிகள் அமைப்பினரால் எடுக்கப்பட்டன.

மோட்டார் ஷெல் தயாரிப்பிலும், கிரனேட் தயாரிப்பிலும் ஈடுபட்ட ஈ.பி. ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களை தாமும் பயன்படுத்திக்கொள்ள கிட்டு நினைத்தார்.

கைது செய்யப்பட்ட உறுப்பினர்களில் அவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரித்தும் பார்த்தனர். தெரிந்து விட்டால் தம்மை ஒரு நாளும் வெளியே விடமாட்டார்கள் என்று நினைத்து யாரும் ஒப்புக் கொள்ள முன்வரவில்லை.

வசாவிளான் இராணுவமுகாமில் இருந்து இராணுவத்தினர் வெளியேற முற்பட்ட போது, புலிகள் அமைப்பினர் பதில் தாக்குதல் தொடுத்தனர். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களை தம்மோடு அழைத்துச் சென்று மோட்டார் ஷெல் தாக்குதலை நடத்துமாறு உத்தரவிட்டனர்.

### பதிலடியாக படுகோரம்

ஏப்ரல் 30ம் திகதியன்று யாழ் கோட்டை முகாம்மீதும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் சுபாஷ் கபேயின் அருகில் இருந்தே ஷெல் தாக்கு தல் தொடுக்கப்பட்டது. ஷெல் தாக்குதல் தம்மை நோக்கி நடத்தப்பட்டதும், கோட்டை இராணுவமுகாமில் இருந்த இராணுவத் தினரும் பதிலடியாக ஷெல் தாக்குதலை ஆரம்பித்தனர்.

கோட்டை இராணுவ முகாமில் இருந்து சரமாரியாக ஷெல்கள் சீறி யெழுந்து வந்து யாழ் நகரில் விழத் தொடங்கின.

யாழ்ப்பாணம் பொதுமருத்துவனை யின் கூரைகளிலும் ஷெல்கள் வந்து விழுந்தன.

19ம் 20ம் வார்டுகளில் கர்ப்பிணிகள் இருந்தனர். அந்த வார்டு கூரைமீதும் ஷெல் விழுந்தது.

அந்தோ.. பரிதாபம்,

கர்ப்பிணிகள் எட்டுப்பேர் துடிதுடித்து மாண்டுபோனார்கள்.

இரண்டு தாதிமார்கள் படுகாயமடைந் தனர். யாழ் பொதுமருத்துவமனையில்

பார் மாத்தையா. புலிகளின் அமைப்பின் பிரதித் தலைவராக அவர் பொதுமக்கள் மத்தியிலும் பிரபலம் பெறத் தொடங்கியது அக் கட்டத்தில்தான்.

கிட்டு தாக்கப்பட்டபின்னர் புலிகள் அமைப்பினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த

கிட்டுவும் விரும்பி இருந்திருக்கலாம்.

ஆனால், கிட்டு சிகிச்சை முடிந்து திரும்பி வருவதற்கு இடையில் மாத்தையா தனது பிடியை யாழ்ப்பாணத்தில் இறுக்கமாக் கிக் கொண்டார்.

மாத்தையா-கிட்டு பிரச்சனையின்போது

# இறுதித் தாக்குதல்



தொலைத்தொடர்பு நிலையத்தில் கைப்பற்றிய ஆயுதங்களை பிரபாவுக்கு காண்பிக்கிறார் கிட்டு.

தொலைத்தொடர்பு நிலையத்தில் கைப்பற்றிய ஆயுதங்களை பிரபாவுக்கு காண்பிக்கிறார் கிட்டு.

யாழ் மாவட்ட தளபதியாக கிட்டு இருந்த போது அவரது தலைமையில் மேற்கொள்ள பட்ட இறுதித்தாக்குதல் யாழ்-தொலைத்தொடர்பு நிலைய முகாம் மீதான தாக்குதலாகும்.

1987 மார்ச் 23ம் திகதி யாழ்-தொலைத் தொடர்பு நிலைய இராணுவ முகாம்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் நிலையம் கிட்டு தலைமையில் தாக்கப்பட்டபின்னர், யாழ் கோட்டை இராணுவ முகாமுக்கு அருகில் இருந்த தொலைத் தொடர்பு நிலையத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர்.

அம் முகாம்மீது தாக்குதல் நடத்த கிட்டு திட்டமிட்டார். தாக்குதல் அணிக்கு தலைமைதாங்கி சென்றவர் ராதா.

புலிகளது தாக்குதல் ஆரம்பமான உடன் இராணுவத்தினர் பின்வாங்கி யாழ் கோட்டை முகாமுக்குள் சென்றுவிட்டனர்.

அவர்கள் விட்டுச் சென்ற ஆயுதங்களை கைப்பற்றியதோடு, இராணுவத்தினர் ஆறு பேரையும் புலிகள் பிடித்துக் கொண்டனர்.

தொலைத் தொடர்பு நிலைய முகாம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

கிட்டுவின் பெயர் மேலும் பிரபல மடைந்தது.

1986 நவம்பரில் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வந்த கப்டன் கொத்தலா வலயுடன் கிட்டு பேச்சு நடத்தினார். தம்மிடமிருந்த இரண்டு இராணுவத்தின ரையும் புலிகள் விடுவித்தனர்.

1987 மார்ச் 23 இல் அதே கோட்டை இராணுவ முகாமின்கீழ் இயங்கிய தொலைத்தொடர்பு நிலைய முகாம் தாக்கப் பட்டது. ஆறு இராணுவத்தினரைப் புலிகள் கைதிகளாக பிடித்தனர்.

இருந்த நோயாளிகள் உயிரைக் கையில் பிடித்தபடி, ஷெல் விழுமோ என்ற பயத்தில் தவித்துக்கொண்டிருந்தனர்.

பொது மருத்துவமனை தாக்கப்பட்ட தும், கர்ப்பிணிகள் கொலைப்பட்டதும் சர்வ தேச ரீதியாகவே பெரும் அதிர்ச்சியை ஏற் படுத்தியது.

### இந்தியா கண்டனம்

யாழ் பொதுமருத்துவமனை சம்பவம் தொடர்பாக இந்தியா கடுமையான கண்டனம் தெரிவித்தது.

கண்டனங்கள் தம்மை நோக்கிப் பாய் வதைக் கண்ட இலங்கை அரசாங்கம் அதிர்ச்சியடைந்தது.

அப்போது தேசிய பாதுகாப்பு அமைச்ச ராக இருந்தவர் லலித் அத்துலத்முதலி. யாழ் பொது மருத்துவமனை சம்பவம் தொடர்பாக அவர் நினைத்திருந்தால் ஒரு விசாரணை நடத்தியிருக்கலாம்; வருத்தம் தெரிவித்திருக்கலாம்.

அவர் என்ன செய்தார் தெரியுமா? "யாழ் பொது மருத்துவ மனைமீது ஷெல் தாக்குதல் நடத்தியது புலிகள் இயக்கத்தினர் தான்" என்று நாகூசாமல் தெரிவித்துவிட்டார்.

பொது மருத்துவமனைமீது விழுந்த ஷெல் யாழ் கோட்டை இராணுவமுகாம் இருந்த திசையில் இருந்தே வந்திருந்தது. அவ்வாறு இருந்தும் லலித் அதனை மறுத் திருந்தார்.

அப்போது இலங்கையில் இந்திய தூது வராக இருந்தவர் ஜே.என்.டிக்ஷித். லலித் அத்துலத் முதலி புலிகளை குற்றம் சாட்டியது தொடர்பாக டிக்ஷித் கேலியாக சொன்ன கருத்து-இது: "புலிகளிடம் ஒரு விசேஷ

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ உறுப்பினர்கள் 70 பேர் கொல்லப்பட்ட செய்தி பல்வேறு வழிகளில் வெளியே தெரியத் தொடங்கியது.

அதனையடுத்து, புலிகளால் கைது செய்யப்பட்ட ஏனைய இயக்க உறுப்பினர் களது பெற்றோர்கள் புலிகளது முகாம்களை நோக்கி படையெடுத்தனர். தமது பிள்ளைகள் உயிரோடு இருக்கிறார்களா என்று தெரிவிக்கு மாறு அழுது ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம் பித்தார்கள்.

தமது தரப்பில் இருவரும், ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பு உறுப்பினர்களான 18 கைதிகளும்தான் பலியானதாக புலிகள் அறி வித்திருந்தனர். ஆனால் பலியானவர்களோ 70 பேர்.

எனவே-புலிகள் அமைப்பினர் ஒரு காரியம் செய்தனர். தமது முகாம்களை தேடிவரும் மக்களுக்கு ஒரு கறுப்பு பலகை யில் பெயர்களை எழுதி, இவர்கள் அனை வரும் நமது முகாமில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர் என்று குறிப்பிட்டிருந்தனர்.

புலிகள் அமைப்பின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபன்தான் அந்த யுக்தியைக் கடைப்பிடிக்கும் யோசனை சொன்னவர்.

### மீண்டும் கிட்டு

யாழ் பொது மருத்துவ மனையில் கிட்டுவை தொடர்ந்துவைத்திருப்பது பாது காப்பல்ல என்று இரகசியமாக வைத்திருந்து சிகிச்சை கொடுக்கப்பட்டது.

கிட்டுவை இந்தியாவுக்கு கொண்டு சென்று சிகிச்சை செய்யப்படுவதாகவும் கதைகள் உலாவின. ஆனால், கிட்டு யாழ்ப் பாணத்தில் இருந்துதான் சிகிச்சை பெற்று வந்தார்.

பிரபாகரன் மாத்தையாவின் பக்கம்தான் சார்பாக இருந்தார்.

கிட்டுவுக்கும் தனது கால்போகக் காரணம் மாத்தையா குழுவினர் என்பது தெரியாமல் இல்லை. ஆனால் இறுதிவரை கிட்டு அதனை வெளியே சொல்லவே இல்லை.

கிட்டுவோடு நெருக்கமாக இருந்த அவரது விசுவாசிகளுக்கும் உண்மை தெரிந் தது. அதனால் அவர்களும் இயக்கத்தில் இருந்து ஒதுங்கிச் சென்றனர்.

இயக்கத்தில் தொடர்ந்து இருந்த கிட்டுவின் விசுவாசிகளும் மாத்தையாவால் ஓரம் கட்டப்பட்டனர். அவர்களில் ஒருவர் ரகீம் என்றழைக்கப்பட்ட கனகரத்தினம்.

இயக்கத்தில் இருந்து வெளியேறிய கிட்டுவின் விசுவாசிகளில் ஒருவர் சிவபரன். மானிப்பாயைச் சேர்ந்தவர். வெளிநாட்டுக்குச் சென்று போதை மருந்து கடத்தலில் ஈடுபடத் தொடங்கினார். தானும் போதை மருந்துக்கு அடிமையானார். இயக்கத்தில் இருந்தபோது தான் செய்த செயல்களை சொல்லி புலம்பத் தொடங்கினார். மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். தற்போது வெளிநாட்டில் இருக்கிறார்.

கிட்டுவின் பாதுகாவலராக இருந்தவர் களில் ஒருவர் கலாநாதன். இயக்கப்பெயர் கலா. கிட்டுவின் நண்பராக இருந்து பின்னர் இயக்கத்தில் சேர்ந்தவர். புங்குடுதீவு பொறுப் பாளராக இருந்தவர். இயக்கத்தில் இருந்து வெளியேறி வெளிநாடு சென்றார். போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு சிறைப்பட்டார். பின்னர் விடுதலையாகி தற்போது அவுஸ்தி ரேலியாவில் இருக்கிறார்.

மற்றொருவர் கில்டன். வல்வெட்டித்

### செம்படை இயக்கம்

புலிகள் இயக்கத்தினர் தம்மால் உரிமை கோரமுடியாத சில நட வடிக்கைகளை 'செம்படை இயக்கம்' என்ற பெயரில் மேற்கொண்டு வந்தனர் என்பதை முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப் பினர்களை யாழ் மனோகரா தியேட்டரின் அருகில் உள்ள வைமன் றோட் முகாமிலும் புலிகள் தடுத்துவைத்திருந் தனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கத் தினர் வைத்திருந்த சிறைகளில் பெரியது வைமன் றோட் சிறைமுகாம்தான்.

அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கண் களில் செம்படை இயக்க பிரசுரங்களும் தட்டுப்பட்டன. அங்குள்ள சுவர்களில் இரத்தக் கறைகள் காணப்பட்டன. சிறிய அறைகள் சிறைச்சாலை ஷெல் கள் மாதிரியே அமைக்கப்பட்டிருந் தன.

தடுத்துவைக்கப்பட்டிருந்த உறுப் பினர்களிடம் புலிகள் அமைப்பினர் "அராஜகம் என்றால் என்ன?" என்று கேட்பார்கள். விளக்கம் சொன்னாலும் அடி. சொல்லாவிட்டாலும் அடி.

புலிகள் அமைப்பினரை 'அராஜக வாதிகள்' என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரசாரம் செய்தது; அதனால்தான் அந்தக் கேள்வி.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒரு வரிடம் அராஜகத்துக்கு விளக்கம் கேட்டு விட்டு, புலிகள் இயக்க உறுப்பினரே தனது விளக்கத்தைச் சொன்னாராம். அவர் சொன்னது இது, "அராஜகம் என்றால் அரசு இல்லாத காலகட்டம் என்றுதானே அர்த்தம். இங்கே நாங்கள் தானே அரசாங்கம். இது எப்படி அராஜகமாகும்?"

### போர் நிறுத்த முயற்சி

1987 சித்திரைப் புத்தாண்டுக்கு போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் அமைச்சர் தொண்டமான். அமைச்சரவை மட்டத் திலும் தனது கோரிக்கையை முன் வைத்தார்.

தொண்டமானின் கோரிக்கையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

ஏப்ரல் 11ம் திகதிமுதல் 20ம் திகதி வரை 9 நாள் போர் நிறுத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கொடுத்தது.

அரசாங்கத்தின் போர்நிறுத்த அறி விப்பை பிரபாகரன் நிராகரித்தார்.

ஏப்ரல் 20ம் திகதிக்கு பின்னர்தான் அரசாங்கத்தின் போர்நிறுத்த அறிவிப்பு தொடர்பாக யோசிக்கப்படும் என்று புலிகள் கூறிவிட்டனர்.

ஷெல் தாக்குதல், விமானத்தாக்குதல் தொடர்பாக இலங்கை அரசுமீது சர்வ தேச கண்டனம் ஏற்பட்டுள்ளது. கண்ட னங்களில் இருந்து தப்பிக்கொள்ளவும், உலகை ஏமாற்றவுமே போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசு முன்வந்துள்ளது என்று புலிகள் கூறினார்கள்.

போர் நிறுத்த முயற்சி முறிவடைந்த அதே வேளையில் கொழும்பில் மிகப்பாரிய தாக்குதல் ஒன்றுக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. (தொடர்ந்துவரும்)




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அலசுவது - இராஜதந்திரி

# சாத்வீகம் பெற்ற அடிக்கு வயது 40

### 1956ம் ஆண்டு ஜூன் 5ந் திகதி

கொழும்பு காலிமுகத்திடலில் ஒருபுறம் சாத்வீகவாதிகள் அமர்ந்திருக்கின்றனர். மறுபுறம் அவர்களது அமைதியான போராட்டத்தை முறியடித்து, அவர்களை விரட்டியடிக்க காடையர் கூட்டம் அணிதிரண்டு நிற்கின்றது.

தமிழுக்கு எத்தகைய இழுக்கும் ஏற்படலாகாது; இந்த நாட்டில் தமிழர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று வாழவேண்டுமென்பதே சாத்வீகமாக 40 வருடங்களுக்கு முன்னர் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகமிருந்த தமிழன்பர்களின் கோரிக்கையாக இருந்தது.

சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வமொழி என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதையடுத்தே அன்று தமிழ் சத்தியாக்கிரகிகள் காலிமுகத்திடலில் அன்றைய பாராளுமன்றக் கட்டிடத்துக்கு எதிரே அமர்ந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சத்தியாக்கிரகம், அஹிம்சைப்போராட்டம் என்பன அன்று பிரபலம் பெற்றிருந்தன. ஏனெனில் இந்திய உபகண்டத்தில் மகாத்மா காந்தியடிகள் இந்திய சுதந்திரப்போராட்டத்தை ஒரு முழுமையான சாத்வீகப்போராட்டமாகவே மேற்கொண்டிருந்தார்.

எனவே அன்று இந்தியாவில் மட்டுமல்ல; உலகம் முழுவதிலுமே காந்திஜீயின் சாத்வீக, சத்தியாக்கிரகப் போராட்டங்கள் பிரபலம் பெற்றிருந்தன.

கத்தியின்றி, இரத்தமின்றி அமைதியாகப் பிரார்த்தனையுடன் உறுதியான உள்ளத்துடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு போராட்டமும் நிச்சயம் வெற்றியடையவே செய்யும் என்பதற்கு காந்தியின் சாத்வீகப்போராட்டம் சிறந்த முன்னுதாரணமாக இருந்தது.

அமெரிக்காவில் கறுப்பர்களின் உரிமைகளுக்காகப் போராடிய டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கூட மகாத்மா காந்திமீது பேரபிமானம் கொண்டிருந்தார்.

டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் வீட்டறையில்கூட மகாத்மாகாந்தியின் உருவப்படமே முக்கிய இடத்தைப்பெற்றிருந்தது.

எனவே சத்தியாக்கிரகம் ஓர் உன்னதமான போராட்டம் என்பதை



அமைதிவழிப் போராட்டம்மீது காடையர் ஏவப்பட்டனர். மிதிபட்டு சட்டையும் இழந்து நிற்கும் மறைந்த தமிழரசுக்கட்சித் தலைவர்களான கு.வன்னியசிங்கம், டாக்டர், ஈ.எம்.வி.நாகநாதன்.

உணர்ந்தவர்களாகவே அன்று தமிழ்த்தலைவர்கள் காலிமுகத்திடலில் கூடி சிங்களம் மட்டுமே சட்டத்துக்கு எதிராக தமது ஆட்சேபத்தை அமைதியாக வெளிப்படுத்தினர்.

அன்று அவர்கள் மோசமான கோஷங்களையோ, அல்லது ஆர்ப்பாட்டங்களையோ நடத்தவில்லை. சிங்களத் தலைவர்களைக்கூட நிந்திக்கவில்லை.

இந்நிலையில் தமிழுக்கோ அல்லது தமிழர்களுக்கோ எவ்விதத்திலும் எத்தகைய சூழ்நிலையிலும் பாதிப்பு எற்படக்கூடாது என்பதே சத்தியாக்கிரகிகளின் வலியுறுத்தலாக இருந்தது.

ஆனால் இந்த அமைதிப்போராட்டத்துக்கு காடையர்களின் பாய்ச்சலே பதிலடியாகக் கிடைத்தது.

அன்று அந்த சாத்வீக சமாதானப் பிரியர்கள்மீது காடையர்கள் கட்டவிழ்த்துவிட்ட காடைத்தனமே, இன்று இலங்கையின் இன உறவுகளில் பாரதூரமான வடுக்களை ஏற்படுத்திவிட்டுள்ளது.

தமிழீழத்தையோ, அல்லது தனிநாட்டையோ சத்தியாக்கிரகிகள் அன்று கோரவில்லை. "தமிழுக்கும் உரிய அந்தஸ்த்தைக் கொடுங்கள். தமிழரையும் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்ற பிரஜைகளாக வாழவிடுங்கள்" என்றே அன்றைய தமிழ்ப்பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நியாயமான, அப்பழுக்கற்ற கோரிக்கைக்கு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சியில் கிடைத்தது அடியும், உதையுமாகவே இருந்தது.

கோப்பாய்கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதர் என்று வர்ணிக்கப்பட்ட டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், அன்று ஓர் இளம் வழக்கறிஞராகவும், பின்னர் இலங்கையின் பிரதம நீதியரசராகவும் உயர்ந்த திரு.எஸ்.சர்வானந்தா ஆகியோர் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகத்தின் போது நையப் புடைக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்களாவர்.

காலிமுகத்திடலை அண்டிய கொழும்பு துறை முகத்திலிருந்து வந்த காடையர் கும்பலே சத்தியாக்கிரகிகளை அன்று தாக்கியிருந்தது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாண அரச அதிபர் அலுவலகத்துக்கு முன்பாகவும் அன்று சத்தியாக்கிரகமிருந்த தமிழர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.

இந்நிலையில் அப்பழுக்கற்ற, நியாயமான தமிழர்களின் கோரிக்கைகளை பேரினவாத சக்திகள் என்றுமே நியாயமான முறையிலும், நீதியாகவும் அணுகியிருக்கவில்லை.



1956 ஜூன் 5. சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகம். அகிம்சையில் நம்பிக்கை.

## வேகமான தீர்வல்ல; விவேகமான தீர்வே தேவை!

அன்று தமிழ்த்தலைவர்கள் முன்வைத்தவற்றை நிதானமாகப் பரிசீலனை செய்து இனவாத நச்சு விதைகளை முளையிலேயே கிள்ளி எறிந்திருந்தால் இலங்கையில் இன்று இவ்வளவு அனர்த்தங்கள் நிகழ்ந்திருக்க முடியாது.

பேரினவாதிகளும், அப்பேரினவாதிகளின் மகுடிக்குக் கட்டுண்ட ஆட்சியாளர்களும் தமது அரசியல் நடிவடிக்கைகளைத் தீர்மானிக்கவும், வழிநடத்தவும் தமிழர் பிரச்சினையையே மையமாகக் கொண்டிருந்தனர்.

1956ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட விஷமத்தனமான மொழிக் கொள்கையின் 40வது ஆண்டைக்குறிக்கும் விதத்தில் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் பலரும் உரையாற்றினார்கள்.

இந்த 40வது ஆண்டு நிறைவு என்பது அன்று இடம்பெற்ற காலிமுகத்திடல் காடைத்தனத்தை மட்டும் குறிக்கவில்லை.

இலங்கையில் இனவாதத்தீயை மூட்டிவிட்ட நடவடிக்கைக்கும், அதனையடுத்து இடம்பெற்ற இனவன்முறைகள், கொடூரங்களுக்கும் 40 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன என்பதே உண்மையாகும்.

இனப்பிரச்னை இன்று பல்வேறு பரிமாணங்களையும் பெற்ற நிலையில் ஒரு நிரந்தரத்தீர்வை வேண்டி நிற்கின்றது.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், இலங்கை-இந்திய ஒப்பந்தம் போன்ற அனைத்து ஒப்பந்தங்களும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணத் தவறியுள்ளன.

தீர்வு என்று கூறி ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் கிழித்தெறியப்பட்டன. அல்லது அமுல்படுத்தப்பட்ட தீர்வுத்திட்டங்கள் முறியடிக்கப்பட்டன.

ஆனால் தற்போது சுமார் நான்கு தசாப்தங்களுக்குப்பின்னர் இறுதியும், முடிவுமான நிரந்தரத்தீர்வொன்று இலங்கை இன்பபிரச்சினைக்குக் கிடைக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

அரசாங்கம் தனது தீர்வு யோசனைகளில் உறுதியாகவே இருக்கின்றது. இந்தவருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்புடன் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் முன்வைக்கப்போவதாக அரசியலமைப்பு, நீதி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் தீர்வு திட்டம் வடக்கு-கிழக்கு மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யக்கூடியதாக இருப்பதே அவசியமானதாகின்றது.

அண்மைக்காலம்வரை எல்.ரி.ரி.ஈ.யினர் யாழ் குடாநாட்டில் விரிவான முறையில் தமது இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரித்திருந்தனர்.

இருந்தபோதிலும், வடக்கு-கிழக்குத் தமிழர்களின் அடிப்படை அரசியல் கோரிக்கை என்பது தொடர்ந்து தீர்க்கப்படவேண்டியதாகவே இருக்கின்றது.

இராணுவ ரீதியான மேலாதிக்கத்தைப் பெற்றுள்ளதாக நினைத்து அரைகுறைத்தீர்வைத் திணிக்கவும் முயலக்கூடாது. ஏனெனில் வடக்கே யாழ் குடாநாட்டிலிருந்து எல்.ரி.ரி.ஈயினர் பின்வாங்கியிருக்கலாம். வன்னிப்பகுதியிலும் கிழக்கிலும் அவர்கள் தமது பலத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அத்துடன் வடக்கிலும் தாம் போராட்டத்தைக் தொடரப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் அரசு-இந்த ஆண்டின் இறுதிக்குள்-என்று கூறி வரையறைகளை வகுத்து தனது சொந்த விருப்பு, வெறுப்புக்களை நிறைவேற்றலாகாது.

நிரந்தரத்தீர்வு என்பதே வடக்கு கிழக்கிற்கு இன்று தேவையாகின்றது

அத்தகைய தீர்வு வேகமாகக் கொண்டு வரப்படுவதைவிட விவேகமாகக் கொண்டு வரப்படவேண்டியதே இன்றியமையாததாகின்றது.

எனவே கடந்த 17 வருடகாலமாக இலங்கையில் ஆட்சிக்குவந்தவர்கள் "எல்.ரி.ரி.ஈ.யினரே பலம்மிக்க தமிழ்ப் போராட்ட இயக்கத்தினர். எனவே அவர்களுடனேயே வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வுத்திட்டம் பற்றியும் பேசப்படவேண்டும்", என்று கூறிவந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகாகூட எல்.ரி.ரி.ஈயினருடன் பேசுவதே மிகவும் இன்றியமையாததாகின்றது என்று ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் கூறியிருந்தார்.

ஆனால் மறபுறத்தே எல்.ரி.ரி.ஈ.யினர் தமது நடவடிக்கைகளைப் பெரிதும் இராணுவ ரீதியாக கொண்டிருந்தனரேதவிர, அரசியல் அணுகுமுறைகளுக்கு பெரிதும் முக்கியத்துவமளிக்கவில்லை.

தற்போது வடக்கே இராணுவத்தினரின் கைமேலோங்கியுள்ளது. ஆனால் அதன் மூலம் எத்தகையதொரு தீர்வையும் வடக்கு-கிழக்கு மக்களிடையே திணிக்கலாம் என்ற நிலைப்பாட்டை ஆட்சியாளர்கள் கொள்ளலாகாது.

ஜனநாயக ரீதியிலான தீர்வுகளை எவ்விதத்திலும் இராணுவ ரீதியாக அமுல்படுத்த முடியாது.

வடக்கு-கிழக்கின் தமிழ் மக்கள், மற்றும் அவர்களது தலைவர்கள் கடந்த 40 ஆண்டுகளில் 30 ஆண்டுகள் வரை ஜனநாயகம், சாத்வீகம் என்றே போராடிவந்துள்ளார்கள்.

ஆயுதப்போராட்டத்தை-வடக்கு-கிழக்கு தமிழர்கள் தவிர்க்கமுடியாத நிலையிலேயே மேற்கொண்டனர். இந்தப் போராட்டம்கூட தமிழ்க்குழுக்கள், மற்றும் அவற்றின் பல்வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்கள் காரணமாக எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

---

# கயிற்றில் நடக்கும் புதிய ஆட்சி

இந்தியாவில் தேவகவுடா தலைமையில் மத்திய மந்திரிசபை அமைக்கப்பட்டுவிட்டது.

அதிஷ்டலாபச் சீட்டு விழுந்த மாதிரி தேவகவுடாவுக்கு பிரதமர் பதவி கிடைத்துவிட்டது.

காங்கிரசும், பாரதிய ஜனதாவும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது என்பதை தேர்தல் முடிவுகள் தெரிவித்துக்கொண்டிருந்த நேரத்தில், மூன்றா வது அணி ஆட்சி அமைப்பது பற்றிய பேச்சு எழுந்தது.

மூன்றாவது அணி சார்பாக ஜோதிபாசு பிரதமராவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

அரசியலில் அனுபவம் மிக்கவர், முற்போக்குவாதி, மாக்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர்களில் ஒருவர், நேர்மையானவர் என்று பிரதமராவதற்குரிய சகல தகுதிகளும் கொண்டிருந்தவர் ஜோதிபாசு.

இந்தியாவில், பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இருபெரும் கம்யுனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன.

ஒன்று, இந்திய கம்யுனிஸ்ட் கட்சி. அதனை வலது கம்யுனிஸ்ட் என்ற அழைப்பார்கள்.

அடுத்து : இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மாக்கிஸ்ட்). இதனை இடது கம்யுனிஸ்ட் என்று அழைப்பார்கள்.



இந்திய கம்யுனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து வந்த கட்சிதான் மாக்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சி.

வலது கம்யுனிஸ்ட் கட்சியைவிட இடது கம்யுனிஸ்ட் கட்சியின் வாக்கு வங்கிதான் பலமானது.

மேற்கு வங்கம், கேரளா ஆகிய மாநிலங்களில் ஆளும் கட்சியாகவும் இருந்ததும் இடது கம்யுனிஸ்ட்தான்.

கடந்த தேர்தலில் கேரளாவில் மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்கிறது இடது கம்யுனிஸ்ட் கூட்டணி.

இரண்டு கம்யுனிஸ்ட் கட்சிகளுமே காங்கிரஸ் எதிர்ப்பு நிலைப்பாட்டில் கடுமையாக உள்ளன.

ஆனால், எப்படித்தான் தலைகீழாக நின்றாலும் இந்தியாவில் மத்திய ஆட்சியைப் பிடிக்கும் பலம் கம்யுனிஸ்ட் கட்சிகளுக்கு கிடையாது.

கடந்த தேர்தல் முடிவுகள் காரணமாக பிரதமர் பதவிக்கு மூன்றாம் அணி ஆள் தேடிய போது ஜோதிபாசுதான் சகலராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஒருவராக இருந்தார்.

எனவே, தமது கட்சித் தலைவர்களில் ஒருவர் பிரதமராகும் வாய்ப்பை இடது கம்யுனிஸ்ட் நழுவவிடாது என்று நம்பப்பட்டது. ஏனெனில் இப்படியொரு வாய்ப்பு இனிமேல் கிடைப்பது அரிது.

ஆனால், காங்கிரஸ் தயவில் ஆட்சி நடத்த இடது கம்யுனிஸ்ட் விரும்பவில்லை. அதனால் ஜோதிபாசு பிரதமர் பதவிக்கு சம்மதிக்கக்கூடாது என்று அக்கட்சி முடிவு செய்தது.

பதவிக்காக அடித்து மாயும் காலகட்டத்தில் இடது கம்யுனிஸ்ட் கட்சி அப்படி யொரு முடிவை எடுத்தது ஆச்சரியம்தான். அதன்மூலம் ஏனைய கட்சிகளில் இருந்து தனது தனித்துவத்தை வித்தியாசப்படுத்தி காட்டியிருந்தது இடது கம்யுனிஸ்ட்.

கட்சி முடிவுக்கு மறுபேச்சே இல்லாமல் கட்டுப்பட்ட ஜோதிபாசுவும் தான் ஒரு பண்பட்ட தலைவர் என்பதை பறைசாற்றிவிட்டார். தற்கால அரசியலில் இவை ஆச்சரியங்கள்தான்.

இவ்வாறான நிலையில் தேவ கவுடாவுக்கு அதிஷ்டம் அடித்தது. இத்தனைக்கும் அவர் ஒரு தேசியத் தலைவரல்ல. கர்நாடக மாநில அரசியலோடு தன்னைச் சுருக்கிக் கொண்டிருந்தவர்.

தமிழ்நாட்டுக்கு காவிரி நதி நீரை திறந்து விட பிடிவாத மறுத்துக் கொண்டிருந்தவர்.

இப்போது தேவ கவுடா பிரதமராகி விட்டார். ஐக்கிய முன்னணியில் 13 கட்சிகள் இருக்கின்றன. சகல கட்சிகளையும் அனுசரித்துப் போகவேண்டும்.

ஐக்கிய முன்னணியில் 13 கட்சிகள் இருந்தாலும், வெளியே இருந்து ஆதரிக்கும் காங்கிரஸ் கட்சி காலைவாரினால் தேவ கவுடா கவிழவேண்டியிருக்கும்.

முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் கையில் தான் தேவகவுடாவின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. அதனால் பிரதமருக்கு பிரதமராகி விட்டார் நரசிம்மராவ்.

காங்கிரஸ் அரசின் பொருளாதாரக் கொள்கைகளை தொடரப்போவதாக தேவ கவுடா அறிவித்திருப்பதும் அதானல்தான்

எனவே- இந்திய மத்திய ஆட்சியும் புதிய பிரதமரும் காங்கிரஸ் என்ற கத்திமுனையில், கயிற்றில் நடக்க வேண்டியிருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் கீழே விழக்கூடும்.

விழுவதற்கு முன்னர், காங்கிரஸ் மட்டும் தான் நிலையான ஆட்சி தரமுடியும் என்று மக்களை நினைக்க வைத்துவிட்டு விழுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதே நரசிம்மராவின் திட்டம். அதுவரை தேவ கவுடா கயிற்றில் நடப்பதை காங்கிரஸ் அனுமதிக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

# 14 உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

தருவது ரசிகன்

**சென்றவாரம்**

ஃபிரான்சில் ரயில் பெட்டி ஒன்றிலும், செண்–சார்ல்ஸ் ரயில் நிலையத்திலும் கார்லோஸ் குழுவினர் வைத்த இரண்டு குண்டுகள் வெடித்தன. ஒன்பது பேர் பலியானார்கள் நூறுபேர்வரை காயமடைந்தனர்.

இனி...

திட்டமிட்டபடி இரண்டு குண்டுகளும் வெடித்த செய்தி கார்லோஸுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

கிழக்கு ஜெர்மனியில் இருந்த கார்லோஸ் ஃபிரான்ஸ் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொண்டிருந்தான்.

மூன்றாவது குண்டு வெடித்த செய்தியை அறிவதற்காக கார்லோஸ் ஆவலாயிருந்தான். கலண்டரில் திகதியைப் பார்த்தான்.

1984 ஜனவரி முதலாம் திகதி.

'இன்று புதுவருடம் பிறக்கிறது. இந்த வருடம் முடிவதற்கிடையில் கார்லோஸ் சொன்னதைச் செய்வான் என்று உலகம் நம்பியாகவேண்டும்.' கார்லோஸுக்கு ஏற்பட்ட மனக்கிளர்ச்சி அதுதான்.

புதுவருடத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடவேண்டும் என்று நினைத்தான். இந்த ஆண்டு கார்லோஸ் ஆண்டு. கார்லோஸ், கார்லோஸ், கார்லோஸ் செய்திகளில், தினசரிகளில், தொலைக் காட்சிகளில், மக்களின் உதடுகளில் எல்லாம் கார்லோஸ் என்ற பெயர்தான் இந்த வருடம் முழுக்க வலம்வரவேண்டும். நினைவு சுகமாக இருந்தது. புத்துணர்ச்சி உடல்முழுக்க பரவுவதுபோல உணர்ந்தான்.

1984ம் ஆண்டை கார்லோஸ் ஆண்டு என்று கார்லோஸ் தானகாவே பிரகடனம் செய்தது இப்போதல்ல.

மூன்றாவது குண்டை தனது ஆள் ஒருவனிடம் அனுப்பும்போதே கார்லோஸ் சொன்னான், "பிறக்கும் புதுவருடத்தன்று இது வாயைத்திறந்தால் போதும், நாமும் புதுவருஷத்தை கொண்டாடுகிறோம் என்ற விஷயம் உலகத்துக்கு தெரியட்டும். எப்போதுமே கார்லோஸின்பாணியே தனிதான் என்று புரிந்துகொள்ளட்டும்."

கார்லோஸ் உத்தரவுபடியே அவனது ஆள் சூட்கேஸ் குண்டுடன் தெருவில் இறங்கி, டாக்ஸி ஒன்றுபிடித்து புறப்பட்டபோது நேரம் காலை 9.30 மணி.

வடக்கு லெபனானில் உள்ள

## புதுவருஷமும்

ஃபிரான்ஸ் கலாசார மையம் தூங்கி வழிந்துகொண்டிருந்தது. டாக்ஸியில் இருந்து இறங்கிய கார்லோஸின் ஆள் பதட்டமேயில்லாமல் நேரே சென்று, வாயில் காவலனிடம் "யாருமே வர வில்லையா?" என்றான். "இன்னும் அரை மணி நேரமாகும்." என்றான் வாயில் காவலன். அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்து, "திரும்பிப்போய்விட்டு வரலாமா, அல்லது உள்ளே காத்திருக்க முடியுமா?" என்றான்.

"இருக்கலாம்" என்று கதவு திறந்து வரவேற்பறையில் அவனை அமர சூட்கேஸ்சுடன் அனுமதித்தான் வாயில் காவலன்.

ஐந்து நிமிடம் இருந்துவிட்டு, வெளிய வந்து, "அருகே கடை ஏதாவது இருக்கிறதா?" "இருக்கிறது" குறிப்புச் சொன்னான். நன்றி சொல்லிவிட்டு, "சூட்கேஸ் இருக்கிறது உள்ளே. கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் பிளீஸ்." சென்றுவிட்டான்.

சென்று 10 நிமிட இடைவெளியில் காவலனுக்கு சின்னதாக ஒரு சந்தேகம் எட்டிப்பார்த்தது.

'சென்றவனைக் காணவில்லையே.' அதேநேரம் பத்திரிகைகளில் படித்த சூட்கேஸ் குண்டுச் செய்திகளும் அவனது நினைவில் பொறி தட்ட, உள்ளே ஓடி சூட்கேஸை நெருங்கும் கடைசி நொடியில், குண்டு வெடித்தது.

வாயில் காவலனோடு சேர்த்து ஃபிரான்ஸ் கலாசார மையத்தை கார்லோஸின் குண்டு சாப்பிட்டுவிட்டது.

கிழக்கு ஜெர்மனில் இருந்து அந்தச் செய்தியை செவியில் வாங்கிய கார்லோஸ் தன்னை மறந்து, தன் எதிரே இருந்த மேசையில் ஓங்கித்தட்டி "வரேவா" என்று கிட்டத்தட்டக் கத்தினான்.

இப்படியான சந்தர்ப்பங்களில் கார்லோஸுக்கு பெண் துணை தேவைப்படும். கிறிஸ்டா கைது செய்யப்பட்ட பின்னர் வேறு பெண் வாசனையை நாடாமலிருந்து விட்டான் கார்லோஸ். கிறிஸ்டா கொடுத்து விட்டுப்போன இறுதி முத்தமும், அவளது பிரிவும் கார்லோஸை வழமைக்கு மாறாக சற்றுக் கூடுதலாகவே சோகப்படுத்தியிருந்தன.

கிறிஸ்டா குண்டுடன் கைது செய்யப்பட்டாலும், அவள் எதற்காக அனுப்பப்பட்டாளோ அதே ரயில் நிலையத்திலும், ரயிலிலும் குண்டு வெடிக்கவைத்துவிட்ட தனது செயலை தானே பாராட்டிக் கொண்டான் கார்லோஸ். அதனால் கிறிஸ்டாவின் பிரிவால் ஏற்பட்ட சோகம் கொஞ்சம் குறைந்தது.

மொஸ்கோவில் கார்லோஸ் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கூடப் படித்தவள் நவேகா. கிழக்கு ஜெர்மனியில் இப்போது இருக்கிறாள் அழகி. கார்லோஸ் அவளது தொலைபேசி இலக்கத்தை நினைவில் வைத்திருந்தான். சுழற்றினான். கிடைத்தாள். தன்னை அறிமுகம் செய்ய அவள் மறுமுனையில் சட்டென்று அதிர்ந்தது குரலில் தெரிந்தது. பத்திரிகைகளில் பிரசுரமான தனது படங்களை கண்டிருப்பாள். கூடவே படித்தவன் பயங்கரவாதியாகிவிட்டான் என்று மனதில் குதித்திருப்பாள். அதுதான் அதிர்கிறாள் என்று கார்லோஸ் நினைத்தான்.

"பயப்படாதே நவேகா. நான் கெட்டவர்களுக்குத்தான் கெட்டவன். புதுவருட வாழ்த்துச் சொல்லலாம் என்று எடுத்தேன். வசந்த வாழ்த்துக்கள். எப்படி இருக்கிறாய்? தனியாகவா, அல்லது....?"

"நன்றி, என்ன கேட்டாய்? ஆ..... தனியாகத்தான்."

"ஏன், சபதமா?"

"என்ன சொல்கிறாய்?"

"கடைசிவரை தனியாகவே இருப்பேன் என்று நீ சொன்னதாக ஞாபகம். அதுதான் கேட்டேன்."

"பரவாயில்லையே, எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்கிறாயே. இப்போது எங்கிருந்து பேசுகிறாய்? உன்னைப் பற்றி பல செய்திகள் பார்த்தேன். எப்படி இப்படி மாறினாய்? கொடுமை. நீ செய்வதெல்லாம் கொடுமை. ஏன்?"

"வெயிட், வெயிட், நிறையக் கேள்விகள் வைத்திருக்கிறாய் போலிருக்கிறது. குட். நேரில்வாயேன், நிம்மதியாக இருந்து பேசலாம். பக்கத்தில்தான் இருக்கிறேன். சிரமம் என்றால் சொல்லு நானே வருகிறேன்."

அவசரமாக மறுத்தாள். "வேண்டாம். வேண்டாம். அம்மா இருக்கிறாள்." குரலை தாழ்த்திச் சொன்னாள், "உன்னைப் பற்றிய செய்திகளைப் படித்துவிட்டு வெறுப்பை கொட்டுகிறாள். நல்லவேளை, நீ என் நண்பன் என்று அவளுக்குத் தெரியாது."

"சரி, நீயே வா." முகவரி சொன்னான். மாலையில் வருவதாகச் சொன்னாள்.

கார்லோஸ், போனை வைத்துவிட்டு மெல்லியதாக விசில் அடித்துக் கொண்டு, சர்வதேச செய்தி நிறுவனங்களது தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய குறிப்புப் புத்தகத்தை புரட்டினான்.

வலது காலை நீட்டி, நாற்காலியை காலால் இழுத்து, தொலைபேசியருகே போட்டுக்கொண்டு அமர்ந்தான். இலக்கம்

## குண்டு வெடிப்பும்

சுழற்றிக் காத்திருக்க, மறுமுனை 'ஹலோ' என்றது.

கார்லோஸ் ஆங்கிலவார்த்தைகளை நளினமாக தெளிவாக, நிறுத்தி நிதானித்து உச்சரித்து, "புதுவருட வாழ்த்துக்கள். வருடம் புதிதாக பிறக்கும்போது செய்திக்கு பஞ்சம் இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறோம். ஏதோ தற்போதைக்கு நம்மால் முடிந்த உதவி. என்ன, சந்தோசம்தானே!"

"பொறுங்கள், முதலில் சில கேள்விகள்?"

"என்ன பேட்டியா எடுக்கப்போகிறீர்கள்?"

"நீங்கள் யார்? நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? எது தொடர்பாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள்."

"வன், ரு, திறீ. மூன்று கேள்விகள் முதல் கேள்விக்கு பதில் சொன்னால் மூச்சு



விட மறந்துபோவீர்கள். ஏனைய இரண்டு கேள்விகளுக்கும் நீங்கள்தான் விடை சொல்ல வேண்டும். சுடச் சுட இன்று கிடைத்த செய்தி என்ன?"

"இன்று.....ஆ....யெஸ், லெபனானில் குண்டு வெடிப்பு!"

"தட்ஸ் குட்! அதுதான். அதேதான்!" மறுமுனையில் குரல் மாறியது. அவசரம் தெரிந்தது. அது செய்தியாளர்களுக்கே உரிய பரபரப்பு. "நீங்கள் யார்? உங்களுக்கும் அதற்கும் என்ன தொடர்பு?"

"பெரிதாக ஒரு தொடர்பும் இல்லை. அந்தக் குண்டைச் செய்து அனுப்பி வைத்தேன்; அவ்வளவுதான்!"

"ஆ! எ....என்ன?"

"யெஸ்! நான்தான் கார்லோஸ்..... ஹலோ... யெஸ் நான்தான் கார்லோஸ். எங்கள் கோரிக்கைகளுக்கு பணிய மறுப்பவர்களுக்கு பரிசு இப்படித்தான் இருக்கும்."

தொடர்பை 'கட்'செய்தான். தொடர்ந்து பல செய்தி நிறுவனங்களுக்கும் போன் செய்து மூன்று குண்டுவெடிப்புக்களுக்கும் உரிமை கோரினான். செய்தி நிறுவனங்கள் சுறு சுறுப்பாகின.

**

**சோ**வியத் யூனியனின் உளவுப் பிரிவான கே.ஜி.பி.க்கு கார்லோஸ் கிழக்கு ஜெர்மனில் தங்கியிருக்கும் விஷயம் தெரிந்து போனது.

"கிழக்கு ஜெர்மன் கதவுகள் கார்லோஸுக்கு இரகசியமாக திறந்திருக்கின்றன.



கார்லோஸ்

நாங்கள் சொன்னதையும் மீறி கிழக்கு ஜெர்மன் அரசு கார்லோஸைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது." கே.ஜி.பி உயர் அதிகாரி தமது வெளிநாட்டமைச்சருக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

வெளிநாட்டமைச்சர் தனது சுங்கானைப் பற்றவைத்து, ஆசையாக ஒரு இழுப்பு இழுத்தார்.

"கார்லோஸ் செத்து, புதைத்த இடத்தில் புல்லும் முளைத்திருக்கும், கே.ஜி.பி. திறமையாக செயற்பட்டிருந்தால்!" என்றார்.

எதிரே இருந்த கே.ஜி.பி. அதிகாரி தனது இருக்கையில் சங்கடமாக நெளிந்தார்.

"ரைட். இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்." என்று கேட்டார் வெளிநாட்டமைச்சர்.

"கார்லோஸின் பலத்தில் பாதி ஐரோப்பிய நாடுகளில் அவனுக்குள்ள பாதுகாப்பு இல்லங்களில்தான் தங்கி இருக்கிறது. அந்த பாதுகாப்பு இல்லங்கள் இல்லையென்றால், கார்லோஸின் நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளில் முடக்கப்பட்டுவிடும்."

"ஆகவே....?"

"ஐரோப்பியநாடுகள் எதுவும் கார்லோஸுக்கு கதவு திறக்கக்கூடாது என்பதை நமது நட்பு நாடுகளுக்கு கண்டிப்பாக சொல்லிவிடலாம்."

"கிழக்கு ஐரோப்பிய நாடுகளது பிரதிநிதிகளது மாநாட்டில் வைத்து தீர்மானம் எடுத்துவிட்டால் என்ன?" வெளிநாட்டமைச்சர் கேட்க, கே.ஜி.பி. அதிகாரி மிக மகிழ்ந்து: "நல்ல யோசனை." என்று பாராட்டினார்.

மாநாடு கூடியது. கார்லோஸ் பற்றிய விவகாரம் சூடாக பல மணிநேரம் விவாதிக்கப்பட்டது.

"அமெரிக்காவுக்கும் கார்லோஸின் நடமாட்டங்கள் தெரியும். அவர்கள்கூட கார்லோஸுக்கு தடைபோட யோசிக்கவில்லை. நாம் மட்டும் ஏன் அவனை பகைக்க வேண்டும். தவிர, ஃபிரான்ஸ் போன்ற முதலாளித்துவ நாடுகள்தானே அவனால் பாதிக்கப்படுகின்றன. எதிரியின் எதிரி நமக்கு நண்பன்தானே? வேண்டுமானால் உறவும் வேண்டாம், பகையும் வேண்டாம் என்று நடந்து கொள்ளலாமே!" என்றார் கிழக்கு ஜெர்மன் அதிபர்.

கிழக்கு ஜெர்மன் அதிபரின் கருத்தை மறுத்து தனது விளக்கத்தைச் சொல்லத் தொடங்கினார் சோவியத் வெளிநாட்டமைச்சர்.

"ஜென்டில்மேன்! அமெரிக்காவுக்கு கார்லோஸைப் போன்ற ஒரு ஆள் உலகில் இருப்பது நல்லதுதான். ஏன் தெரியுமா? தனக்குப் பிடிக்காத சர்வதேச நாடுகளது அரசியல் தலைவர்களை சி.ஐ.ஏ. மூலம் தீர்த்துக்கட்டிவிட்டு அமெரிக்கா நல்ல பிள்ளையாக இருந்துவிடும். பழி கார்லோஸ் மீதுதானே விழும். இப்போது புரிகிறதா, சர்வதேசப் பயங்கரவாதிகளை அமெரிக்கா எதற்காக கண்டும் காணாமல் இருக்கிறது என்று? ஆகவே, கார்லோஸ் எதிரிக்கு எதிரியல்ல, எதிரிக்கு ஏதோ ஒரு வகையில் உதவும் நண்பன்!"

ஜெர்மன் அதிபர் குறுக்கிட்டு, "தன்மீது விழும் பழியை கார்லோஸ் மறுக்கமுடியும் தானே. அப்போது அமெரிக்காவின் திட்டம் பலிக்காதல்லவா?

சோவியத் வெளிநாட்டமைச்சர் மெல்லிய புன்னகையோடு அதற்குப் பதில் சொன்னார்:

"பயங்கரவாதியென்ற முத்திரை கார்லோஸ்மீது குத்தப்பட்டுவிட்டது. பயங்கரவாதிகளது மறுப்பை யாரும் நம்பமாட்டார்கள்."

விவாதம் தொடர்ந்துகொண்டிருந்தது. தனக்கு குழிவெட்டப் பட்டுக்கொண்டிருப்பதை அறியாத கார்லோஸ், அழகான நவேகா வந்தால், அவள் சபதத்தை உடைத்து வீழ்த்துவது எப்படி என்று திட்டம் போட்டுக் கொண்டு, காத்திருக்கத் தொடங்கினான். (பதட்டம் தொடரும்)

# கட்டாந் தரையில் தம்பிகளுக்குப் பின்னால்

**இ**ந்தியாவில் திஹார் சிறையில் கட்டாந் தரையில் தூங்குகிறார் அந்த மனிதர்.

அவரது காலில் விழாத அரசியல்வாதிகளே கிடையாது என்னுமளவுக்கு புகழ் பெற்றிருந்தவர்.

உலகின் மிகப் பெரும் பணக்காரர்கள் அவருக்கு சீடர்கள். அந்தச் சீடர்களை மகிழ்விக்க அழகிகளை அனுப்பிவைப்பார் அவர்.

யார் அவர் என்று ஓரளவு ஊகித்து இருப்பீர்கள்தானே. சந்திரசுவாமிதான் அவர்.

இந்தியப் பிரதமராக இந்திராகாந்தி பதவியில் இருந்த காலத்திலேயே சந்திர சுவாமியின் அரசியல் ஈடுபாடு ஆரம்பமாகிவிட்டது.



இந்திராகாந்தி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ஜனதா கட்சி ஆட்சியில் ஏறியது.

அப்போதுதான் சந்திர சுவாமியின் முக்கியத்துவம் ஏற்படத்தொடங்கியது.

ஜனதா ஆட்சியை கவிழ்க்க சந்திரசுவாமியின் உதவியை நாடினார் சஞ்சய் காந்தி. விடுவாரா சந்திர சுவாமி. தன் சித்துவேலைகளை காட்டத் தொடங்கினார்.

ஜனதா கட்சியில் இருந்த சரண்சிங்கை தன் வலையில் வீழ்த்தினார் சுவாமி. ஜனதா கட்சி உடைந்தது. மீண்டும் தேர்தல் வந்தது. மறுபடி பதவிக்கு வந்தார் இந்திரா காந்தி.

அதன்பின்தான் சந்திரசுவாமியைக் கண்டாலே அரசியல் வாதிகள் பலர் பொத்துப் பொத்தென்று அவர் காலில் விழத் தொடங்கினார்கள்.

இந்தியாவோடு மட்டும் தனது சித்து விளையாட்டுக்களை நிறுத்திக்கொண்டால் தேவையான பணம் சம்பாதிப்பது எப்படி? சந்திரசுவாமிக்கு சகல சபலங்களும் உண்டு.

பஞ்சணையில் உருள்வார். பேரழகிகளோடு புரள்வார். கோடி கோடியாக பணம் கொட்டவேண்டும் என்று துடிப்பார்.

அதனால், சர்வதேசரீதியாக தொடர்புகளை உருவாக்கிக் கொண்டார். ஆயுத வியாபாரிகள், போதைப் பொருள் கடத்தல் காரர்கள், பயங்கரவாதிகள் என்று சகல தரப்பாரையும் சுவாமி தன் பக்தர்களாக்கிக் கொண்டார்.

தனது பக்தர்களின் பலவீனத்தை சுவாமி நாடிபிடித்தறிந்து கொள்வார்.

பிரபல ஆயுத வியாபாரி கஷோகியும் சுவாமியின் பக்தர்தான். கஷோகிக்கு அழகான பெண்கள் என்றால் ஒரு நாட்டம். பொழுது போக்கும் அதுதான்.

சுவாமிக்கு அழகான பக்தைகளும் இருக்கிறார்கள். எலிசபெத்டெய்லர் போன்ற ஹொலிவூட் நடிகைகள், பமீலா போன்ற மொடல் அழகிகள் சுவாமி சொன்னதைச் செய்வார்கள்.

கஷோகிக்கு பமீலாவை விநியோகித்தார் சுவாமி. புருனே மன்னன் சுல்தானும் சுவாமியின் தீவிர பக்தர்தான்.

ராஜீவ் காந்தி இந்திய பிரதமராக இருந்தபோது ஆரம்பத்தில் சுவாமிக்கும், ராஜீவுக்கும் ஒத்துவரவில்லை. போஃபர்ஸ் பீரங்கி ஊழல் விவகாரத்தில் ராஜீவ் மாட்டிக் கொண்டபோது சுவாமி என்ன செய்தார் தெரியுமா?

போஃபர்ஸ் ஊழலுக்கு ஆதாரமான ஆவணங்களைத் திரட்டித்தருவதாக சில பத்திரிகைகளோடு பேரம் பேசினார். எதிர்க்கட்சிகளையும் ஏமாற்றினார்.

வி.பி.சிங் பிரதமரானதும் சுவாமிக்கு தற்காலிகமாக கெட்ட காலம். சுவாமிக் கோஷ்டிகளைக் கண்டாலே வி.பி.சிங்குக்கு பிடிக்காது.

அதனால் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது வெளிநாட்டுக்குப் பறந்தார் சுவாமி. வெளிநாட்டில் இருந்தபடி ராஜீவ் முகாமுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார் சுவாமி.

சுவாமியை பயன்படுத்தி வி.பி.சிங் ஆட்சிக்கு குழிபறிக்க தீட்டப்பட்டது ஒரு திட்டம். வி.பி. சிங்கின் மகன் வெளி நாட்டில் இருந்தார். வி.பி.சிங் லஞ்சம் வாங்கி வெளிநாட்டிலுள்ள தனது மகன் பெயரில் அங்குள்ள வங்கியில் பணம் போட்டிருக்கிறார் என்று போலி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டன. ஆவணங்களை தயாரிக்க உதவியது சுவாமிதான். பின்னர் அந்த போலி நாடகம் வெற்றி பெற முடியாமல் போனது தனிக்கதை.

அதன்பின்னர் பிரதமர் சந்திரசேகருடன் நகமும் சதையுமாக இருந்தார் சுவாமி. சந்திரசுவாமி சொல்வதை தட்டவே மாட்டார் சந்திரசேகர். சந்திரசேகர் பிரதமராக இருந்த காலம் சுவாமியின் பொற்காலம்.

இறுதியாக நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது சுவாமிக்கு ஓசையே காட்டாமல் உதவினார் நரசிம்மராவ்.

பிரதமரோடு தனக்குள்ள தொடர்பை வைத்து பல கோடீஸ்வர வர்த்தகர்களிடம் பணம் கறந்தார் சுவாமி. காரியம் முடித்துத் தருவதாகக் கூறியும் கோடிகள் வாங்கிக்கொண்டார். அவ்வாறு பணம் வாங்கிய விவகாரம் ஒன்றில் மாட்டிக் கொண்டுதான் தற்போது சிறையில் இருக்கிறார் சுவாமி.

திஹார் சிறையில் சுவாமியின் முன்னாள் சீடன் பப்லு என்பவனும் இருக்கிறான். அவனுக்கு இப்போது சுவாமிமீது பயங்கரக் கோபம். 'அவனால் தனக்கு ஆபத்து வருமே என்று பயந்து நடுங்கினார் சுவாமியார். அப்படி எதுவும் நடக்காது என்று சமாதானம் சொல்லி சுவாமியை சிறைக்கு அழைத்துச் செல்வதற்கு இடையில் போதும் போதுமென்றாகிவிட்டதாம்.

சுவாமிக்கு வேண்டிய அரசியல்வாதிகள் செல்வாக்கு இழந்திருப்பதால் சுவாமி சிறையில் இருக்கிறார்.

சுவாமிக்கு கைகொடுத்தால் தமது சுயரூபம் தெரிந்துவிடுமோ என்ற பயத்தில் அவரது சீடர்களான அரசியல் வாதிகள் சுவாமியை தற்காலிகமாக கைவிட்டுள்ளார்கள்.

ஆனால், இது சுவாமியின் அஸ்தமனமல்ல. மூடத்தனம் கொண்ட அரசியல்வாதிகள் உள்ளவரை சுவாமி மீண்டும் வித்தை காட்டிப் பிழைக்கும் வாய்ப்பும் ஏற்படத்தான் செய்யும். ■

# தபால் மூலம் ஒரு தப்பு

**த**பால்மூலம் கல்வி, தபால் மூலம் பயிற்சி என்றெல்லாம் விளம்பரங்கள் பார்த்திருப்பீர்கள்.

தபால் மூலம் பிரேசில் நாட்டில் நடைபெறும் ஒரு சமாச்சாரம் பற்றி கேள்விப்பட்டால் ஆச்சரியப்படுவீர்கள்.

அந்த சமாச்சாரம் யாதெனில், தபால் மூலம் அழகான பெண்களை தெரிவு செய்வது.

பிரேசில் நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. அதுபோதாது என்று பெண்களை தமது அடிமைகளாக நடத்துகின்றனர் ஆண்கள். வருமானம் இல்லாத நிலையில், வாழ்க்கையை ஓட்ட வேறு வழியில்லாமல் பெண்கள் பலர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். எப்படி வேண்டுமானாலும் பிழைத்துக் கொள்ளட்டும் என்று பிரேசில் அரசாங்கம் அவர்களைக் கண்டுகொள்வதேயில்லை.

இந்த விஷயத்தை அறிந்த ஜெர்மன்காரர் ஒருவர் வியாபார மூளையோடு பிரேசிலுக்குள் புகுந்தார்.

முதல் வேலையாக 'பாகியா இண்டர் நேஷனல்' என்னும் அமைப்பை உருவாக்கினார். அதிலே பிரேசில் நாட்டுப் பெண்களையும் உறுப்பினராக்கிக் கொண்டார்.

சர்வதேசப் பத்திரிகைகளில் 'பாகியா' சார்பாக ஒரு விளம்பரத்தை வெளியிட்டார். "பிரேசிய மணமகள் தேவையா?" என்று கேட்டது விளம்பரம். உடனடியாக பல நாடுகளில் இருந்து விண்ணப்பங்கள் குவிந்தன.

விண்ணப்பங்களை பரிசீலித்து பணக்காரர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள். அவர்கள் ஒருவார காலம் 'பாகியா' சார்பாக பிரேசில் நாட்டில் தங்கலாம். திருமணம் செய்ய விரும்பினாலும்சரி, ஒருவாரகாலம் ஜாலியாக இருக்க விரும்பினாலும் சரி



தகுந்த வசதிகள் செய்துகொடுக்கப்படும். எத்தனை பெண்களை வேண்டுமானாலும் தெரிவு செய்துகொள்ளலாம். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை 'பாகியா' அமைப்பில் இரண்டு லட்சம் ரூபாய் செலுத்தி உறுப்பினராக வேண்டும். கில்லாடித்தனமான காரியம்தானே!

'பாகியா' அமைப்பில் மூவாயிரம் பெண்கள் இருக்கிறார்கள். பணம் உள்ள பலர் உறுப்பினர்களாக சேர்ந்து அந்தப் பெண்களைத் தேடிச் செல்கிறார்கள்.

இலட்சம் இலட்சமாய் பணம் கட்டி உறுப்பினராய் சேர பலர் கியூவில் நிற்கிறார்களாம். காரணம், பிரேசில் நாட்டுப் பெண்கள் ஒரு குறிப்பிட்ட இனப் பெண்கள் போல தோற்றமளிக்கமாட்டார்களாம். பல நிறமாறுபாடுள்ள உடல்வாகை கொண்டிருப்பார்களாம்.

'பாகியா' அமைப்பை நடத்தும் ஜெர்மனியரான ரோல்ப் பின்வருமாறு சொல்கிறார், இந்தநாட்டு பெண்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள். கவர்ச்சிகரமானவர்கள். நன்றாக ஒத்துழைப்பார்கள்" என்கிறார். சேவை என்ற பெயரில் வியாபாரம் செய்கிறார் ரோல்ப். உலகில் எத்தனை ரகமான பிழைப்புக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# கொடி ஒன்று மலர் ஆறு

ஒன்று போதும், இரண்டு போதும் என்று உலகெங்கும் குடும்பக்கட்டுப்பாட்டு பிரசாரங்கள் நடந்தாலும், அதிரடியான பிரசவங்களுக்குத்தான் உலகில் பிரபலம் கிடைக்கிறது. படத்திலே உள்ள தம்பதியினர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவில் உள்ள அல்பனி சென் பீட்டர் மருத்துவமனையில் திருமதி மிகேலி நார்மனுக்கு ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிறந்தன. செய்தி பரவி தம்பதியினரின் பெயர் உலகெங்கும் பிரபலமாகிவிட்டது.

தம்பதியர் தமது முதலாவது பெண்குழந்தை சகிதம் 6 குழந்தைகளையும் மடியில் வைத்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஒரு கொடியில் ஆறு மலர்கள். மகிழ்ச்சிக்கு எல்லை இருக்குமோ?



# கூரைக்கு மேலே அபாயம்

வீட்டின் மேலாக விமானம் பறக்கும்போது நம்நாட்டின் சில பகுதிகளில் மக்கள் பதட்டமடைவது தெரிந்த சங்கதி. வெளிநாடுகளிலும் விமானச் சத்தம் கேட்டால் பயந்து நடுங்கும் நிலை வந்தாலும் வரலாம். இங்கே ஆளாளுக்கு சைக்கிள் பழகுவது போல, வெளிநாட்டில் விமானம் ஓட்டிப் பழகுகிறார்கள். ஓட்டுபவரின் அனுபவக்குறைவு காரணமாக விமானம் கட்டுப்பாட்டை மீறினால் கதை காலி. வீடுகள் மீதும் விழுந்து தொலைத்துவிடலாம். படத்தில் இருப்பது நெதர்லாந்தில் ஹிகெவின் என்னுமிடத்தில் ஏற்பட்ட விபத்து. அதிஷ்டவசமாக வீடு தப்பிவிட்டது. விமானத்தை ஓட்டியவர் உயிரிழந்தார். விமானம் செலுத்த கற்றுக் கொடுத்தபடி அருகில் இருந்தவர் படுகாயத்தோடு தப்பிவிட்டார். இனிமேல் வெட்ட வெளிகளில் கற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு போடப் பட்டுள்ளதாம். எல்லாம் சரி விபத்தை கண்ட வீட்டிலுள்ளவர்களின் மனநிலை எப்படியிருந்திருக்கும். கற்பனை பண்ணிப் பாருங்கள்.




தகவல் பெட்டி

# சாவோடு விளையாட்டு

உலக சாதனைக்காக உயிரை பணயம் வைத்து செய்யப்பட்ட முயற்சி இது. 135 மீட்டர் உயரமுள்ள தொலைக்காட்சி டவரில் சைக்கிளுடன் ஏறி நின்றார் ஜோச்சின். அங்கிருந்து கீழே பார்த்தால் தலை சுற்றும். ஜோச்சின் அசரவில்லை. தனது உதவியாளர்களை ஒரு முறை நோட்டமிட்டார். அவர்கள் முகங்களில் கிலி. ஜோக்கின் ஒரு புன்னகையை சிந்திவிட்டு சைக்கிளில் அமர்ந்தபடி கீழே குதித்தார். காயமில்லாமல் தப்பியும் விட்டார். இதற்கு முன்னர் செய்யப்படாத சாதனை இது. இது நிகழ்த்தப்பட்டது ஜெர்மன் நாட்டில்.



# காரா இது காரா?



பணம் மித மிஞ்சினால் சிலருக்கு இருப்பே கொள்ளாது. ஐக்கிய அரபு எமிரேட்சை சேர்ந்த பணக்கார ஷேக்குகளில் ஒருவர் ஹமத் பின் கம்தன். ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் வைத்திருக்கிறார். வைக்க இடமில்லாதளவுக்கு பணம் இருக்கிறது. ஷேக்குக்கு ஒரு ஆசை. தன்னிடம் விதம் விதமான கார்கள் இருக்கின்றன. இருந்தும் என்ன; உலகிலேயே பெரியகார் என்று சொல்லத்தக்க ஒரு கார் இல்லையே? என்ன செய்யலாம். உடனே அமெரிக்காவில் உள்ள கார் நிறுவனம் ஒன்றிடம் ஓடர் கொடுத்தார். ஒரு மாதத்தில் நீளளளளமான கார்ரெடி. படத்தில் இருக்கிறது பாருங்கள். அதுதான் கார். நீளம் 67 அடி. (சாதாரணகாரின் நீளம் சராசரியாக 6 அடி) இந்தக் கார் தெருவில் போனால் இரண்டு கட்டடங்கள் அசைந்து போவது போல இருக்கிறதாம். 10 சக்கரங்கள் உள்ளன. படுக்க, பந்து விளையாட, நீச்சலடிக்க, சாப்பிட, விருந்து நடத்த, என்று ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குரிய சகல வசதிகளும் உள்ளே இருக்கிறது. நீளமாக இருப்பதால் வளைவுகளில் திருப்பமுடியுமா? முடியும். அதற்கேற்ப பின்பகுதி வசதியானது. டிராக்டர் ட்ராய்லர் போல செய்யப்பட்டிருப்பதால் தேவைக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

# கண்டதும் மயக்கம்

சாணத்தை வரட்டியாக தட்டி விற்பனை செய்பவள் பஞ்சவர்ணம். அவளிடம் வரட்டி வாங்கப்போகிறான் பெரிய இராமசாமி. வரட்டிக்கு பணம் கொடுக்கிறான். தனது இடுப்பில் செருகியுள்ள சுருக்குப் பையில் பணத்தை போடுமாறு கூறி, இடுப்பு சேலையை ஒதுக்கிவிடுகிறாள்.

அவ்வளவுதான் விஷயம். பெரிய ராமசாமி இடுப்பழகில் சொக்கிப்போகிறான்.

இன்னொரு தடவை இடுப்பழகைக் காண்பதற்காக மீண்டும் வரட்டி வாங்குகிறான். வரட்டியை எடுத்துப்போய் அவள் நினைவாக அதன்மேல் படுத்திருக்கிறான் பெரிய ராமசாமி. பிறகென்ன, கனவில் வராமல் போவாளா கட்டழகி. வருகிறாள். பாடல் தொடங்குகிறது.

"உன் இடுப்பு சுருக்கு பையிலே என்னை இறுக்கி பிடிச்ச மயிலே மயிலே.." என்று பாடல் தொடர்கிறது.

சின்னராமசாமி பெரியராமசாமி படத்திற்கு இக்காட்சி கடச்கட படமாக்கப்பட்டது. ஜெயராமும், புதுமுகம் உதயாவும் அக் காட்சியில் நடித்தனர்.

# 30 இலட்சம் ரம்பா

ரம்பாவின் பாடுதான் யோகம். ஒரு படத்திற்கு 30 இலட்சம் கொடுத்தால்தான் ஓகே சொல்கிறார். பண விடயத்தில் மட்டும்தான் கண்டிப்பு. பணம் வாங்கிவிட்டார் என்றால் தொழிலில் படுசுத்தம். இயக்குநரின் சொற்படி நடிப்பார். குறைத்தல், கூட்டல் விஷயங்களில் தலையிடமாட்டார். ரம்பாவின் தாராளம் படவுலகத்தினருக்கும் பிடித்திருக்கிறது.

கார்த்திக் போன்ற நடிகர்களுக்கும் ரம்பாவை பிடித்திருக்கிறது. தனது படங்களில் நடிக்க ரம்பாவுக்கும் சிபாரிசு செய்கிறார் கார்த்திக்.

# படம் ஒன்று—வி...

இந்திய ஜனாதிபதியால் சிறந்த படங்களுக்கு வழங்கப்படும் வி... விருதுகளை தட்டிக்கொண்ட படம் 'காலாபாணி'.

சிறந்த ஒளிப்பதிவாளர்-சந்தோஷ் சிவன். சிறந்த ஒலிப்பதி... ஸ்பெசல் எபெக்ட்ஸ்-வெங்கி. மொத்தமாக நான்கு விருதுகள்.

மலையாளத்தில் கேரள அரசின் விருதுகளையும் ஏற்கனவே... தமிழில் 'சிறைச்சாலை' என்ற பெயரில் வெளியாகி வசூலுட... கௌரவ வேடத்தில் நடித்துள்ள பிரபுவுக்கு மலையா... வரவேற்பு கிடைத்துள்ளது.




தபு

# ரஜினிக்கு விருந்து

நேபாளத்தில் தங்கியிருந்த ரஜினிக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கிறார் மனிஷா கொய்ராலா. அது என்ன இன்ப அதிர்ச்சி? ரஜினிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அமர்க்களமான விருந்து கொடுத்திருக்கிறார்.

மனிஷா நேபாளத்தை சேர்ந்தவர். மன்னர் பரம்பரையின் வாரிசு. அங்கு ஒரு மாளிகையும் இருக்கிறது. அந்த மாளிகைக்கு அழைத்துத்தான் விருந்து கொடுத்தார் மனிஷா. மனிஷாவின் கவனிப்பால் ரஜினி நெகிழ்ந்து போயிருக்கிறார். இந்தியனில் கமலுக்கு ஜோடியாக நடித்த மனிஷா, அடுத்து ரஜினிக்கு ஜோடியானாலும் ஆச்சரியமில்லை. சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பது என்பது இதுதானோ?

# விசித்...

தனியா... விசித்ரா ப... மேடையில் பலரே வ... கலைநயம் முகர்கள் வழங்கிக் தமிழ்நாட்... வெளிநாடு... சேவை' ப... கலாம் எ... விசித்ரா.

சினிமா... கைவசம் பிழைத்துக்...

# இளையதளபதியின் புதிய காதலி

நடிகர் விஜய் வளர்ந்துவரும் இளம் ஹீரோ. 'ரசிகன்' படத்தின் பின்னர் சங்கவியும் விஜயும் நெருக்கமாக இருந்தார்கள். அந்த நெருக்கம் 'கோயம்முத்தூர் மாப்ளே' படம் வரை தொடர்ந்தது. அந்தப் படம் தோல்வியை தழுவியதால் ராசியான ஜோடி என்ற நம்பிக்கையும் பறந்துவிட்டது. சங்கவியும் வேறு கதாநாயகர்கள் பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

விஜய் விடுவாரா? அவரும் புது நாயகிகளோடு ராசியானார். சந்திரலேகா படத்தில் நடித்த வனிதா விஜயகுமாரும், விஜயும் பசையாக ஒட்டித் திரிந்தனர்.

இதற்கிடையே மாண்புமிகு மாணவன் படத்தில் நடித்த பம்பாய் நடிகை விஜயை ஒரே பிடியாக பிடித்துக்கொண்டார்.

'மாண்புமிகு மாணவன்' சரியாக ஓடவில்லை என்றாலும், பம்பாய் அழகியும் விஜயும் தொடர்ந்து நட்பாக இருக்கிறார்களாம்.

படப்பிடிப்பு முடிந்தபின் வரும் சென்னையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் விஜயின் சொந்தச் செலவில் தங்கியிருந்து நட்பை கெட்டிப்படுத்துகிறார் நடிகை.

விஜய் இளைய தளபதி என்று பட்டம் பெற்றிருப்பவர். காதல் விவகாரங்களிலும் இளைய தளபதி வெற்றிகரமாக போர் தொடுத்துக் கொண்டிருக்கிறார்.



ஜூஹி சாவ்லா

# பந்தயக் களத்தில் ஜூகி சாவ்லா

நடிகை ஜூகி சாவ்லா இந்தியில் முதலிடத்தைப் பிடிப்பதில் குறியாக இருக்கிறார்.

'மாதுரி டிக்ஷித்தான் தற்போது இந்தியில் முதலிடத்தில் இருக்கிறார். மாதுரியைவிட ஜூகி சாவ்லாவின் உடல் அமைப்பு பிரமாதம். மாதுரியிடம் நடன அசைவுகளில் ஒரு கவர்ச்சி தெரியும். ஜூகியிடம் அது கிடையாது." என்று ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார் ரிஷி கபூர்.

ரிஷி கபூரின் கருத்தைப் பற்றி ஜூகி சாவ்லா என்ன சொல்கிறார் தெரியுமா? "ரிஷி கபூருக்கு வயதாகிக்கொண்டிருப்பதால் நடன அசைவுகள் அவர் கண்களுக்கு சரியாகத் தெரிவதில்லை. இந்தியில் இன்றுள்ள எந்தவொரு நடிகைக்கும் எனது நடனத்திறமை குறைந்து போய்விடவில்லை" என்கிறார் ஜூகி சாவ்லா.

ஜூகி சாவ்லா தற்போது நெருக்கமாகியிருப்பது சுனில் ஷெட்டியுடன். "சுனில் துடிப்பான ஹீரோ. பழகுவதற்கும் இனிமையானவர் என்கிறார் ஜூகி சாவ்லா. "அப்படியானால் நீங்கள் சுனிலை காதலிக்கிறீர்களா?" என்று கேட்டால், பட்டென்று பதில் வருகிறது ஜூகியிடமிருந்து. "நான் அவரிடம் காதலை எதிர்பார்க்கவில்லை." வேறென்ன எதிர்பார்க்கிறார் என்பதையும் ஜூகி சொல்லவில்லை.

# குறைந்த சம்பளம்

'சிறைச்சாலை' படத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் வீர்கவர்க்கராகத் தோன்றியவர் அனு கபூர். அந்தப் பாத்திரத்தில் நடித்ததற்காக பணம் வாங்கமறுத்துவிட்டார் அனுகபூர். 'அந்தப் பாத்திரத்தில் நடித்தது எனது பாக்கியம்' என்று சொன்னாராம். தயாரிப்பாளர் விடாமல் வற்புறுத்தியதால் இறுதியில் சம்பளம் வாங்க ஒப்புக்கொண்டார். எவ்வளவு சம்பளம் வாங்கினார் தெரியுமா? ஒரு ரூபாய்! வித்தியாச நடிகர்.

# காதலுக்கு பச்சைக்கொடி

மாதுரி டிக்ஷித் காதலைப் பற்றி சொல்வதை கேட்க ஆசையா? படியுங்கள் அவர் பேட்டியை.

**கே-காதலில் உங்கள் நம்பிக்கை?**

ப-எல்லோரையும்போல எனக்கும் நம்பிக்கை உண்டு. நான் காதல் திருமணம்தான் செய்து கொள்வேன். தகுந்த நேரம் வரும்போது காதலித்து திருமணம் செய்வேன்.

**கே-காதலுக்காக திருமணம் செய்வீர்களா? சம்பிரதாயத்துக்காக திருமணம் செய்வீர்களா?**

ப-நிச்சயம் சம்பிரதாயத்துக்கு அல்ல. அன்பு, நேசத்துக்காகத்தான் திருமணம் செய்வேன்.

**கே-காதலுக்காக காத்திருப்பீர்களா?**

ப- காதல், நேசம் என்பது தானாக நடக்க வேண்டும். அதற்காக காத்திருக்கமாட்டேன். நடக்கிறபோது நடக்கட்டும்.



# ஆண் குழந்தைக்கு 50 இலட்சம்

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கும் 'அலெக்ஸ் சாண்டர்' படத்தை இயக்கி வருபவர் கேயார். அதனையடுத்து கேயார் இயக்க, ராம்கி கதாநாயகனாக நடிக்கும் படம், 'எனக்கொரு மகன் பிறப்பான்' ராம்கிக்கு ஜோடியாக இரண்டு கதாநாயகிகள் நடிக்கவுள்ளனர்.

படத்தின் கதைதான் ஒருமாதிரியாக இருக்கிறது. ஒரு குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தொடர்ந்து பெண் குழந்தைகளே பிறக்கின்றன. தமது மகன்மார் ஆண் குழந்தை பெறவேண்டும் என்று பெற்றோர் ஆசைப்படுகின்றனர். "ஆண் குழந்தை பெற்றுத்தருபவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் தரப்படும்." என்று அறிவிக்கிறார்கள். அதன்பின்னர் மகன்மார் மத்தியில் போட்டி ஆரம்பமாகிறது. நகைச்சுவையான கதையாம்.

ஆர். சுந்தர்ராஜன், செந்தில், விவேக், சின்னிஜெயந்த், வடிவுக்கரசி ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை, கார்த்திக்ராஜா, வசனம், பிரசன்னா. பாடல்கள் வாலி.

# பல அவதாரம்

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் விஜயகாந்த்-ரோஜா நடிக்கு... படம் 'தர்ம சக்கரம்'. படத்தில் இடம்பெறும் சகல பாடல்களை... இயக்குநர் ஆர்.வி.உதயகுமாரை எழுதவைத்துள்ளார் கே.எ... ரவிக்குமார். இசை தேவா.

சின்னராமசாமி, பெரியராமசாமி, படத்தில் இரண்... கதாநாயகன்களில் ஒருவராக நடித்துவரும் உதயகுமார் சொந்தம... ஒரு படம் தயாரிக்கிறார். படத்தின் பெயர், 'வெள்ளி நிலா'... இயக்குநர், பாடலாசிரியர், நடிகர், தயாரிப்பாளர் என்று ... அவதாரங்களை எடுத்துள்ளார் உதயகுமார்.

# கண்ணனின் கன்னடப்படம்

அசோக்குமார், பி.சி.ஸ்ரீராம், அப்துல் ரகுமான் ஆகிய ஒளிப்பதிவாளர்களைத் தொடர்ந்து பாரதிராஜாவின் ஆஸ்தான ஒளிப்பதிவாளரான கண்ணனும் படமொன்றை இயக்கவுள்ளார். இவர் இயக்குவது கன்னடப்படத்தை.

# தெலுங்கிலும் சாதனை

இந்தியில் வசூலில் சாதனை படைத்த படங்களான 'ஹம் ஆப்கே ஹைன் கோன்', 'தில்வாலே துல்ஹானியா லே ஜாயங்கே' ஆகிய இரண்டும் தெலுங்கில் முறையே 'பிரேமாலயம்', 'பிரேமிஞ்சி பெல்லதுதா' ஆகிய பெயர்களில் மொழிமாற்றப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த இரண்டு படங்களும் நேரடி தெலுங்குப் படங்களுக்கு நிகராக ஓடி வசூலில் சாதனை படைக்கிறதாம்.

# மூன்று 'பா'க்க...

'லவ் பேர்ட்ஸ்' படத்... தயாரித்த கவிதால... நடராஜன் அடுத்து இ... படங்களைத் தயாரி... வுள்ளார்.

இவற்றில் பாரதிராஜா, பாலுமகேந்திரா, பாக்யராஜ் மூவரையும் இணைத்து ஒரு படத்தை உருவாக்க இருக்கிறார்.

# யுவன் சங்கரின் புதியபடம்

சரத்குமார்-பார்த்திபன் நடிக்கும் 'அரவிந்தன்' படத்திற்கு இசையமைத்து வரும் இளையராஜாவின் இரண்டாவது மகன் யுவன் சங்கர் ராஜா அடுத்து புதிய படமொன்றிற்கும் இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தப் படத்தில் பிரபு தேவாவின் சகோதரர் ராஜுசுந்தரம் நாயகனாக நடிக்கிறார்.



கார்த்திக்-ரக்ஷனா படம் பூவரசன்

**முகப்பில் விஜய் - இந்திராஜா**

www.padippakam.com

## ...ருது/ 4

...ருதுகளில் இம்முறை அதிக

...-தீபன். கலை-சாபு சிரில்,

... பெற்ற படம் 'காலாபாணி'
...ன் ஓடிக்கொண்டிருக்கிறது.
...ா ரசிகர்களிடமும் பலத்த

## ...ராவுக்கு பரிசுகள்

...க நடனக்குழுவை ஆரம்பித்த
...டு பிஸி. அவரது நடனத்தை
...காண பிரபல பிரமுகர்கள்
...கிறார்களாம். விசித்ராவின்
... கண்டு பிரமிக்கும் பிர
... பெறுமதியான பரிசுகளை
... கொண்டிருக்கிறார்கள்.
...லேயே இப்படி என்றால்
...ளுக்கும் சென்று 'கலைச்
...ரிந்தால் நிறைய சம்பாதிக்
...ற கனவில் இருக்கிறார்

...பின் வாய்ப்புக் குறைந்தாலும்
...லைத் திறமை இருப்பதால்
...கொள்ளமுடிகிறது.




## மி னி சி னி

* ரஜினியின் 'வள்ளி'யில் அறிமுகமான பிரியா ராமன் மலையாளம், தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழில் 'உளிச்சத்தம்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இதில் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கிறார்.

* மலையாள இயக்குநர் பிரியதர்ஷனின் இயக்கத்தில் 'காலாபாணி' (சிறைச்சாலை) படத்தில் நடித்துள்ள பிரபு, அடுத்து பிரியதர்ஷனின் இயக்கத்தில் தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தை சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரிக்கவுள்ளது.

* சில படங்களில் பின்னணி பாடி வந்த இசையமைப்பாளர் தேவா, தற்போது இசையமைத்து வரும் 'காதல் கோட்டை' படத்திற்காக மூன்று பாடல்களையும் எழுதி இருக்கிறார்.

* பிரபுவின் 'பரம்பரை' படத்தில் வில்லனாக அறிமுகமான நடன இயக்குநர் தருண்குமார், விரைவில் படமொன்றை இயக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்.

* எழுத்தாளர் பாலகுமாரன் இயக்கத்தில் கே.பாக்யராஜ்-ஷோபனா நடித்த 'இது நம்ம ஆளு' படத்தை தெலுங்கில் தயாரித்து வருகிறார்கள். பாக்யராஜ் வேடத்தில் மோகன்பாபுவும், ஷோபனா வேடத்தில் ரம்யா கிருஷ்ணனும் தெலுங்கில் நடிக்கிறார்கள்.

* படங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் ஃபிலிம் சேம்பரில் சமீபத்தில் 'இடியட்' என்ற புதிய படம் ஒன்றின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

* அர்ஜுன் நடிக்க ஆர்.வி.உதயகுமார் இயக்கும் படத்திற்கு 'ஆகஸ்ட் 15' என்று பெயர் வைத்தார்கள். அந்தப் பெயரில் வேறொரு படம் தயாரிக்கப்பட்டு வருவதால், தற்போது 'சுபாஷ்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

* தெலுங்கில் நடித்து வரும் பானுச்சந்தருக்கு அங்கு கைவசம் படங்கள் இல்லை. எனவே சொந்தமாகப் படமொன்றைத் தயாரித்து நடித்து வருகிறார். 'காம ரெட்டி' என்ற பெயரில் உருவாகும் இப்படத்தின் கதாநாயகி 'கருத்தம்மா' ராஜஸ்ரீ.

* மம்முட்டி நடித்த 'கிங்' படத்தை அடுத்து மலையாளத்தில் சுரேஷ்கோபி-ரம்யா கிருஷ்ணன் இணைந்து நடிக்கும் புதிய படமொன்றை இயக்கி வருகிறார் ஷாஜி கைலாஷ். படத்தின் பெயர் 'மகாத்மா'.

* கன்னடத்தில் 'அரண்மனைக்கிளி' அகானா நடித்த 'பிரம்மா' என்ற படம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பல புதிய கன்னடப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## பூஜாவின் புது நட்பு

'கட்டிக் குழந்தை' படத்தில் நாகர்ஜுனின் ஜோடியாக நடித்திருப்பவர் பூஜாபட்ரா. (பூஜாபட் அல்ல) பம்பாய் படவுலகில் பூஜாபட்டுக்கு சகல சமாச்சாரங்களிலும் போட்டியாக முளைத்திருப்பவர் பூஜாபட்ரா.

பூஜாபட்ராவுக்கு ஆண்களைக் கண்டால் இப்போதெல்லாம் பிடிப்பதில்லை. நடிகையாவதற்கு முன்னர் ஜெர்மனியில் ஒரு டாக்சி டிரைவரை காதலித்தார் பூஜா பட்ரா. "'செக்ஸ்' விடயத்தில் கட்டுப்பாடாக இருக்க முடியவில்லை." என்று பேட்டி கொடுத்து பம்பாய் படவுலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியவரும் பூஜாபட்ராதான்.

இப்போது ஆண்களை கண்டு ஒதுங்கும் பூஜாபட்ரா பெண் தோழிகளுடன் மட்டுமே நெருங்கிப் பழகி ஓய்வைக் கழிக்கிறாராம். தனது காதல் விவகாரங்களை ஒளிவு மறைவின்றி தோழிகளிடம் பகிர்ந்து கொள்கிறாராம்.

## சினிவிசிட்

## மீண்டும் அதே ஜோடி

ரிஷிகபூர்-மாதுரி டிக்ஷித் நடித்த 'பிரேம் கிராந்த்' வசூலுக்கு பாதகம் இல்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

காதலுக்கு ஜாதி, மதம், நிறம் தடையில்லை என்பதை சொல்லும் கதைதான் பிரேம் கிராந்த். ரிஷிகபூர், மாதுரி டிக்ஷித் இருவரும் நன்றாக நடித்துள்ளனர். மாதுரியின் இளமையும் ரசிகர்களுக்கு போனஸ்.

ரிஷிகபூர், மாதுரி டிக்ஷித் நடித்து அடுத்து வெளியாகப் போகும் படம் 'யாரணா'. 'பிரேம் கிராந்த்' நன்றாக ஓடுவதால் சூட்டோடு சூடாக யாரணாவையும் வெளியிடத் தீர்மானித்துள்ளார்.



## "எல்லாமே ரஜினிதான்"

கராத்தே வீரரும், கராத்தேயில் பல சாதனைகளைப் படைத்தவருமான ஹுசைனி கதாநாயகனாக நடிக்கும் படம் 'எல்லாமே ரஜினிதான்.' அவரது ஜோடிகளாக சுவாதி, வாணி விஸ்வநாத் ஆகியோர் நடிக்கின்றனர்.

படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது. ஆனந்தராஜ், வடிவேலு உட்பட பலர் நடிக்கின்றனர்.

இயக்கம், அலெக்ஸ் பாண்டியன். கதை, வசனம், அமுதா துரைராஜா, இசை: ஆதித்யன்.

## ரேகா 42

இந்தி நடிகை ரேகாவுக்கு தற்போது 42 வயது. இப்போதும் இளம் ஹீரோக்களுடன் கிசுகிசுக்கப்படுகிறார். அதுமட்டுமல்ல தனது உடல் அழகு விடயத்திலும் மிகக் கவனமாக இருக்கிறார்.

தனது ஹேர்ஸ்டைலை அடிக்கடி மாற்றிக்கொள்கிறார் ரேகா.

அதுமட்டுமல்ல, பம்பாய் சினிமா இதழ் ஒன்றுக்கு சமீபத்தில் அட்டகாசமான போஸ் எல்லாம் கொடுத்திருக்கிறார் ரேகா. 42 வயதென்றால் நம்புவீர்களா? என்று கேட்பது போல இருக்கிறது ஒவ்வொரு தோற்றமும்.

## குஷ்பு சிபாரிசு

தனது காதலர் சுந்தருக்காக அயராது உழைக்கிறார் குஷ்பு. இந்திப் படத்தயாரிப்பாளர் ஒருவரோடு தனக்குள்ள செல்வாக்கைப் பயன் படுத்தி சுந்தருக்கு இந்திப்படம் இயக்கும் வாய்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

சுந்தருக்காக ரஜினியிடமும் சிபாரிசு செய்திருக்கிறாராம் குஷ்பு. நேபாளம் சென்று வந்த பின்னர் பார்த்துக்கொள்ளலாம். முதலில் கதை கேட்க வேண்டும் என்று பட்டும் படாமல் பதில் சொன்னாராம் ரஜினி.

குஷ்பு-சிவகுமார் நடித்த 'நாட்டுப்புறப்பாட்டு' வெற்றிவிழா கொண்டாடியிருக்கிறது. சுந்தர் இயக்கிய 'உள்ளத்தை அள்ளித்தா' படமும் சக்கை போடு போடுகிறது. இரண்டுக்குமாக சேர்த்து சுந்தருக்கு குஷ்பு ஒரு பரிசு கொடுத்திருக்கிறார். அது ஒரு வைர மோதிரம்.

## மீனா தகராறு

'வள்ளல்' படத்தில் சத்யராஜுடன் மீனா, ரோஜா, சங்கீதா மூவரும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இப்போது மீனா தகராறு செய்கிறாராம். தனது பாத்திரத்தைவிட சங்கீதாவுக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்பது மீனாவின் வருத்தம்.

தயாரிப்பாளர் இராமநாதன் தர்மசங்கடத்தில் இருக்கிறார். மீனாவுக்காக கதையை மாற்றுவதா, அல்லது மீனாவை கழற்றி விடுவதா என்று யோசித்துவருகிறார்.

## மனிதனை சாகடிப்பது வீரமல்ல
## கவலை தெரிவிக்கிறார் கமல்

தமிழக பத்திரிகை ஒன்றுக்கு கமல் அளித்துள்ள பேட்டியில் வழக்கம்போல வித்தியாசமான கருத்துக்களை சொல்லியிருக்கிறார். கமல் சொல்வதை படியுங்கள்.

"பொது வாழ்க்கைக்கும், தனி வாழ்க்கைக்கும் இடையில் இருந்த இடைவெளி சுருங்கிவிட்டது. ஆகவே யாரையும் குற்றம் சொல்வதில் பயனில்லை. ஒவ்வொருவருமே தங்கள் சூழலை நேர்மையானதாக மாற்ற முயல வேண்டும்.

ஜன்னல் வழியாக எச்சில் துப்பிவிட்டு, தன்வீடு சுத்தமாக இருப்பதாக நினைப்பது முட்டாள்தனம்.

என்னுடைய வீட்டுக் கழிவறையை நான்தான் சுத்தம் செய்கிறேன். அல்லது என் மனைவி கவனிப்பார். இதெல்லாம் வேறு எவரோ செய்கிறவேலை என்று எண்ணத்தை மாற்றிக் கொண்டது →

எனக்குள் நடந்திருக்கிற மாற்றம். வீட்டு சாக்கடை அடைத்துக் கொண்டால் அதனை சுத்தப்படுத்தும் அளவுக்கு நான் தயாராக இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அவசியம் ஏற்படும்போது அதற்கும் என்னை தயார்படுத்திக் கொள்வேன். மாற்றம் என்பது நம்மில் இருந்து துவங்கவேண்டும். மற்றப்படி இப்போ 'நாட்டுக்காக' என்ற பேச்செல்லாம் கபடத்தனமானவை.

மனிதன் சிங்கங்களையும் புலிகளையும் வேட்டையாடினான். அதனை வீரம் என்று கருதினான். ஆனால் தனது சக மனிதனைக் கொல்வதை எப்படி வீரம் என்று எதிர்பார்க்க முடியும்.

மனிதன் பேனாவால் சொல்லி சோர்ந்து விட்ட நிலையில் இனி துப்பாக்கியால்தான் கொல்ல முடியும் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். எனினும் மனிதனை மனிதன் சாகடிப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது." என்று சொல்லியிருக்கிறார் கமல்.

## நாயகியாகும் ஷாலினி

குழந்தை நட்சத்திரமாக நடித்து உள்ளத்தை அள்ளியவர் பேபி ஷாலினி. தற்போது வளர்ந்து பெரிய பெண்ணாகி விட்டார். விரைவில் ஒரு படத்தில் கதாநாயகியாக நடிக்கப்போகிறார்.

ஸ்ரீதேவியும் குழந்தை நட்சத்திரமாக இருந்து கதாநாயகியாக மாறிவர்தானே. பேபி ஷாலினியும் வெற்றிக் கொடி நாட்டுவாரா?



கமல்-மனிஷா
படம்: இந்தியன்

## பகை முறிவு

விஜயகாந்தும், நடிகை ராதிகாவும் ஒரு காலத்தில் நகமும், சதையுமாக இருந்தவர்கள். தன்னைத்தான் விஜயகாந்த் மணப்பார் என்று நம்பியிருந்தார் ராதிகா. விஜயகாந்துக்கு அந்த எண்ணம் துளியும் இல்லை. அப்போதும் தமிழக முதல்வர் கலைஞர்தான். அவரிடம் முறையிட்டார் ராதிகா. தலையிடமாட்டேன் என்று மறுத்துவிட்டார் கலைஞர்.

விஜயகாந்த்-ராதிகா உறவில் விரிசல். ராதிகா பின்னர் வெளிநாட்டுக்காரரை மணந்து கொண்டார்.

விஜயகாந்த்தும், ராதிகாவும் பேசிக் கொள்ளாமல் இருந்து வந்தனர். பொது இடங்களில் சந்தித்தாலும் முகத்தை திருப்பிக் கொள்வார்கள்.

இப்போது நிலமையில் மாற்றம். 8 ஆண்டுகளுக்கு பின்னர் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் இருவரும் சந்தித்தபோது, நட்புடன் பேசிக்கொண்டனர்.

## பெரிய மனுஷனாக சத்யராஜ்

நெப்போலியனை வைத்து எஸ்.ஏ.சந்திரசேகரன் 'பெரிய மனுஷன்' என்ற படத்தைத் துவக்கினார். பின்னர் இருவருக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சனையால் அந்தப்படம் கைவிடப்பட்டது. இப்போது அந்தப் பெயரை 'தாய்மாமன்' படத்தை இயக்கிய குருதனபால் வாங்கிவிட்டார். 'பெரிய மனுஷனாக' சத்யராஜ் நடிக்கவுள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

# வேண்டாம் திடீர் திருமணம்!

நீங்கள் திருமணத்திற்குத் தயாராக இருக்கும் பெண்களா? உங்கள் பெற்றோர் உங்களுக்கு மாப்பிள்ளை தேடுவார்கள். பெற்றோருக்கு மாப்பிள்ளையைப் பிடித்து விட்டாலும் திருமணம் செய்து கொள்ளப் போகும் உங்களுக்கு அதில் முழு சம்மதம் இருக்க வேண்டும். அதில் நீங்கள் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்:



வருங்காலக் கணவரைப் பற்றிய கற்பனை ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கும். அழகு மட்டுமன்றி புத்திசாலித்தனம், சுயமரியாதை, படிப்புத்திறமை, அன்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் உள்ளவராக நீங்கள் தேர்ந்தெடுக்கும் மணமகன் இருக்க வேண்டும்.

உங்களது பெற்றோர் தேர்வில் உங்களுக்கு முழுத்திருப்தி இருந்தாலும் எதற்கும் நீங்களும் ஒருமுறை மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டுச் சம்மதம் சொல்லுங்கள்.

திடீர் திருமணத்திற்கு எப்போதும் சம்மதிக்கக் கூடாது.

மணமகனாகப் போகிறவரின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கம், குணநலன்கள் போன்றவைகளோடு உங்கள் குணநலன்களையும் பழக்க வழக்கங்களையும் பொருத்திப் பாருங்கள். ஒற்றுமை இல்லாவிட்டால் திருமணம் கட்டாயமில்லை.

மனோரீதியாகவும், உடல் ரீதியாகவும் நீங்கள் தயார் இல்லை என்றால் திருமணத்திற்குச் சம்மதிக்க வேண்டாம்.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்போ அதற்கு முன்போ நட்பு ரீதியில் பேசிக் கொள்வதில் தப்பில்லை. அதன் மூலம் ஒருவர் இன்னொருவரைப் பற்றிப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

அடுத்தவர்களின் வற்புறுத்தலுக்காகப் பிடிக்காத ஒருவருக்கு நீங்கள் மனைவியாவது நல்லது அல்ல. உங்கள் வாழ்க்கையைப் பற்றி நீங்களே முடிவு செய்ய வேண்டும்.

# சின்ன சின்ன யோசனைகள்



★ நெடுநாள் குழந்தை இல்லாத தம்பதிகள் மாதுளம் பழத்தை முறையுடன் உண்டு வந்தால், கர்ப்பம் தொடர்பான சிறு தடை நோய்கள் விலகும்.

★ மயக்கம் உள்ளவர்களைத் தெளிய வைக்க வேண்டுமானால் வெங்காயத்தை நசுக்கி, மூக்கிற்கு அருகில் காட்டினால் மயக்கம் தெளிந்தவிடும்.

★ காலை, பகல், இரவு உணவுக்குப்பின் சிறிதளவு அன்னாசிப்பழத்தை அருந்தி வந்தால் ஜீரணக்குறைவு நீங்கும்.

★ பாலில் சீனியை விட தேன்கலந்து குடிப்பது மிகவும் நல்லது.

★ கொசு விரட்டும் சுருள்களை படுக்கைக்கு அருகில் வைக்காமல் மின் விசிறியின் ரெகுலேட்டரின் மீதோ டியூப்லைட்டின் சோக்கின் மீதோ வைத்தால் நல்லது.

★ குழந்தைகளை நன்றாகத் தூங்க வைக்கவேண்டும் எனில் பசும்பாலில் கற்கண்டையும், குங்குமப்பூவையும் போட்டுக் கொடுத்தால் குழந்தைகளின் உடலில் சூடு தணிந்து, நன்றாகத் தூங்கத் தொடங்கிவிடும்.

# பங்கமில்லாத தங்கம்

★ சுத்தமான, தரமான தங்கம் வாங்க வேண்டுமென்றால் நகைக்கடைகளில் காடியம் சோல்டர் தங்கம் என்று கேட்டு வாங்க வேண்டும்.

★ எப்போதும் 22 கரட் மதிப்புள்ள நகைகளை வாங்குவது நல்லது.

★ கல் பதித்த நகைகளை வாங்கும் போது, ஒவ்வொரு கல்லின் தனி மதிப்பையும் கணக்கிட்டுத் தெரிந்து கொண்டு வாங்க வேண்டும்.

★ தங்கம் சுத்தமானதுதானா என்று சோதித்துப் பார்த்து விட்டு வாங்குவது பாதுகாப்பானது.

★ கூடிய வரையில் கல் பதித்த நகைகளை வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது.

★ நெக்லஸ் போன்ற அதிக எடையுள்ள நகைகளை வாங்கும்போது அவற்றில் பொடி இல்லாமல் கெட்டித் தன்மை உடையனவையாகப் பார்த்து வாங்க வேண்டும்.



★ அதிக விலையுள்ள நகைகளை வெல்வெட்டுடன் கூடிய மரப்பெட்டிகளில் வைக்க வேண்டும்.

★ அடிக்கடி நகைகளுக்கு பொலிஷ் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

★ தங்க நகைகளைச் சாதாரண சோப்புக் கலந்த வெந்நீரில் போட்டுச் சுத்தம் செய்யலாம். வெள்ளி நகைகளின் மீது சிறிதளவு பற்பசையைத் தடவி ஊறவைத் துப் பிறகு நிறைய தண்ணீர் விட்டுக் கழுவிச் சுத்தப்படுத்தலாம்.

★ நகைகளில் பதித்துள்ள கற்களில் எண்ணெய் இறங்கியிருந்தால் அவற்றை பொலிஷ் செய்யக் கடைகளில் கொடுக்கலாம். பொலிஷ் செய்யக் கொடுப்பதற்கு முன் நகைகளை எடை போட்டுக் கொண்டு கொடுப்பது நல்லது.

# தாழ்வு மனப்பான்மையா?

தாழ்வு மனப்பான்மை என்பது கெட்ட வியாதி. சமயத்தில் அதுவே நம் கழுத்தை அறுக்கும். காலை வாரிவிடும். அதனால் தாழ்வு மனப்பான்மையை வளரவிடாமல் முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும்.

நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால், தாழ்வு மனப்பான்மையை ஒழித்துக்கட்ட வேண்டும்.

தாழ்வு மனப்பான்மை என்றால் எப்படியிருக்கும் என்று தெரிந்தால்தானே, அதனை ஒழித்துக்கட்டலாம் என்று நினைக்கிறீர்கள் அல்லவா?

தாழ்வு மனப்பான்மையின் அறிகுறிகள் சிலவற்றைக் கீழே தருகிறோம்.



★ சிறிய தவறு செய்துவிட்டால் போதும், கொலையே செய்துவிட்டதைப் போன்ற பயம் ஏற்படும்.

★ முகம் பார்த்து பேசுபவரிடம்கூட முகம் பார்த்துப் பேசக்கூசும்.

★ கண்ணாடியின் முன் தன்னைப் பார்க்கவே பிடிக்காது.

★ சுவையான நிகழ்ச்சிகள், சுவாரசியமான சம்பாஷனைகள் என்பவற்றில் கவனம் இருக்காது.

★ இன்னாரிடம் இப்படிப் பேசவேண்டும் என்று கற்பனை செய்துகொண்டு போனால், அவரைக் கண்டதும் கையும் ஓடாது. காலும் ஓடாது. வாய் ஊமையாகி விடும். ஏன் வந்தோம், எதற்கு வந்தோம், அவர் என்ன சொல்லப்போகிறாரோ? என்று நினைக்கத் தோன்றும்.

★ இரவில் கட்டும் மனக்கோட்டை எல்லாம் விடிந்ததும் தூளாகிவிடும். தைரியம் தொலைந்து போயிருக்கும். நாளை பார்க்கலாம் என்று ஒத்திப்போடும்.

★ முக்கியமானவர், உறவினர் யாராவது இறந்துபோனாலும் அதிர்ச்சி ஏற்படுவதில்லை.

எடுத்துக்கொண்ட காரியங்களில் தோல்வி ஏற்படும்போது தாழ்வு மனப்பான்மை தொற்றிக்கொள்ளும்.

படுக்கையில் தூக்கம் வராது. புரண்டு புரண்டு படுக்க வேண்டியிருக்கும். தலையணையை மடக்கி சுருட்டி படுக்கச் சொல்லும். இவையெல்லாம் தாழ்வு மனப்பான்மைக்குள் விழுவதற்கான அறிகுறிகள்.

மனதை திடமாக வைத்திருங்கள். நீங்கள் யாருக்கும் தாழ்ந்தவரல்ல என்பதை மறவாதிருங்கள்; தாழ்வு மனப்பான்மை நெருங்கவே நெருங்காது.

# சின்னக் குழந்தைகளுக்கு என்ன உணவு?
## தாய்மார்களுக்கு தகுந்த ஆலோசனை

குழந்தைகளின் உணவு தயாரிப்பதற்கு பெரிய திறமையோ, அதிகளவு நேரமோ தேவையில்லை. பொது அறிவு, சிறிது கற்பனை, சுத்தம், சுகாதாரம், நல்ல தரமான பொருட்கள் போதும்.

தயாரித்த நிலையில் உள்ள உணவுகளைக் கடைகளில் வாங்கிக் கொடுப்பது சுலபமாக இருக்கலாம். ஆனால் நாமே தயாரித்து அளிக்கும் உணவு வகைகளுக்கு இவை ஒரு போதும் ஈடாகாது.



பயணத்தின் போதும், அவசரமான சமயங்களிலும் மட்டுமே, தயாரித்த நிலையில் உள்ள உணவுகளைக் கொடுப்பது என்ற நிலைக்கு வருவது நல்லது.

பணவசதி அதிகமில்லாதவர்கள் கூட இத்தகைய உணவுகள் தான் குழந்தையை ஆரோக்கியமாக வளர்க்க உதவுபவை என்ற மாயையில் சிக்கியுள்ளது மிகவும் வேதனையான விஷயம்.

பத்து மாதத்திற்கு மேல் 1 வயதிற்குள் காலையில் இட்லி, இடியப்பம் போன்ற உணவுகள், மதியம் காய்கறிகளுடன் பருப்பு, கீரை, இரவு கஞ்சி போன்ற வழக்கத்தை அனுசரிக்க முயலவேண்டும். பாலை ஒரு நாளைக்கு மூன்று முறையாகக் குறைத்து விட வேண்டும். பழம், பழரசம் ஒரு வேளை கொடுக்கலாம். அடிக்கடி நீர் அருந்தக் கொடுக்கவேண்டும்.

குழந்தைகளின் உணவை மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொடுக்கக் கூடாது. குழைய வடித்து, கரண்டியால் மசித்துக் கொடுப்பதுதான் சரியான முறை.

குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவின் அளவு மிகவும் அதிகமாக இருக்கக் கூடாது. புதிய புதிய உணவுகளைக் கொடுக்க ஆரம்பிக்கும்பொழுது ஓரிரண்டு வாரங்கள் இடைவெளி கொடுப்பது மிகவும் அவசியம்.

குழந்தைகளுக்கு ஒத்துக் கொள்ளாத உணவைத் தவிர்க்க வேண்டும்.

சில குழந்தைகளுக்கு ஜீரணசக்தி சிறிது குறைவாக இருக்கும்.

இத்தகைய குழந்தைகளுக்கு எளிதில் ஜீரணமாகக்கூடிய இலகுவான உணவுகளை மட்டுமே கொடுத்து வரவேண்டும். மருந்துகளினால் உபயோகம் இல்லை.

குழந்தைகளுக்கு முட்டை மற்றும் அசைவ உணவுகளை கூடப் பொறுத்திருந்து தான் கொடுக்க வேண்டும்.

10 மாதங்களுக்குப் பின் முட்டை கொடுக்க ஆரம்பிக்கலாம். சூப் போன்ற அசைவ உணவுகளைக் கொடுக்கலாம். மற்ற உணவுகளை ஒரு வருடத்திற் குப்பின் கொடுப்பது நல்லது.

சரிவிகித உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு விட்டமின் மருந்துகள் தேவையில்லை. ஆனாலும் நடைமுறையில் இது எப்பொழுதும் சாத்தியமில்லாததால் முதல் ஒரு வருடம் வரை ஒரேயொரு சொட்டு மருந்து கொடுக்கலாம்.

எல்லாக் குழந்தைகளுக்கும் முதல் இரண்டு மாதங்களுக்குப் பிறகு இரத்தத்தின் அளவு சற்றுக் குறைகிறது. பின்பு ஓரிரு மாதங்களில் சரியாகி விடுகிறது. இந்தக் காலகட்டத்தில் சில குழந்தைகளுக்கு அதிலும் முக்கியமாகக் குறை மாதக் குழந்தைகளுக்கு இரும்புச் சத்துத் தேவைப்படுகிறது.

பொதுவாகக் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது மிகவும் இன்பமளிக்கக் கூடிய செயல். குழந்தைகள் நன்றாக வளர்ந்து வருவதில் கிடைக்கும் இன்பம் வேறெதிலும் இல்லை. இதில் ஆரோக்கியமான வளர்ச்சியாகச் செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது.

# நக நயம்

பெண்களுக்கு நகங்கள் அழகுப் பொக்கிஷங்கள். காதலன், காதலியின் கைகளையோ, கணவன், மனைவியின் கரங்களையோ பற்றும் போது முதன் முதல் அவன் கண்களில் படுவது பெண்ணின் நகம் தான்.

சுகாதாரமான நகங்கள் மென்மையான பெண்ணுக்கு மேலும் அழகு சேர்ப்பவை.

மிருதுவற்ற கரங்களில் அழகற்ற நகங்களைக் கொண்ட பெண்கள் எத்தனைதான் அழகான உடைகள் உடுத்தினாலும் பரிமளிக்க முடியாது.

ஆகவே நங்கையர் நகங்களுக்கும் நேரத்தைச் செலவிடுவது நியாயமே.

நகங்களுக்கு பொலிஷ் போடுவது நாகரீகம் மட்டுமல்ல, நகங்களைச் சீரோடும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும்.



நக பொலிஷ் போடும் சில வழி முறைகளைப் படங்களுடன் தருகிறோம்.

தேவையானவை: மிருதுவான பஞ்சு, நக பொலிஷ், நகத்தேய்ப்பு அட்டை, கத்தரி.

1. பழைய பொலிஷை நீக்குங்கள்.
2. நகங்களை உடையாமல், பிளக்காமல் ஒரே ஷேப்பில் தேய்த்துப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள்.
3. நகங்களை இறுக்கிப் பிடிக்கும் தோல் பகுதிகளை மிருதுவாக்கிக் கொள்ளுங்கள்.
4. வெதுவெதுப்பான சோப் அல்லது ஷம்பு நீரில் விரல்களைத் தோய்த்துச் சுத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.
5. தேவையற்று நீண்டு சிறுத்து நிற்கும் நகப்பகுதிகளைக் கத்தரியுங்கள்.
6. மிருதுவான கிறீமை சமமாகப் பரப்புங்கள்.
7. அடித்தள கிறீமை நகங்களில் உலர விடுங்கள்.
8. உங்கள் நிறத்திற்கேற்ப நக பொலிஷைத் தடவுங்கள்.

# உலக அழகி

மிஸ்.யுனிவேர்ஸ்-96 பட்டத்தை வென்ற வெனிசூலா அழகி அலிசியாவுக்கு 19 வயதுதான் ஆகிறது. நிர்வாகயியல் படிக்கும் மாணவி.

உயரம் 1.75 மீட்டர். 'செமகட்டை' என்று சொல்லுவார்களே அந்த மாதிரி உடலமைப்பு.

பொம்மை வியாபாரியின் மகள் என்பதாலோ என்னவோ அசல் மெழுகு பொம்மை மாதிரித்தான் இருக்கிறார். கண்களை உருட்டிச் சிரிக்கும் போது அவர் அழகில் எல்லோரும் மயங்கி விடுகிறார்கள்.

உலக அழகியானதும் நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு பேட்டி கண்டனர். "உங்களது உடனடி அடுத்த திட்டம் என்ன?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

அதற்கு அலிசியா, "அழகி பட்டத்தைப் பெற வேண்டும் என்பதற்காக 3 வாரமாகச் சரியாகத் தூங்கவில்லை. எனவே நல்லா சாப்பிடுவேன். தூங்குவேன். சாப்பிடுவேன். தூங்குவேன்," என்றார்.




## சமைப்போம் சுவைப்போம்
[தொகுத்துத் தருவது-சுகந்தினி]

### பனானா கோக்கனட் பேர்பி

தேவையான பொருட்கள்:-
வாழைப்பழம்- 2
தேங்காய்த் துருவல்- 1
கோதுமை மாவு-1/2 கப்
சீனி- 1 கப்
முந்திரிப் பருப்பு- 10
நெய்- 1/2 கப்
பால்- 1 கப்

செய்முறை:-
வாழைப்பழத்தைத் தோலுரித்து, மிக்ஸியில் நன்றாக அரைக்கவும். அதனுடன் வறுத்த கோதுமை மாவு, சீனி சேர்த்துக் கலக்கவும், நன்றாகக் கலக்கி அடிப்பிடிக்காத கனமான பாத்திரத்தில் வைத்துக் கிளறவும். தீயை மிதமாக எரிய விடவும். நெய்யை உருக்கி ஊற்றிக் கிளறவும், சுருண்டு வரும் சமயம், நெய் தடவிய தட்டில் கொட்டிப் பரப்பவும். முந்திரிப்பருப்பை சீவி, கலவையின் மேலே தூவி விடவும். ஆறிய பின் வில்லைகள் போடவும்.

# ஆடு களத்தில் புதுமுகம்

பரஸ் மாம்பிரே-பெயரைக் கேட்டதுமே உங்களுக்குத் தெரிந்திருக்கும், இவர் இங்கிலாந்தில் விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருப்பவர் என்று. 24 வயதேயான இந்த இளைஞர் பம்பாய்க்காரர்.



கடந்த ஆண்டு நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டிக்கு முதன் முதலாக இவரைத் தேர்வு செய்தனர். பரவாயில்லை என்று சொல்லும்படி விளையாடினார். அப்போது 13 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். உடனே எல்லோரும், "அடடே பரவாயில்லையே," என்றனர்.

அதன் விளைவாக இந்திய அணியில் இடம் பெற்றுள்ளார். இவரது வேகப்பந்து வீச்சு கொஞ்சம் வித்தியாசமாக உள்ளது.

தினமும் நான்கு மணிநேரம் கஷ்டப்பட்டுப் பந்து வீசி இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தி இருப்பதாகக் கூறினார்.

இங்கிலாந்து வீரர்களுக்கு இவர் புதியவர் அல்ல. 2 ஆண்டுகளுக்கு முன்பு கவுண்டி அணிகளில் விளையாடி 60 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

இவரிடம் உள்ள இன்னொரு சிறப்பு பேட்டிங்கிலும் சிறந்து விளங்குவது. இதற்காக அடிக்கடி டெண்டுல்கரிடம் யோசனை கேட்டுக் கொள்கிறார்.

இங்கிலாந்துப் பயணம் மாம்பிரேயின் வாழ்க்கையில் முக்கியமான கட்டமாகும். இங்கிலாந்தில் இவரது ஆட்டம் நன்றாக இருந்தால் தான் இவரது கிரிக்கெட் வாழ்க்கை ஜொலிக்கும்.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பூண்டுலோயா வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | திருமதி. கே. சுலோசனாதேவி<br>பேர்ன்லண்ஸ் எஸ்டேட், பூண்டுலோயா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** U

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-06-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

## மாலை சூட வா

வார்த்தைக்குள் வர்ண ஜாலம் குழைத்து
என்னை வளைத்துப் போட்டவளே.....!
வானவில்போல் ஏனடி மறைந்து போனாய்...?
என்னைமறந்து போனாய்....?

சிருங்காரப் பூக்களின் சிருஷ்டிப்புக்குள்
மனம் சிலிர்க்க வைத்த
கறுப்பு ரோஜா நீ....!
கண் ஓர ஜாடையில்
கனிமொழி, உன்இதழ் மேடையில்
விழி வரைந்த காதல் நடனம் -
கண் பார்க்காமல் திரையிடலாமா....?

பூவனத்தில் தெரிந்தெடுத்த கருமைப் பூவுக்கு
இனி வசந்த காலம் என்ற எண்ணத்தை
உலுப்பி உலுப்பி இலையுதிர் காலமாக்கி
கிளைகளே இன்றி வேரையே அசைய வைக்கும்
வேடிக்கை ஏன்....?

பூக்களும் வேஷம் போடுமா...?
ஒரே நிறம் ஒரே குணம்
இல்லை நாளுக்கு நாள் நிறம் மாறுமா....?

ரோஜாவின் கண்கள் நாணத்தில் சிவந்திருக்கும்;
ஏனடி இன்று என்னைப் பார்த்து கோபத்தில் சிவக்கிறாய்.?
இந்தப் பாவலன் பேனாவை வெறுத்து,
திருவோடு எடுத்ததே உன் காதல் பிச்சைக்காகத்தான்!

பார்வையில் பரவசம் இல்லை...என்னடி...?
வேஷப் போர்வைக்குள் வியர்வை....,இந்த
முள்ளே மலர்ந்தது உன் முகம் பார்த்து,
கள்ளுண்டது உன் சொல் கேட்டு;
தள்ளாதே! உன் வெறுப்பால் எனை கொல்லாதே!
உன் நினைவுக் குருவி இடம் மாறும் போது,
என் இதயக் கிளை முறிந்து சரிகிறது- என்
காதல் குருவி காற்றடிக்கும் திசைகளில்
பறப்பதா......?

சா ஒன்று வரும் வரை
சத்தியமாய் பார்த்திருப்பேன்...!
என் நினைவுப் பூவே!
நீ வரும் வரை என் பாதை திறந்திருக்கும்!
வா....பார்வையால் மாலை சூடவா....
இல்லை பாதையையே மூடிவிட வா!

ஜெயந்தி ஜெய்சங்கர், கொழும்பு-13

## மௌனம்

இடை
ஒடிந்துபோவது போல்
இருக்கும்!
**
தாவணி
வெட்கப்படும்!
**
சடைகள்
நாட்டியமாடும்!
**
பாவாடை
பாதங்களைத்
தேடவைக்கும்!
**
என்னோடு
மட்டும்
கண்கள்
பேசும்!
**
இதழ்கள்
ஏதோ
சொல்லப்பார்க்கும்!
**
அதற்குள்
கனவு
கலைந்து போகும்!

எஸ். பிரபா.

காதலா! அன்று
உன் பாதம் படாதவரை
இராமன் பாதம் தீண்டா
அகலிகை போல் கிடந்தது;
என் மனைவாசல் மட்டுமல்ல,
மனவாசலும் தான்!

தினம் மாலை வேளையில்,
ஓர் வித்தியாசம்.....!
என் தோட்டத்துப் பூக்களில்,
தோட்டத்தில் வீசும் தென்றலில்,
முற்றத்து மாமரக் குயிலின் பாடலில்,
தெரிந்து கொள்கிறேன்,
நீ வருகிறாய் என்று!

உன் வருகையால் மலர்ந்தது-
தோட்டத்து பூக்கள் மட்டுமல்ல!
மகிழ்ந்தது என் மனமும் தான்!
உன் விரல்கள் தட்டியது என் வீட்டு
மரக்கதவை மட்டுமல்ல,
என் மனக்கதவையும் தான்!

உனக்கென்று திறந்துவிட்டேன்.....
முதலில் மனக்கதவை!
பின் மரக்கதவை;
உன் அனுமதியின்றியே குடிவைத்தேன்
உன்னை-என் உள்ளமதில்!
உன் அன்பை வாடகையாய் நீ
தந்ததால்...!

நீ தொட்டுவிட்டுப் போன ரோஜாவை
சூடியதால் குளிர்ந்தது என்
கூந்தல் மட்டுமல்ல,
கூச்சத்தால் சிலிர்த்தது என்
உள்ளமும் தான்!
குறும்பான உன் விரல்கள் தொட்ட
ரோஜாவும் குறும்பு செய்கின்றது,
என் கூந்தலில்....!

## துயரங்கள்

நீ நடந்த பாதச் சுவடுகள்
அழியாதிருக்க,
வேலியமைத்து விட்டேன்!
என் மனையை சுற்றி மட்டுல்ல,
மனதைச் சுற்றியும்!

இப்போது
நீ அருகிலில்லா இந்நாட்களை
நீ தந்துவிட்டுப் போன
உன் நினைவுகளோடு
கழி(ழி)க்கிறேன்!

உன் பாதங்கள் வெகுநாட்களாய்
தன்னில் படவில்லை என்ற துயரால்
வெளிறிப்போனது- நீ அழகென்று
கூறும் புல் தரை மட்டுமல்ல,
என் இதயமும் தான்!

உன் மூச்சுக்காற்று படாமல்
செழிப்பிழந்தது தோட்டத்து பூக்கள்
மட்டுமல்ல,
மங்கை என் முகமும் தான்!

உன் முகம் காணாது
முற்றத்து மாமரத்து குயில்
முகாரியை
இசைக்கிறது;
என் மனதினைப் போலவே!

தினம் உன் வரவை எதிர்பார்த்து,
விழிவாசலை கண்ணீரால் கழுவ,
திறந்து வைத்திருக்கின்றேன்...

மனசு-நீர்கொழும்பு.

## பிரிவோம் வேறு வழியில்லை....!

பிரியமானவளே!
உன்னிடம்
ஒரு
விண்ணப்பம்....
என்னை மறந்து விடு!

இம் மண்ணில்
மதமும் சாதியும்
கைகோர்த்து திரியும் வரை
நம் கைகள் சேர
வழியில்லை!

நம்
காதலின் சின்னமாய்
உடம்பேற்ற
தழும்பை விட,
மனதில் விழுந்த
ரணங்களே
அதிகம்!

'தாழ்த்தப்பட்டவன்'
இம் மண் சொன்னாலும்,
உன்
மன சாம்ராஜ்ஜியத்தில்
எனக்கு
மகுடம் சூட்டியவளே!
உனக்காக தருவதற்கு
என்னிடம் எதுவுமில்லை.

அன்பைத்
தருவதற்கு இங்கு
அணைகள் பலவுண்டு;
உயிரைத் தரலாம்,
அதனால்
உனக்கேதும் இலாபமில்லை!

காதலி....!
நீயும் நானும்
நேசித்திருந்த
இம் மண்ணை விட்டு
விலகிப் போகிறேன்....
மனிதரைத் தேடி!

யுகங்கள் மாறலாம்
அதுவரை காத்திரு
நாம் கைகுலுக்கிக்
கொள்வோம்!

மட்டுநகர்-நர்மி

## தேன் கிண்ணம்

## உனக்குள் உறைபவன்.....!

### கவியரசு வைரமுத்து

அரசனே புலவனாய்
புலவனே அரசனாய்
எனக்குத் தெரிந்து
இருவரே தமிழில்.
★
அன்று..
ஆரியப்படை கடந்த
நெடுஞ்செழியன்!
★
இன்று
ஆயுதப்படை கடந்த
நீ
★
நீ
அவனினும் மிக்கவன்
அவன்
செங்கோல் பிடித்த குடியில்
எழுத்தாணி பிடித்தவன்!
நீயோ
எழுத்தாணி பிடித்த குடியில்
செங்கோல் பிடித்தவன்!
★
எனக்கு மட்டும்
உணரத் தெரியும்
உனக்குள் உறைபவன்
இரண்டு மனிதன்!
ஒருவன்
ஆயுதந்தாங்கி
வெளியே நிற்பவன்;
இன்னொருவன்
மயிலிறகு தாங்கி
உள்ளே நிற்பவன்!
★
வெளியே நிற்பவன்
தலைவன்;
உள்ளே நிற்பவன்
கவிஞன்!

அவன்தான் உனக்கு
ஈரம் தருகிறான்!

அவன்தான் உனக்கு
வீரம் தருகிறான்!

ஈட்டி முனையை
எழுதுகோலால்
தீட்டித்தீட்டி
தினமும் கொடுக்கிறான்!

அவன்
மல்லிகைப் பூவினும்
மெல்லிய மனிதன்!

ஆயுதம் தரிக்கும்
அவகாசத்திலும்
ஜன்னல் உரசும்
ரோஜா ரசிப்பவன்!

வாட்கள் உரசும்
போர்க்களத்திலும்
வானவில்லுக்கு
வணக்கம் சொல்பவன்!

பழைய நினைவுப்
பந்தலின் கீழே
சோகம் இறக்கி
சுகமாய் அழுபவன்!

தனது எழுத்தைத் தானே
ரசித்து
முற்றுப்புள்ளியில்
முத்தம் வைப்பவன்!

பச்சைப் புல்லின்
பனித்துளிகளை
சூரியச் சொட்டென்று
சொல்லி ரசிப்பவன்!

யுத்தம் ரத்தம்
எல்லாம் மறந்து
தமிழைத் தலைக்கு
வைத்துப் படுப்பவன்!

உணவோடு கலந்து
தோல்வியை விழுங்கி
உணவுக்கு முன்னே
தோல்வியை செரிப்பவன்!

வெற்றி என்பது
பொன்னாடை போல
உடம்பில் ஏற்பவன்
உடுத்தறியாதவன்!

வெளியே நிற்கும்
உன்னதக் கவிஞன்!

அவன்தான்-
முன்னால் நிற்கும்
தலைவனுக்குப்
பின்னால் இருக்கும்
பிராணவாயு!
★
உன்னை வாழ்த்துகிறேன்!
வாழ்த்துக்கும் வயதுக்கும்
சம்பந்தம் இல்லை!

கடவுளை
வள்ளுவன் வாழ்த்தலாம்;

கலைஞரை
வைரமுத்து
வாழ்த்தக்கூடாதா?

வாழ்த்துகிறேன்
ஆயின்
எதை வாழ்த்த..?

உன் விரல்கள் தாங்கும்
எழுது கோலையா?



இல்லை
எழுது கோல் தாங்கும்
விரல்களையா?

எதனையும் வாழ்த்தலாம்;
எழுதுகோலே
உன விரலாய்ப் போனதால்.

நன்றி:
கலைஞரின் கலையுலகப்
பொன்விழா மலர்.

## ஒரு நிமிடம்

இனியவளே!
எனக்கு-உன்னைப்
பிடித்திருக்கிறது;
உன்னை நான்
நேசிக்கிறேன்!

அதற்காக-
கண்ணின் மணியாக்கி
உன்னைக்
கொஞ்சிக் கொண்டிருக்க
முடியாது!

ஒன்றுமில்லாத நிலவாக,
உயிரற்ற ரதமாக,
உன்னை மாற்றவும்
விரும்பவில்லை!

தேவதையாக உன்னைப் பாடி
பூஜை செய்து கொண்டிருக்க
நேரமில்லை!
நீ-இதயமுள்ளவள்;
உனக்கும்
உணர்ச்சிகள் உண்டு;
இதயம் உடன்பட்டால்
விரைந்துவா!

ஓடிக்கொண்டிருக்கின்ற
உலகத்தில்
வாழ்க்கையை
வாழ்ந்து காட்டுவோம்;
சில தெரியாதவர்களுக்காக!!

அ. டக்ளஸ் ஜெய சேகரன்,
வவுனியா.

## அந்த ஒரு மணி நேரம்

காற்றையும்,
உன்னையும்
வேறு படுத்தாமல்,
படுக்கையில்
சுவாசித்துக்
கொண்டிருக்கிறேன்...!
0-0-0
நெஞ்சினுள்
நெஞ்சிமுள்ளாக
வதைக்கிறது
காதலின்
நினைவுகள்!
0-0-0
வேண்டாத இடத்துக்கு
வருகை தந்த
விருந்தாளி போல
எட்ட நிற்கிறது,
தூக்கம்.....!
0-0-0
இரவுப் பிரதேசத்தில்
ரகுமானின்
இசையை மிஞ்சியதாக
ரீங்காரமிடுகின்றது
சில் வண்டுகள்!
0-0-0
சிலந்தி வலையில்
சிக்கித் தவிக்கும்
சிறகுப் பூச்சி போல
தத்தளிக்கிறது மனது...!
0-0-0
விடியலுக்கு
முன்னறிவிப்பாக
வானத்து மூலையில்
ஜனனித்திருக்கிறது
விடி வெள்ளி...!
0-0-0
எனக்குள்ளேயே
பூத்துக் குலுங்கும்
காதல் நினைவுகளோடு
மின் நெருக்கடியை
தவிர்க்கத் தள்ளப்பட்ட
அந்த ஒரு மணி நேரமாவது
உறங்கப் போகின்றேன்...!

என். சஹாப்தீன், ஒட்டமாவடி.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 16.06.96 முதல் 22.06.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| இடபம் | - செவ்வாய், புதன், வெள்ளி. |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 8 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- செய்தொழில் விருத்தி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழிற் சிறப்பு, பணவரவு. | பி. ப. 2 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், தொழில் மந்தம். | காலை 8 மணி |
| வியாழன்-இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், மனக்கவலை நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பதிய முயற்சி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ச்சி நிலை, பெரியோர் நட்பு. | காலை 6 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- வீண் துயர், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், மனக் கசப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணச்செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழச்சி. | காலை 6 மணி |
| சனி- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரியானுகூலம் | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், அந்நியர் விரோதம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், அந்நியர் சகவாசம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், பிரயாண மிகுதி. | காலை 7 மணி |
| சனி- பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| புதன் - காரியானுகூலம், கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் நிலைமாறும், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பொருள் நஷ்டம், மனக்கவலை. | காலை 7 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் கலக்கம், உறவினர் பகை. | காலை 7 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்-பயனுள்ள செயல், மனக்குறை நீங்கும். | பகல் 1 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| சனி- பிரயான மிகுதி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழச்சி. | காலை 7 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, வீண் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவக்குறைவு. | பகல் 1 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள்வரவு. | காலை 7 மணி |
| புதன்- வீண் முயற்சி, மனக் கவலை. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வெளியிட வாழக்கை, மனமகிழச்சி. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, இனசன நன்மை. | காலை 7 மணி |
| புதன்- பயனுள்ள செயல், வீண் விரயம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் நஷ்டம், பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி-காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 2 மணி |
| சனி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. - 2 மணி |
| புதன்- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தூர இடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7


படிப்பகம்

www.padippakam.com





## குயிலோசை

நிறுத்தா திறகை வழங்கி வரும்
நேயா தியம்பம் குயிலோசை
வெறுக்கா துலகின் செவியிலிசை
விருந்து படைக்கும் குயிலோசை.

குறிப்பாய் மறைவில் அமர்ந்தபடி
கூவக் கேட்பது குயிலோசை
முறிப்பார் இன்றி முழங்கி வரும்
முதன்மைக் கீதம் குயிலோசை

பொறுப்பாய் வசந்தம் பிறந்தவுடன்
பூமிக்கு உணர்த்தும் குயிலோசை
சிறப்பாய் எவர்க்கும் குரலிருந்தால்
செப்பும் உவமை குயிலோசை

கறுப்பாய் உருவம், இருந்திடினும்
காதில் இனிக்கும் குயிலோசை
நிறத்தால் இல்லை பெருமையெனும்
நீதி உரைக்கும் குயிலோசை!

இளங்குமரன்.

கொத்தித் திரியுமந்தக் கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய்-அதற்கு
இரக்கப்பட வேணும் பாப்பா.

-சுப்பிரமணிய பாரதியார்.

# கடவுள் என்ன செய்கிறார்?

### பாப்பா முரசு சிறுகதை

தென் இந்தியாவில் விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் புகழ்பெற்ற சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் கிருஷ்ண தேவராயர். ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையும் உள்ளார்ந்த பக்தி உணர்வும் பெற்றவர்.

ஒருநாள் அவரைச் சந்திக்க ஆன்மீகப் பெரியவர் ஒருவர் அரச சபைக்கு வந்திருந்தார். அவருடன் அவரது பத்து வயதுப் பேரனும் வந்திருந்தான்.

எளிய தோற்றம் கொண்டிருந்த பெரியவரை அன்போடும், மரியாதையோடும் வரவேற்று உபசரித்தார் கிருஷ்ணதேவராயர்.

ஆன்மீக அறிவில் முற்றும் உணர்ந்த மகானாகத் திகழ்ந்த அந்தப் பெரியவர் ஆன்மீகம் தொடர்பாக மன்னன் எழுப்பிய நுணுக்கமான பல வினாக்களுக்கு அற்புதமான தெளிவு தரும் விடைகளைச் சொல்லி மன்னரைப் பரவசப்படுத்தினார்.

பெரியவர் உண்மையிலேயே ஒரு பெரிய மகான் என உணர்ந்த மன்னன், அவரைப் பாராட்டினார். பிறகு வேடிக்கையாக ஒரு வினாவை எழுப்பினார்.

"சுவாமி! கடவுள் ஓய்வு ஒழிச்சல் இன்றி எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருக்கிறார் என்று கூறினீர்கள். இந்த நேரத்தில் கடவுள் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று கூறமுடியுமா?"

மன்னனின் கேள்வி பெரியவருக்குச் சற்றுத் திகைப்பை அளித்தது.

"இது எப்படிச் சாத்தியமாகும்? இறைவனுடைய செயற்பாடு குறித்துத் தெளிவாக விளக்கிச் சொல்லும் ஆற்றல் சாதாரண மனிதனுக்கு ஏது?" எனப்பெரியவர் அடங்கிய குரலில் கூறினார்.

அப்போது பெரியவருக்கு அருகே அமர்ந்திருந்த அவருடைய பேரன் மெல்ல எழுந்து மன்னரைப் பணிவோடு வணங்கினான்.

"என்ன குழந்தாய்? ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?" என்று மன்னர் வினவினார்.

"சக்கரவர்த்தி அவர்களே, தாங்கள் அனுமதியளித்தால் என் தாத்தாவிடம் தாங்கள் எழுப்பிய வினாவுக்கு நான் விடையளிக்க விரும்புகிறேன்." என்றான் சிறுவன்.

பெரியவர் பதறியவராக எழுந்தார். பேரனை நோக்கி,

"குழந்தாய், என்ன பேசுகிறாய்? யார் முன்னிலையில் பேசுகிறாய் என்பதை மறந்து விட்டாயா? உன் விளையாட்டுப் பேச்சுக்கு இதுவா இடம்?" எனக் கோபத்தோடு அதட்டினார்.

மன்னர் கையசைத்து பெரியவரை அமரச் செய்தார். பிறகு சிறுவனை நோக்கி, "குழந்தாய்! இந்தக் கேள்விக்கு உன்னால் பதில் கூறமுடியுமா?" என்று கேட்டார்.

மன்னரை அடிபணிந்து வணங்கிய சிறுவன், "தாங்கள் அனுமதியளித்தால் என் சிற்றறிவுக்கு எட்டியவாறு விளக்கமளிக்கிறேன்" என்றான்.

மன்னரும் அனுமதியளித்தார்.

"ஒரு சிறிய வேண்டுகோள். தாங்கள் அதை ஏற்றுக் கொண்டால் விடையளிப்பது எனக்கு எளிதாக இருக்கும்" என்றான் சிறுவன்.

"என்ன வேண்டுகோள்?" கேட்டார் மன்னர்.

"குரு- சீட அடிப்படையில்தான் இந்த வினாவுக்கு விடையளிப்பது சாத்தியமாகும். வினாவுக்கு விடையளிக்கும் வரை நான் தங்களுக்குக் குருவாகவும், நீங்கள் எனக்குச் சீடராகவும் இருக்க வேண்டும். அருள் கூர்ந்து தங்கள் சிம்மாசனத்தை விட்டுக் கீழிறங்கி வந்து நான் அங்கே அமர அனுமதி தாருங்கள். தாங்கள் என் காலடியில் அமர்ந்து நான் அளிக்கும் விளக்கத்திற்குச் செவிசாய்க்க வேண்டும்." என்றான்.

சிறுவனின் கோரிக்கை சபையில் அதிர்ச்சியையும், எதிர்ப்பு ஆரவாரத்தையும் தோற்றுவித்தது.

மன்னர் எழுந்து இரு கைகளையும் அசைத்து சபையை அமைதிப்படுத்தினார். பிறகு சிம்மாசனத்தைக் விட்டுக் கீழிறங்கி, சிறுவனை அமருமாறு கேட்டுக் கொண்டார்.

சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்த சிறுவன், மன்னரை நோக்கி, "சக்கரவர்த்தி அவர்களே! இப்போது தாங்கள் வினாவைக் கேளுங்கள்." எனக் கேட்டுக் கொண்டான்.

"கடவுள் இந்த நேரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று கேள்வி எழுப்பினார் மன்னர்.

"கடவுள் இந்த நேரத்தில் எந்தவிதத் தகுதியும் இல்லாத ஒரு சிறுவனை விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் அதிகார பூர்வமான சிம்மாசனத்தில் ஏறி அமரச் செய்துவிட்டு, சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயரை அந்தச் சிறுவனின் காலடியில் அமரச் செய்திருக்கிறார்." என்று சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு சிறுவன் சொன்னான். பிறகு அவன் சிம்மாசனத்தை விட்டு இறங்கி வந்து மன்னரைப் பணிந்து,

"அருள்கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டும்," என்று வேண்டிக் கொண்டான்.

கிருஷ்ண தேவராயர் சிறுவனை ஆரத்தழுவி அவனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டினார்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.06.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 145
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 143

பரிசுக்குரியவர்:
கே. தில்லையற்கரசன்.
உவர்மலை, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி. ஷ.ஃபியா பேகம். முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | செல்வி. எஸ். சுகுமாரி. தேவாலய வீதி, இரத்தினபுரி. |
| எஸ். நிஷாந்தன். டெமோரியா, பசறை. | சிபானா ஜபார்டீன். பேராதனை வீதி, கண்டி. |
| நொயலின் தர்ஷினி ஜோன். பஹிரவகந்த, கண்டி. | என். மணிவண்ணன். பதுளைதமிழ் மத்திய கல்லூரி, ஹப்புத்தளை. |
| முகமட் றிஸ்வி. ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | செல்வி. ஷைனி ஜோசவ். சென் பெனடிக்ட் வீதி, கொட்டாஞ்சேனை. |
| பி. கேதீஸ்வரன். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4. | எம். நிஸார். களு/ ஜீலான் மத்திய கல்லூரி, பாணந்துறை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. என் வீட்டுத் தோட்டத்திலே
மஞ்சள் குருவிகள் ஊஞ்சலாடுது.
அது என்ன?
2. அமாவாசைத் திருடன்
அடர் வெளிச்சத்திலும் அகப்படான்.
அவன் யார்?
3. மூடாத தொட்டியிலே
எடுக்க எடுக்க தண்ணீர்.
அது என்ன?
4. ஓட்டை வாயனுக்கு
விழுந்த பல் முளைக்கவில்லை.
அது என்ன?
5. அழகு காட்டும் சக்கரம்,
அச்சு இல்லா சக்கரம்.
அது என்ன?
6. அடிமேல் அடிவாங்கி
அனைவரையும் சொக்கவைப்பான்.
அவன் யார்?
7. அரைச் சாண் ராணி,
அவளுக்குள்ளே ஆயிரம் முத்துக்கள்.
அவள் யார்?

**விடைகள்**

1. எலுமிச்சம்பழம் 2. நிலவு
3. கிணறு 4. சீப்பு
5. வளையல் 6. மிருதங்கம்.
7. வெண்டிக்காய்.

தொகுப்பு-செல்வி. ஸில்மியா கௌஸ், புத்தளம்.

## வாரம் ஒரு நாடு



நமீபியா

தலைநகர்- விண்ட்ஹோக்
பரப்பு- 8,24,292 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 15,74,000
மொழி- ஆங்கிலம், ஆபிரிக்க மொழிகள்
எழுத்தறிவு- 28% (வெள்ளையர் அல்லாதோர்)
100% (வெள்ளையர்)
சமயம்- கிறிஸ்தவம், பழங்குடி சமயம்
நாணயம்- நமீபியன் டொலர்
தனிநபர் வருமானம்- 1400 டொலர்.

அமைவிடம்:
ஆபிரிக்காவில் அட்லாண்டிக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள இந்நாடு முன்பு தென்மேற்கு ஆபிரிக்கா என அழைக்கப் பட்டது.

வரலாறு:
1884முதல் 1915வரை ஜெர்மனியின் ஆதிக்கத்தில் இருந்தது. 1915இல் தென் ஆபிரிக்காவுடன் இணைந்து கொண்டது. தென் ஆபிரிக்காவின் மேலாதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது. நீண்ட காலக் கிளர்ச்சிக்குப் பின் 1988 அக்டோபர் 5 ல் அங்கோலா, கியூபா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளுடன் சமாதான படிக்கை செய்து கொண்டது. 1990 மார்ச் 21 ல் முழு சுதந்திர நாடாயிற்று.

நாடாயிற்று. 1989 நவம்பரில் நடைபெற்ற முதல் தேர்தலில், 30 ஆண்டு அரசு எதிர்ப்பு இயக்கத்தை முன்னின்று நடத்திய ஸ்வாபோ(SWAPO) வெற்றி பெற்றது. நமீபியாவின் மிகப்பெரும் இனப்பிரிவு ஓவாம்போஸ் ஆகும்.

பொருளாதாரம்:
முக்கிய ஏற்றுமதி பொருட்களான வைரக் கற்கள், செம்பு, துத்தநாகம், காரியம், மங்கினீசு ஆகியன இங்குள்ள சுரங்கங்களில் இருந்து கிடைக்கின்றன. கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். மீன் பிடித்தல் முக்கிய துணைத் தொழில்.

## சின்னச் சின்னச் செய்திகள்

★ உயிருள்ள சிப்பியின் ஓட்டின் உட்புறம் ஏதாவது துகள் அல்லது மணல் ஒட்டியிருந்தால், அதைச் சுற்றிப் பசை போன்ற திரவம் படரும். அது காலப்போக்கில் இறுகி முத்து உருவாகும்.




★ சந்தன மரத்தைத் தனியாக வளர்க்க முடியாது. இதன் அருகில் வேறு மரங்கள் இருக்க வேண்டும். காரணம். சந்தனமரம் தனக்குத் தேவையான எல்லா ஊட்டச்சத்துக்களையும் நிலத்திலிருந்து பெறக் கூடியதல்ல. அயலில் உள்ள மரங்களில் இருந்தே தனக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வேர் மூலம் எடுக்கும்.

★ உலகில் உள்ள சில தாவரங்கள் பூச்சிகளை உண்ணும். நெப்பந்தஸ், துரோசெரா போன்றவை அத்தகைய தாவரங்களாகும்.



★ அவுஸ்திரேலியக் காடுகளில் உள்ள 'புல் மரம்' என்ற தாவர இனம், தீயில் பொசுங்கிப் போனாலும் மீண்டும் வளரக் கூடியது.

## மிதக்கும் பத்திரிகை



1902ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி-நடுக்கடலில் அச்சிடப்பட்ட பத்திரிகையுடன் 'எட்டுரீயா' என்ற கப்பல் நியூயோர்க் துறைமுகத்திற்குள் நுழைந்தது.

இந்தக் கப்பல் அட்லாண்டிக் கடலில் மிதந்து கொண்டிருந்த போது இங்கிலாந்தில் இருந்து வயர்லெஸ் மூலம் அனுப்பப்பட்ட செய்திகள், கப்பலில் பெறப்பட்டு பத்திரிகை அச்சிடப்பட்டது. வயர்லெஸ் (கம்பியில்லாத் தந்தி) முறையைக் கண்டு பிடித்த மார்க்கோனியும் இந்தக் கப்பலில் பயணம் செய்த பயணிகளில் ஒருவர்.

## பெரிய வேலை நிறுத்தம்

இங்கிலாந்தில் 1926ம் ஆண்டு மேமாதம் 4ம் திகதியிலிருந்து 12ந் திகதி வரை மிகப்பெரிய வேலை நிறுத்தம் நடந்தது. பல தொழிலாளர்சங்கங்கள் இணைந்து இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 15இலட்சத்து 80 ஆயிரம் தொழிலாளர்கள் இதில் பங்கு கொண்டனர்.



## பெண்களுக்கு வாக்குரிமை




இங்கிலாந்தில் திருமதி எம்மிலைன் பன்க்ரஸ்ட் என்பவர் 1903ம் ஆண்டு பெண்களுக்கான சமூக, அரசியல் சங்கத்தைத் துவக்கினார். இச்சங்கத்தின் மூலமாக பெண்களுக்கு வாக்குரிமை பெற முயன்றார். முதலில் இச்சங்கத்தினர் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். பின் கடுமையாகப் போராடி பல எதிர்ப்புக்களைச் சமாளித்துத்தான் வாக்குரிமையைப் பெற்றார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# நீ! நீ! யார்!

## மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

திகில் 16 திகில்

இ

ன்ஸ்பெக்டர் வேதநாயகம் இப்போது உற்சாகத்தின், விளிம்பில் இருந்தார்.

ஆணின் கைரேகையும், ஒரு பெண் கைரேகையும் செத்துப்போனவர்களுடையது என்பதை நிபுணர்களின் தீர்ப்பு உறுதி செய்தாகிவிட்டது.

மூன்றாவது பெண்ணின் கைரேகை?

எதிரேயிருந்த பேப்பரில் சின்னதாக ஒரு கேள்விக்குறி போட்டார்.

நிச்சயமாக அந்தக் கொலைகாரியுடையதுதான்.

ஆனால்–

யார் அவள்?

பெரியதாக ஒரு கேள்விக்குறியைப் போட்டார்–மிக அழுத்தமாக.

இரும்பு கடற்கரை ஹோட்டலில் காட்டேஜ் பதிவு செய்த பெண் தந்த விலாசத்தைப் பார்த்தவர்.

திரு–திருமதி நிம்புபாணி என்ற பெயருடன் பம்பாய் விலாசம் கொடுக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் அலட்சியப்படுத்தினார்.

பொய்! பெயரும் பொய், விலாசமும் பொய். இந்தியில் நிம்புபாணி என்றால் எலுமிச்சைச்சாறு என்று அர்த்தம் வரும். இந்தப் பெயரில் ஆட்களிருக்க மாட்டார்கள்.

யாராக இருந்தாலும் சரி. அந்தப் பெண்ணின் எச்சரிக்கையும், வேலையின் கச்சிதமும் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான்.

அறையில் ரத்தம் சிதறாமல்–

விசாரித்துவிட்டார். சுத்தம் செய்த பையன் சொல்லி விட்டான். அப்படி [illegible]மில்லை. அறை சுத்தமாகத் தானிருந்தது என்று.

இருக்கும்.

அப்படிச் சந்தேகத்துக்குரிய ரத்தக்கறைகளிருந்தால் அப்போதே மானேஜரிடம் சொல்லியிருப்பான்.

அவள் கொலையை அங்கேயே செய்யாமல் ஏதோ மயக்க மருந்து கொடுத்து அவர்களை நினை

போட வேண்டும்? ஒரே இடத்தில் போட்டால் வேலை சுலபமாயிருக்காதா?

சுலபம்!

ஒரே இடத்தில் ஒன்றாகப் பார்த்தால் ஒருவரே செய்த கொலை என்று என் டிபார்ட்மெண்ட்டுக்குத் தெரிந்து விடும், என்கிறதினால் பயந்து போயிருக்கலாம்.

இப்போது மட்டுமென்ன? அவற்றை இணைத்து ஆராய்ந்து என்ன கண்டு பிடித்தேன்?

ஒரு துப்பும் கிடைக்காமல் குழம்புவதுதான் மிச்சம்.

எங்கே–எந்த வழியாக முயன்று பார்த்தாலும் திரும்பத் திரும்ப கிளம்பிய இடத்துக்குத்தானே வந்து நிற்கிறேன்!

நாற்காலியில் சாய்ந்து கொண்டு அந்தப் பிணங்களின் புகைப்படங்களைப் பார்த்தார்.

செத்த ஆணும் ஒல்லியாக கனமில்லாமல் தானிருந்தான். பெண்ணும் சராசரி எடைக்கும் குறைவாகத்தான் தெரிகிறாள்.

உயிர் பிரிந்து போனாலும் உடல் மரத்துப் போகுமுன்னால் அவற்றைத் தூக்கிப் போவது ஒன்றும் சிரமமான காரியமாக இருக்காது.

முடியும். ஒரு பெண்ணால் சுலபமாக நகர்த்தியிருக்க முடியும். ஆனால்–

யார் அந்தப் பெண்?

போன் ஒலித்தது. எடுத்தார்.

"இன்ஸ்பெக்டர் வேதநாயகம் ஸ்பீக்கிங்."

"சார். நான் இரும்பு கடற்கரை ஹோட்டல் மானேஜர் பேசறேன்.."

"சொல்லுங்க சார். நான் தான் பேசறேன்."

"சார். ஒரு சின்ன தகவல். உங்களுக்குப் பயன் படுமான்னு தெரியல. ஆனாலும் சொல்லிடறது என் கடமைன்னு படறது."

"பின்னே சொல்லுங்களேன்."

"காட்டேஜை புக் பண்ணின பெண்ணின் கையெழுத்தும் மிஸ் அபிராமியோட கையெழுத்தும் ஒரே மாதிரி இருக்கு."

"எப்படிச் சொல்றீங்க?"



ஊர் சுற்றி வந்த என்னை மோட்டு வளையையே பார்த்துகிட்டு உட்காரச் சொன்னால் வெறுத் துப் போகாதா?"

"இப்ப என்ன உனக்கு வெளியே திரியணும்; அவ்வளவு தானே?" ஜென்னி சொன்னாள். "போ ஓடு!"

"ஹேய், என்ன உளர்றே நீ! அவன் வெளியே போகிறது ஆபத்து!"

"ஓ் ஆபத்துமில்லே. அவன் தான் தனக்கு தெரிஞ்சதையெல்லாம் சொல்லிவிட்டானே? அதையும் தான் அந்த அபிராமி இல்லேன்னு சொல்லிவிட்டாளே. அப்படி அந்த அபிராமி தான் கொல்ல முயற்சி செய்கிறான்னா இனிமே அதைத் தொடர மாட்டாள்."

"எப்படிச் சொல்றே?"

"கொலை முயற்சி தொடர்ந்தால் நமக்கு மட்டுமில்லே போலீசுக்கும் அவள் மேல் சந்தேகம் திரும்பும் என்கிற உண்மை அவளுக்குத் தெரிந்திருக்கிறவரை பயமிருக்கும். முயற்சி தொடராது. தைரியமாக அவனை வெளியே அனுப்பலாம்."

"யப்பா. நிம்மதி." உற்சாகமாகக் கிளம்பினான் அந்த வரதராஜன்.

அவனை வழியனுப்ப வெளியே போன திருக்குமரன் கண்ணில் அந்த நடமாட்டமில்லா காக்காத்தான் தெருமுனையில் குறுக்கே நம்பரைக் காட்டாமல் நின்ற அம்பாஸிடர் கார் பட்டதும்–விரைந்து பாய்ந்து–

"இதுவும் நல்ல யோசனை தான். என்னங்கறீங்க பாஸ்? போகலாமா?"

"போகலாமே!"

"கூடவே இந்த அற்ப ஜந்துவையும் கூட்டுக் கொண்டு போகலாம்."

"நானா?" வரதராஜன் கத்தினான். "அற்ப ஜந்துவா?"

"அந்தப் பெண்ணைப் பொறுத்தவரை அப்படித் தான் நினைக்கிறாள். என்ன இப்ப?"

"அதுக்கு அந்த சிங்கத்தின் குகைக்கே கூட்டிட்டுப் போறேன்னா எப்படி?"

"ஏன் பயப்படறே? நாங்க எல்லாமில்லையா? காப்பாற்ற மாட்டோமா?"

தயங்கினான்.

"பயப்படாதே! தைரியமாக வா." என்று ஆளுக்கு ஆள் சொல்லவே–

அரை மனசாகக் கிளம்பினான்.

குட்டி சிவப்புக் காரில் எல்லாருமாக திணித்துக் கிளம்பும் போது ராஜா சொன்னான்: "ஞாபகமிருக்கட்டும் ஜென்னி!"

"எது?"

"இந்த உடைஞ்சு சிதறின கண்ணாடிக்கு உண்டான பணத்தை அந்தப் பிசாசுகிட்ட வசூல் பண்ணியாகணும் மறந்துடாதே."



சுடப்பட்ட செத்த பிணத்தை அந்த மாடிக் கட்டிடத்தின் அத்தனை படிகளிலும் தூக்கிப்போய்......... ஒரு பெண், அதுவும் தனிப் பெண்ணால் நடக்கிற காரியமா இது?

விழக்கச் செய்து– தனியாக இறக்கி வந்து காரில் ஏற்றி வெளியே கொண்டு போய்–

ஏதோ அமானுஷ்யப் பிரதேசத்தில்தான் மயங்கிய நிலையிலேயே சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கியால் சுட்டுத் தள்ளிக் கொன்றிருக்கிறாள்.

அந்த நள்ளிரவுக்கு அப்புறமாக பிணங்களில் ஒன்றை அந்த இடிக்கப்போகிற கட்டடத்தின் மாடியில் கொண்டு போட்டிருக்கிறாள்.

இன்னொன்றை சற்றுத்தள்ளி ரயில்வே லைன் பக்கமாக, கல்லூரி வளாகத்தின் பக்கத்தில் எறிந்து–

அவர் மனிநிலை ஒரு விநாடி நின்றது.

ஆனால்–

ஒரு பெண், அதுவும் தனிப் பெண்ணால் நடக்கிற காரியமா இது?

உயரமான காட்டேஜிலிருந்து இறக்கி வருவது வேண்டுமானால் பிரச்சினை இல்லாமல் இருக்கலாம்.

மயக்க நிலையிலிருந்தாலும் உயிருடனிருந்தவர்கள். கையைத் தோளில் படிய விட்டு இடுப்பில் அணைத்து ஒவ்வொருவராக நடத்தியே இறக்கி வந்து காரில் ஏற்றி இருக்கலாம்.

சாத்தியக்கூறு உண்டு. ஆனால்–

சுடப்பட்ட செத்த பிணத்தை அந்த மாடிக் கட்டடத்தின் அத்தனை படிகளிலும் தூக்கிப் போய்–

ரயில்வே கேட்டுக்கும் பிணம் கிடந்த இடத்துக்கும் கிட்டத்தட்ட ஒரு பர்லாங் தூரமிருக்குமே– அவ்வளவு தூரம் தூக்கிப் போய் போடுவதும்–

ஒரு பெண்ணால் முடிகிற காரியமா?

வேறு ஆண் துணை ஏதாவது இருக்குமா? அப்படியே ஒரு ஆண் இருந்தால்...

மீண்டும் ஒரு கேள்விக்குறியை வரைந்தார்.

சற்றுப் பொறுத்து–

இன்னொரு சந்தேகம் வந்தது.

ஏன் பிணங்களைத் தனித்தனியிடமாக பார்த்துப்

"போன மாசம் ஒரு தடவை அவங்களே வந்து அமைதிக்காகன்னு சொல்லி காட்டேஜ் எடுத்து நாலு நாள் தங்கிட்டுப் போனாங்க. அப்படி அடிக்கடி வருவாங்க போலிருக்கு. நிறைய அதே பேர்ல எண்டரி ஆகி இருக்கு. அந்தக் கையெழுத்தும் இந்த நிம்புபாணி கையெழுத்தும் ஒத்துப் போகிறது சார்! எதுக்கும் நீங்களும் வந்து பார்க்கிறீங்களா?"

"கையெழுத்து நிபுணரை அனுப்பறேன். அவர் சொல்லிடுவார்."

போனை வைத்த கையோடு மூன்று தடவை போன் டயலைத் திருகினார்.

முதல் தடவையில் கையெழுத்து ஒப்பிடும் நிபுணரைக் கூப்பிட்டு இரும்பு கடற்கரை ஹோட்டலுக்கு போகச் சொன்னார். "உடனே போங்க."

இரண்டாவது முறை ஆபீஸில் அபிராமியைக் கேட்டார்.

"மூன்று நாளாகவே அவங்க ஆபீசுக்கு வருகிறதில்லே. போனில் தான் உத்தரவுகளை பிறப்பிக்கிறாங்க."

வீட்டு நம்பரை முயன்றார்.

அம்மாள் தான் பேசினார். "அவள் இங்கேயும் இல்லையே. காலை பத்து மணிக்கு வழக்கம் போல ஆபீஸுக்கு தானே கிளம்பிப் போனாள்."

போனை வைத்தார். குழம்பினார்.

எங்கே தான் போயிருப்பாள்?

✂ ○ ✂

ராஜா துப்பறியும் பாக்டரியில் ராஜாவும் ஜென்னியும் போன போது–

திருக்குமரனிடம் புலம்பிக் கொண்டிருந்தான் அந்த வரதராஜன். "எத்தனை நாள்? இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஒளிந்து வாழறது? பைத்தியமே பிடிச்சிடும் போலிருக்கு."

"இப்ப என்ன வேணும் என்கிற நீ?"

"என்ன ஜென்னி இப்படி கேட்டுட் டீங்க? சுதந்தரமா

முன்னிருந்த வரதராஜனை இழுத்துக் கொள்ள–

அம்பாஸிடர் காரிலிருந்து சீறிவந்த துப்பாக்கி குண்டு ஜன்னல் கண்ணாடியை சிதறடித்தது.

துப்பாக்கியுடன் தரையில் உருண்ட திருக்குமரன் காரை நோக்கிச் சுட முயலும்போது ஓவர் கோட்டும் முகத்தின் பாதியை மறைக்கும் வெயில் கண்ணாடியும் தொப்பியுமாக இருந்த அந்த உருவம்–தெரிந்தது–

கார் சரேலென கிளம்பி விரைந்து மறைந்து போயிற்று.

அது ஒரு நீல அம்பாசிடர் என்கிறதைத் தவிர வேறு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

"ஆள் யார் அடையாளம் தெரிந்ததா?"

"இல்லே ஜென்னி! ஆனா அந்தக் கண்கள் மட்டும் ஒரு பெண்ணுக்கு சொந்தமானவை என்கிற வரை புரிகிறது. அவ்வளவு பெரிய கண்கள் ஆண்களுக்கு இருக்க வாய்ப்பேயில்லை."

"இது என்ன குழப்பம்? யாராக இருக்கும் அந்தப் பெண்?"

"அபிராமி என்கிறது என் ஊகம்."

"அதெப்படி திருக்குமரன்?"

"ஏதோ மனசில் படுகிறது. ஒரு யோசனை. சொல்ல அனுமதி உண்டா?"

"சொல்லேன்."

"இப்பவே உடனடியாக அந்த அபிராமி வீட்டுக்குப் போய் பார்த்தால் என்ன?"

"என்ன எதிர்பார்க்கிறாய்?"

"அவளேதான்னு குற்றம் சாட்டுவோம். எப்படி சமாளிக்கிறாள் என்கிற ரீ-ஆக்ஷனை வைத்து தீர் மானிக்கலாமே."

கண்களில் சலிப்புக் காட்டிப் பார்த்தாள் ஜென்னி.

அந்த அபிராமியின் பங்களாவில் நுழைந்ததுமே பூரித்துப் போனார்கள்.

போர்டிகோவில் நீலநிற அம்பாசிடர் ஒன்று நின்றிருந்தது.

அவர்களுக்கு அளவுக்கு மீறிய பூரிப்பு.

படியிறங்கி வந்து நின்று திரும்பி "வரேம்மா" என்று கும்பிட்டு அதில் ஏறினார் ஒருவர். மைக் பிடிக்காத எம்.எல்.ஏ.மாதிரி தெரிந்தார்.

"டிரைவர். வண்டியை எடு" என்று ஆணையிட–

அவர்களின் அளவுக்கு மீறிய பூரிப்பு உடனே அடங்கியது.

சுற்றிப்போய் போர்டிகோவில் நிறுத்தி இறங்கிய போது–

வீட்டிலிருந்து வெளிப்பட்டார் அவர்–

"என்ன இங்கே ஊர்வலமா வர்றீங்க?" என்றவர் திருக்குமரனைப் பார்த்து "என்ன விஷயம்?"

"அபிராமியை சந்திக்க வந்தோம்."

"வராதீங்க. பயனில்லே."

"ஏன்?"

"அவள் நேற்றே கிளம்பி சிங்கப்பூர் போயிருக்கிறாளாம். அவங்கம்மா சொன்னாங்க."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்













பெயர்: தயா சசிரூபன்
வயது: 10
முகவரி: இராசாவாசா, தம்பிலுவில்-2.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, சித்திரம் வரைதல்.

பெயர்: எம்.கௌசலா
வயது: 20
முகவரி: பாடசாலை வீதி, மன்னம்பிட்டி.
பொழுதுபோக்கு: வாழைமையானவை.

பெயர்: ஆர்.ராஜன்
வயது: 27
முகவரி: P.0.Box-16389, DAHA, QATAR.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எம்.நளீம்
வயது: 25
முகவரி: 166/2, குமார வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ்.நிஹாரா
வயது: 25
முகவரி: STREET NO-1, HOUSE NO-1. AL-AZID ST, RAWDA-73301, KUWAIT.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.நௌசாத்
வயது: 26
முகவரி: P.O.BOX-1008. AL-ARDIYA, KUWAIT.
பொழுது போக்கு : பத்திரிகை, வானொலி.

பெயர்: எச். முகமட் பாஸிட்
வயது: 18
முகவரி: 131/9, கனல் லேன், திருகோணமலை.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: எம். றிப்கான்
வயது: 14
முகவரி: 670/1, காலி வீதி, வெட்டுமகடசந்தை, களுத்துறை.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: பி.கிருபா
வயது: 25
முகவரி: HASLI WEG-1. 6052 HERGISWIL, SWITZERLAND.
பொழுது போக்கு: ரீ.வி., புத்தகம்.

பெயர்: எஸ்.கணேஷ்ராஜ்
வயது: 22
முகவரி: பிரதான வீதி, ஆரையம்பதி-02.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை .

பெயர்: எஸ். கோபி
வயது: 29
முகவரி: 441/1, நீர்கொழும்பு வீதி, வெலிசறை, ராகம.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். பாயிஸ்
வயது: 24
முகவரி: சின்னச் சிப்பிக்குளம், நேரியகுளம், வவுனியா.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

**மக்சீம் கார்க்கி**

**80**

"**பா**வெல் மட்டும் வெளியில் இருந்தால்-அந்திரேயும் இருந்தால்!" என்று மெதுவாகச் சொன்னாள் தாய்.

அவன் அவளைப் பார்த்தான்; உடனே கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

"நீலவ்னா, நான் சொல்லப்போகும் விஷயம் உங்களுக்குச் சிரமம் தருவதாயிருக்கலாம். நான் பாவெலை நன்றாக அறிவேன். அவன் சிறையிலிருந்து தப்பியோடி வரவே மாட்டான். அதுமட்டும் எனக்கு நிச்சயம். அவன் விசாரணைக்குத் தயாராயிருக்கவே விரும்புகிறான். விசாரணையின் மூலம் தனது முழு உருவையும் காட்ட நினைக்கிறான். அதற்காகக் கிடைத்த சந்தர்ப்பத்தை அவன் உதறித் தள்ளமாட்டான். ஏன் தள்ளவேண்டும்? அவன் சைபீரியாவிலிருந்து ஓடி வந்து விடுவான்."

தாய் பெருமூச்செறிந்துவிட்டு மெதுவாகக் கூறினாள்:

"ஆமாம். அதெல்லாம் அவனுக்கு நன்றாய்த்தான் தெரியும்....."

"ஹூம்!" என்று தன் கண்ணாடி வழியாக அவளைப் பார்த்துக் கொண்டு மறுகணமே சொன்னான் நிகலாய்: "உங்களுடைய அந்த முஜீக் தோழன் சீக்கிரமே வந்து நம்மைப் பார்ப்பான் என்றே நம்புகிறேன். ரீபினைப் பற்றி விவசாயிகளுக்கு ஒரு துண்டுப் பிரசுரம் எழுதியாக வேண்டும். அவன் இவ்வளவு பகிரங்கமாக வெளி வந்துவிட்டதால், இந்தத் துண்டுப் பிரசுரத்தால் அவனுக்கு எந்தக் கெடுதியும் விளையாது. நான் இன்றே எழுதிவிடுகிறேன். லுத்மீலா அதைச் சீக்கிரமே அச்சடித்துக் கொடுத்துவிடுவாள்... ஆனால், இந்தப் பிரசுரத்தை அவர்களிடம் எப்படிக் கொண்டுபோய்ச் சேர்ப்பது?"

"நான் கொண்டு போகிறேன்."

"இல்லை; நன்றி! நீங்கள் வேண்டாம்" என்று அவசரமாகச் சொன்னான் நிகலாய். "நிகலாய் வெஸோவ்ஷிகோவால் முடியுமா என்று யோசிக்கிறேன்."

"அவனிடம் நான் கேட்டுப் பார்க்கட்டுமா?"

"முயன்று பாருங்கள். எப்படியெப்படிச் செய்யவேண்டும் என்பதையும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்."

"ஆனால், நான் என்ன செய்வது?"

"கவலைப்படாதீர்கள். உங்களுக்கு வேறு வேலை பார்க்கலாம்."

அவன் எழுத உட்கார்ந்தான். மேஜையைச் சீர்படுத்திக் கொண்டே, அவள் அவனைக் கவனித்தாள். வரிவரியாக வார்த்தைகளை நிரப்பிச் செல்லும் அவனது விரல்களினால் பேனா நடுநடுங்கிச் செல்வதைப் பார்த்தாள். சமயங்களில் அவனது கழுத்துத் தசை நெளிந்து அசைந்தது. அவன் தன் தலையைப் பின்னால் சாய்த்துக் கண்களை மூடியவாறு யோசிக்கும்போது, அவனது மோவாயின் நடுக்கத்தை அவளால் காண முடிந்தது. இது அவளது ஆர்வத்தைப் பெருக்கியது.

"தயாராகிவிட்டது." என்று கூறிக் கொண்டே, அவன் எழுந்தான். "இதோ, இந்தக் காகிதத்தை உடம்பில் எங்கேயாவது மறைத்து வைத்துக் கொள்ளுங்கள்-ஆனால் பொலிஸார் வந்து உங்களைச் சோதனை போட ஆரம்பித்து விட்டால்...."

"அவர்கள் நாசமாய்ப் போக!" என்று அமைதியாகச் சொன்னாள் அவள்.

அன்று மாலையில் டாக்டர் இவான் தனீலவிச் அங்கு வந்தான்.

"இந்த அதிகாரிகளுக்குத் திடீரென்று என்ன கொள்ளை வந்து விட்டது?" என்று கேட்டுக் கொண்டே அறையில் குறுக்கும் மறுக்கும் நடந்தான் அவன். "நேற்று ராத்திரி அவர்கள் ஏழு வீடுகளைச் சோதனை போட்டிருக்கிறார்கள். சரி. நோயாளி எங்கே?"

"அவன் நேற்றுப் போய்விட்டான்." என்றான் நிகலாய். "இன்று சனிக்கிழமை. அரசியல் வகுப்புக்குப் போகாமல் அவனால் இருக்க முடியவில்லை."

"அது முட்டாள்தனம், உடைந்துபோன மண்டையோடு அரசியல் வகுப்புக்குச் சென்று உட்கார்ந்திருப்பது முட்டாள் தனம்......."

"நானும் அவனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். ஒன்றும் பயனில்லை."

"ஒரு வேளை தான் அடிபட்டிருப்பதைத் தன் தோழர்களிடம் காட்ட வேண்டுமென்று விரும்பினானோ என்னவோ?" என்றாள் தாய். "'இதோ என்னைப் பாருங்கள். நான் ஏற்கெனவே இரத்தம் சிந்தி விட்டேன்' என்று சொல்ல நினைத்தான் போலிருக்கிறது..."

அந்த டாக்டர் தாயைப் பார்த்தான். போலிக் கடுமையோடு முகபாவத்தை மாற்றி முகத்தைச் சுழித்துக்கொண்டு சொன்னான்:

"அடடே! நீங்கள் எவ்வளவு கல்நெஞ்சுப் பிறவி!"

"சரி, இவான்! நீ இங்கேயே இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. சீக்கிரமே போய்விடு. நாங்கள் 'விருந்தாளிகளை' எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். நீலவ்னா? அந்தத் தாளை இவனிடம் கொடுங்கள்."

"இன்னொரு தாளா?" என்று வியந்தான் டாக்டர்.

"ஆமாம். அதை எடுத்துக் கொண்டு போய், அச்சாபீசிலே கொடுத்து விடு."

"சரி. நான் அதை வாங்கிக்கொண்டேன்! போய்க் கொடுத்து விடுகிறேன். வேறு ஏதாவது உண்டா?"

"ஒன்றுமில்லை. வாசல் புறத்தில் ஓர் உளவாளி நின்று கொண்டிருக்கிறான்."

"அவனை நானும் பார்த்தேன். என் வீட்டு வாசலிலும் ஒருவன் நிற்கிறான். சரி, வருகிறேன். ஏ, கல்நெஞ்சுக்காரி! நான் வருகிறேன். தோழர்களே, சந்தர்ப்பவசமாக, அந்த இடுகாட்டுச் சம்பவத்தால் நன்மைதான் விளைந்திருக்கிறது. நகர் முழுவதுமே அதைப் பற்றித்தான் பேச்சாயிருக்கிறது. அதைப்பற்றி நீ எழுதிய பிரசுரம் ரொம்ப நல்ல பிரசுரம்; மேலும், அது சரியான சமயத்தில் வெளி வந்துவிட்டது. மோசமான முறையில் சமாதானமாவதைவிட, நல்ல முறையில் சண்டையிட்டுப் பார்ப்பதே மேலானது என்று நான் எப்போதும் சொல்லி வந்திருக்கிறேன்."

"சரிதான். நீ புறப்படு."

"நீ மிகுந்த தயாள குணமுடையவன் என்று நான் சொல்ல மாட்டேன், நீலவ்னா, கை கொடுங்கள். அந்தப் பையன் நிச்சயம் முட்டாள்தனமான காரியத்தைத்தான் செய்து விட்டான். அவன் எங்கு வசிக்கிறான் என்பது உனக்குத் தெரியுமா?"

நிகலாய் அவனது விலாசத்தைக் கொடுத்தான்.

"நாளை நான் அவனைப் போய்ப் பார்க்கிறேன். அருமையான பையன், இல்லையா?"

"ஆமாம்."

"அவனை ஜாக்கிரதையோடு கவனிக்க வேண்டும். அவனுக்கு நல்ல மூளை இருக்கிறது" என்று வெளியே போகும் போது பேசிக்கொண்டே சென்றான் அந்த டாக்டர்: "வர்க்க பேதமற்ற அந்த மேலுலகத்திற்கு நாம் செல்லும் போது அவன் மாதிரி நபர்கள்தான் பாட்டாளி வர்க்கத்தின் அறிவாளிகளாக வளர்ச்சி பெற்று உருவாக வேண்டும்."

"இவான், நீ ரொம்ப ரொம்ப வாயளக்க ஆரம்பித்து விட்டாய்."

"ஏனெனில் நான் உற்சாக வெறியோடிருக்கிறேன். அப்படியானல், நீ சிறைக்குப் போவதைத்தான் எதிர்நோக்கி இருக்கிறாய் இல்லையா? போ, போ. போய் நன்றாக ஓய்வு பெற்றுக்கொள்."

"நன்றி. நான் ஒன்றும் களைத்துப் போகவில்லை."

அவர்களது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த தாய், அவர்கள் அந்தத் தொழிலாளி வர்க்கச் சிறுவனின் மீது கொண்டுள்ள அன்பைக் கண்டு மிகுந்த மனமகிழ்சி அடைந்தாள்.

டாக்டர் சென்ற பிறகு தாயும் நிகலாயும் சாப்பிட உட்கார்ந்தார்கள்; தங்களது இரவு விருந்தினர்களை எதிர்நோக்கி அமைதியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். நாடு கடத்தப்பட்ட தோழர்களைப் பற்றியும், அவர்களில் தப்பியோடி மீண்டும் ஊருக்குள் வந்தவர்களைப் பற்றியும், வெவ்வேறு பெயர்களில் அவர்கள் தங்களது இயக்க வேலையைத் தொடர்ந்து செய்துவருவதைப் பற்றியும், நிகலாய் தாயிடம் விளக்கிக் கூறினான். புத்துலக சமுதாயத்தை உருவாக்குவதில் தங்களைப் பரிபூரணமாக அர்ப்பணித்துவிட்ட அந்தப் புனிதமான, அடக்கமான வீரர்களைப் பற்றிய கதைகளை அந்த அறைச் சுவர்கள் கேட்டன; நம்ப இயலாத வியப்போடு அந்தக் கதைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் எதிரொலித்தன. அறியப்பட முடியாத மனிதர்களின் மீது ஏற்படும் அன்புணர்சியால் இதயத்திற்குச் சூடேற்றி, வெது வெதுப்பான ஒன்று அப்பெண்மணியை இதமாகச் சூழ்ந்தது. அந்த வீரர்கள் அனைவரும் அச்சமென்பதையே அறியாத ஒரு மாபெரும் பேருருவாக உருண்டு திரண்டு உருப்பெற்று பூமியின்மீது மெதுவாக, எனினும் நிச்சய தீர்க்கத்தோடு, முன்னேறி வருவதாகவும், அழுகி நாற்றமெடுக்கும் பண்டைப் பொய்மைகளையெல்லாம் தமது பாதையிலிருந்து விலக்கித் தூர எறிந்து, எளிய தெளிந்த வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக முனைந்து முன்னேறுவது போலவும் தாய் கற்பனை பண்ணிப் பார்த்தாள். அந்த மாபெரும் உண்மை, புத்துயிர் பெற்ற அந்தச் சத்தியம், ஒரே மாதிரியாக எல்லோரையும் தன்னிடம் அழைக்கிறது. பேராசை, பொறாமை, பொய்மை- என்ற மூன்று ராக்ஷச மிருகங்கள் தமது வெறி பிடித்த சக்தியினால் உலகம் பூராவையும் அடிமைப்படுத்தி, கொடுமைப் படுத்தி வைத்திருப்பதையெல்லாம் தகர்த்து, ஒவ்வொருவருக்கும் உண்மையான விடுதலையை உத்தரவாதம் அளிக்கும்... இந்தக் கற்பனா சொரூபமான எண்ணம் அவளது மனத்தில் ஓர் உணர்ச்சியைக் கிளப்பியது. மற்ற நாட்களை விட எளிதாக இருந்த அந்த நாட்களில் அவள் விக்ரகத்தின் முன் மண்டியிட்டுத் தொழும்போது அவள் உள்ளத்தில் எம் மாதிரி உணர்ச்சி பொங்கியதோ, அம்மாதிரி உணர்ச்சி தான் அவளுக்கு இப்போதும் ஏற்பட்டது. இப்போதோ, அவள் அந்த நாட்களையெல்லாம் மறந்து விட்டாள். எனினும் அந்த நாட்களில் அவள் மனத்தில் எழுந்த உணர்ச்சி மட்டும் விரிந்து பெருகி, முன்னைவிடக் குதூகலமும் பிரகாசமும் பொருந்தியதாக வளர்ந்து, அவளது இதய பீடத்தின் ஆழத்திலே இடம்பிடித்து, ஒளிமயமான தீபச்சுடராக நின்றெரிந்தது.

"பொலிஸ்காரர்கள் வருவதாகத் தெரியவில்லையே!" என்று திடீரெனச் சொன்னான் நிகலாய்.

"அவர்கள் நாசமாய்ப் போகட்டும் என்றேனே" என்று அவனை விருட்டெனத் திரும்பிப் பார்த்தவாறே சொன்னாள் தாய்.

"உண்மைதான். ஆனால், நீலவ்னா, நேரமாகிவிட்டது. கொஞ்ச நேரமாவது படுத்துத் தூங்குங்கள். மிகவும் களைத்துப் போயிருப்பீர்கள். உங்களுக்கு அற்புதமான மனோதிடம் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. இந்த அபாயத்தையும் அயர்ச்சியையும் ரொம்பவும் சுளுவாகத்தாங்கிக் கொள்கிறீர்கள். ஆனால், உங்கள் தலைமயிர் மட்டும் விறுவிறுவென்று நரை தட்டி வருகிறது. சரி, போய்ப் படுத்துக் கொஞ்ச நேரமாவது களைப்பாறுங்கள்."

❊❊❊

**ச**மையலறைக் கதவை யாரோ ஓங்கி தட்டுவதைக் கேட்டு, திடுக்கிட்டு விழித்தெழுந்தாள் தாய். கதவைத் தட்டியது யாரோ? எனினும் இடைவிடாது பலத்துத் தட்டிக் கொண்டேயிருந்தார்கள். சுற்றிச் சூழ இருளும் அமைதியும் நிலவியிருந்தன; கதவைத் தட்டும் அந்த பலத்த ஓசை இருளினூடே பயப்பீதியை நிரப்பியொலித்தது. தாய் அவசர அவசரமாக எதையோ எடுத்து உடுத்திக் கொண்டு, சமையலறைக்குள் சென்றாள், கதவருகே ஒரு கணம் தயங்கினாள்.

"யாரது?" என்று கேட்டாள்.

"நான்தான்" என்றது ஒரு பழகாத குரல்.

"யார்?"

"கதவைத்திறவுங்கள்" என்று தணிந்த குரலில் வந்தது பதில்.

தாய் நாதாங்கியைத் தள்ளினாள்; கதவைக் காலால் தள்ளித் திறந்தாள். இக்நாத் உள்ளே வந்தான்.

"நான் இடம் தவறி வந்து விடவில்லை" என்று உற்சாகத்தோடு கத்தினான் அவன்.

அவனது இடுப்பு வரையிலும் சேறு தெறித்துப் படிந்திருந்தது; அவனது முகம் கறுத்து, கண்கள் குழி விழுந்து போயிருந்தன; அவனது தொப்பிக்குள்ளிருந்து எல்லாப் பக்கத்திலும் அவனது சுருட்டைத் தலைமயிர் துருத்திக்கொண்டு வெளி வந்திருந்தது.

"நாங்கள் அபாயத்திலிருக்கிறோம்" என்று கதவை அடைத்துக் கொண்டே இரகசியமாகச் சொன்னான் அவன்.

"எனக்குத் தெரியும்."

அவள் கூறியதைக் கேட்டு அந்த வாலிபன் ஆச்சரியம் அடைந்தான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று திருகத்திருக விழித்தவாறே கேட்டான் அவன்.

அவள் சுருக்கமாக விளக்கிச் சொன்னாள்:

"உன்னுடைய அந்த இரண்டு தோழர்களையும் கூட அவர்கள் கொண்டு போய்விட்டார்களா?"

"அவர்கள் அங்கில்லை, ஆஜர் கொடுக்கச் சென்றிருந்தார்கள். மிகயீல் மாமாவையும் சேர்த்து இதுவரை ஐந்து பேரைக் கொண்டு போய்விட்டார்கள்?"

அவன் ஆழ்ந்த பெருமூச்செடுத்தான்; லேசாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்:

"நான் மட்டும் தப்பிவிட்டேன். இப்போது அவர்கள் என்னைத் தேடித் திரிந்து கொண்டிருப்பார்கள்."

"நீ எப்படித் தப்பிவர முடிந்தது?" என்று கேட்டாள் தாய். அடுத்த அறையின் கதவு லேசாகத் திறந்து கிடந்தது.

"நானா?" என்று கூறிக்கொண்டே ஒரு பெஞ்சின் மீது உட்கார்ந்து சுற்றும் முற்றும் பார்த்தான் இக்நாத். "அவர்கள் வருவதற்கு ஒன்றிரண்டு நிமிஷங்களுக்கு முன்னால், அந்தக் காட்டு ஷிகாரி நமது குடிசைக்கு ஓடி வந்து, ஜன்னலைத் தட்டினான். 'ஜாக்கிரதையடா, பயல்களா! அவர்கள் உங்களைத் தேடி வருகிறார்கள்' என்று சொன்னான்."

(தொடர்ந்து வரும்)

> **"மோசமான முறையில் சமாதானமாவதைவிட, நல்ல முறையில் சண்டையிட்டுப் பார்ப்பதே மேலானது."**



# வீதி மேத்தாக்கள்

**கிண்ணியா ஸத்தார்**

**வ**ந்ததும் வராததுமாக புத்தகங்களை மேசையின் மேல் வீசினாள் பர்வீன்.

கதிரையில் உட்காந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த ரபீக், மூக்குக் கண்ணாடியை நெற்றிவரை உயர்த்தி ஆச்சரியமாகப் பார்த்தார்.

பர்வீன் முன் கோபக்காரி, பிடிவாதக்காரி என்பதையறிந்திருந்ததால் எடக்கு மடக்கா பாடசாலையில் ஏதாவது நடந்து விட்டதென்பதை ஊகித்தவர்,

"என்னம்மா பர்வீன்! என்ன கோபம் இது?"

வழக்கமான அருமை வார்த்தைகளில் கேட்ட வாப்பாவை நோக்கி பர்வீன் வசனம் வசனமாகப் பேசித் தள்ளினாள்.

"நான் இனிமே ஸ்கூலுக்கு போவ மாட்டேன்! எனக்கு வீதியிலே எறங்கவே பிடிக்கலே. அவனுகள் அக்கா தங்கைகளோட பொறக்கவேயில்லையா? மிருகங்கள் கூட.... சி....

ஊர்வஸி.... ஊர்வஸி... என்கிறான் ஒருவன். ஞானப் பழமே.... என்கிறான் ஒருவன். ஒவ்வொரு மர நிழலிலும் ஒவ்வொரு கூட்டம். பாட்டுக்காரன்களைத் தாண்டிப்போனா அடுத்த மர நிழல் வைரமுத்துகள், மேத்தாக்கள்.

*சில அழகுகள்*
*மனதை விட்டும் அகல்வதில்லை*
*அதில் நீயுமொருத்தி!*

*கூந்தல் வளர்த்த நிலா*
*மனசைக் குடியிருக்கத் தா.*

*நெருப்பே இரு வரி*
*சிரிப்பனுப்பு.*

அவனுகளைத் தாண்டி விடுவதற்கு முன் காதுகளில் விழுந்து விடுகின்ற சின்னச் சின்னக் கவிதைகள்.

பாவித் தோழிகள் சிலர் பாடமாக்கிச் சொல்லுகின்ற போது எனக்கு எரிச்சல்தான் வரும்.

முடிஞ்சிதா...ம்ஹ....நாலடி எடுத்து வைச்சிட்டா வர்ணனையாளர்கள், நேர்முக வர்ணனையாளர்கள்.

அது மட்டுமா? தோழிலும்- சொல்ல வெட்கமாயிருக்கு. பின்னால் வந்து தட்டி விட எத்தனிக்கும் சில ரௌடிகள்.

இத்தனையும் தாண்டித்தான் ஒரு பெண் பிள்ளை போய் வரவேண்டியிருக்கு.

விட்டா நாளைய பிள்ளைகளின் நெலம?"

இதுவரை பர்வீன் கோபத்துடன் கர்ஜித்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ரபீக், வேகமாக எழுந்து பொலிஸ் நிலையத்தை நோக்கி நடந்தார்.

'இன்றைக்கு அவனுகள ரெண்டுலே ஒன்னு பண்ணிட ணும்' மனசுக்குள் வெறியோடு வைத்து நடந்து நிலையம் வந்தபோது "வாங்க ரபீக்.... வாங்க. நான் ஒங்க வீட்டுக்கு வர்றதுக்குத்தான் இருக்கேன். எனக்கு நேரம் மிச்சம். நீங்களே வந்திட்டீங்க. நல்லதாப் போச்சு," என்று சொன்ன ரிஸா எஸ்.ஐயை 'ஏன்?' என்பதாய் ஏற இறங்கப் பார்த்தார் ரபீக்.

ரபீக்கின் கேள்விப் பார்வையை புரிந்து கொண்ட ரிஸா எஸ்.ஐ.,பழைய தோழமையோடு அமைதியாகத் தொடர்ந்தார்.

"ரபீக்! அந்த வயசிலே நாமே பண்ணாத கூத்தா? இருந்தாலும் பெண்கள் விசயத்திலே நமக்கென்று ஒரு வரம்பு போட்டிருந்தோம். நம்ம வாப்பா உம்மாக்கிட்ட "ஒங்க மகன் இப்படிப் பண்ணிக்கிட்டான்" என்று எப்போதாவது பெண்கள் விசியமா புகார் வந்திச்சா? இல்ல. அப்படிப்பட்ட நம்ம பிள்ளைகள் இப்படியாயிற்றே என்று நினைக்கும் போது எனக்கு வருத்தமா வருது.

ஆமா ரபீக்! எம்மகனையும் ஒன்னோட மகனையும் தையல் கிளாஸ் டீச்சர் வந்து புகார் செஞ்சிட்டு போனா. அங்கே வர்ற ரெண்டு பிள்ளைகளுக்கும் எம் மகனும் ஒம்மகனும் கடிதம் கொடுத்திருக்கானுகள்- காதல் கடிதம்! இதோ அந்தப் பிரதிகள்."

புகார் செய்ய வந்த ரபீக் புகார் கேட்கத் திகைத்து நின்றார்.

❤☆❤

"**எ**ன்ன வாப்பா எல்லோடைய பேரையும் குடுத்தீங்கதானே?" பர்வீன் அதே ஆத்திரத்துடன் கேட்டாள்.

"இல்ல"

"ஏன் வாப்பா?"

"நான் போறதுக்கு மொதலே தையல் டீச்சர் ஒங்க நானாட பேரக் கொடுத்திட்டுப் போயிட்டா."

"ஏன்?"

"அவனும் அந்த ஊர்வஸி கேஸ் தான்!"

பர்வீன் அதிர்ந்துபோய் நின்றாள்!





படிப்பகம்

www.padippakam.com

# மனக் கோலங்கள்...

—யோகி



**"என் வலிப்பு நோய் நம் தாம்பத்திய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை."**

சங்கர், பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான். பஸ்ஸில் இன்னும் கூட்டம் சேரவில்லை. எப்படியானாலும், பஸ் பத்து நிமிஷத்தில் கிளம்பிவிடும். மணியைப் பார்த்தான். ஐந்து மணி. ஏழு மணிக்கெல்லாம் பஸ் ஸ்டாண்டை அடைந்துவிடலாம். ஏழரை மணிக்கு சாந்தியைப் பார்க்கலாம். எண்ணமே பெரும் சந்தோஷத்தைத் தந்தது.

சாந்தி எப்படி எல்லாம் துடித்தாள்?– "இந்தப் பாழாய்ப்போன வியாதிக்காகவா என்னை விரட்டறீங்க? நான் என்ன பாவம் செய்தேன்?"– அப்போது நான் ஒரே முடிவோடு இருந்தேன், "உன்னோடு இனி என்னால் வாழ முடியாது... போயிடு..." என்று கூறிவிட்டேனே?..... பாவி!– மனதுக்குள் தன்னைத் தானே சபித்துக் கொண்டு பஸ்ஸில் உட்கார்ந்திருந்தான்.

சங்கர்–சாந்தியின் கல்யாணம் இனிதே நடந்து முடிந்திருந்தது. சாந்தியைப் பெண் பார்க்கப் போயிருந்தபோதே சங்கர் முடிவு செய்துவிட்டான்–மணந்தால் இவளைத்தான் மணக்க வேண்டும், என்று. பெண் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்த பிறகு அம்மா, "குடும்பம் அத்தனை வசதியில்லையே? அந்த பணக்காரப் பொண்ணையே பார்ப்போமே! நல்லா செய்வாங்க" என்று முணுமுணுத்தாள். "நான் இவளைத் தான் கல்யாணம் செய்துக்குவேன். இல்லேன்னா எனக்குக் கல்யாணமே வேணாம்" என்று கூறிவிட்டேன்!

ஜாதகப் பொருத்தமும் நல்ல விதமாய் அமைந்திருந்ததால் கல்யாணம் சிறப்பாய் நடந்து முடிந்தது... அன்றே முதல் இரவு... மனம் விட்டுப் பேசினோம்... சாந்தி அழகான பெண் மட்டும் அல்ல... அழகான ரசனையுள்ளவளும் கூடத்தான்.

மறு நாள்.

சாந்தியின் வீட்டிற்கு மறுவீட்டிற்குச் செல்ல, டாக்ஸியை அழைத்து வந்து சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்த போதுதான், வாசலில் நின்றிருந்த சாந்தி 'தடால்' என்று கீழே விழுந்தாள். கை, கால்கள் மெல்ல இழுக்க ஆரம்பித்தன. வாயிலிருந்து எச்சில் ஒழுகிற்று... நாக்கு பல்லிடுக்கில் சிறைப்பட்டு சிறிதளவான இரத்தத்தைச் சிந்தியது...

"அய்யோ கடவுளே! இதென்ன சோதனை.. நல்ல நேரமும் அதுவுமா?" என்று சாந்தியின் அப்பா ஒரு சாவிக் கொத்தை அவள் கையில் திணித்தார்.

சங்கர் அதிர்ச்சியுற்றான். அந்தக் கோலத்தில் சாந்தியைப் பார்க்க வெறுப்பாய் இருந்தது. எத்தனை அலங்கோலமாய் சிதறியிருக்கிறாள்! அதற்குள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாரும் வேடிக்கை பார்க்க வந்து விட்டனர். "காற்று வர விடுங்க... கூட்டம் போடாதீங்க..." என்று ஒரு பெரியவர் கூறினார்.

சங்கருக்கு இருந்த அதிர்ச்சியைப் போலவே– சங்கரின் தந்தைக்கும் அதிர்ச்சியாய் இருந்தது;" என்ன சம்பந்தி!... உங்க பொண்ணுக்கு வலிப்பு இருக்கா? சொல்லாமே ஏமாத்திட்டிங்களே?"

"இல்லங்க... வைத்தியம் பார்த்துட்டுத் தான் இருந்தோம். இடையிலே கொஞ்ச நாளா இந்த சங்கடம் இல்லாம இருந்தது; என்னவோ இப்போதான் திடீர்னு...... மத்தபடி வேறு எந்த வியாதியும் இல்லே..."

"வியாதி இல்லையா? இந்த ஒரு வியாதியே போதாதா?" என்று 'சுள்' என்று கேட்டான் சங்கர். சாந்தியைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டிற்குள் படுக்க வைத்தனர். சங்கர் அங்கே இருக்கப்பிடிக்காதவனாய் வெளியே கிளம்பினான்... "மாப்பிள்ளை..! நல்ல நேரம் தாண்டுறதுக்குள்ள நாம ஊருக்குப் போயிடணும்.. இப்போ ஒரு பத்து நிமிஷத்தில சாந்தி சரியாயிடுவா..." என்றார் சாந்தியின் தந்தை–சங்கர் வெளியே போவதைப் பார்த்து.

"இப்போ உங்க பொண்ணு மட்டும்தான் உங்களோட வருவா. அவளை நல்லா குணப்படுத்திட்டுப் பிறகு கூப்பிடுங்க.. நான் மறுவீட்டுக்கு வர்றேன்..." என்றான் சங்கர்.

சங்கர் முகத்தை இன்னும் கடுமையாக வைத்துக்கொண்டு கூறினான்: "அப்பா சொன்ன மாதிரி–குணமானதும் தகவல் கொடுங்க. நான் வரேன்."

சாந்தி மனமுடைந்து போனாள். பிறகு ஒருவாறாய் சமாளித்துக் கொண்டு "உங்க கிட்ட பேசணும்..." என்று தனியாக அழைத்துப் பேச முயன்றபோதும் சங்கர் "எதைப் பத்தியும் இப்ப பேசறதா இல்ல..." என்று 'வெடு'க்கென்று சொல்லிவிட்டான்.

மறு வீட்டிற்குச் செல்ல ஏற்பாடான கார், மாப்பிள்ளை இல்லாமலே கிளம்பிற்று.

சாந்தி பத்து நாள்களுக்குப் பிறகு– சங்கருக்குக் கடிதம் எழுதி இருந்தாள்.

*"அன்புள்ள கணவருக்கு......*

*நாம் இப்படிப்பட்ட துர்ப்பாக்கியசாலிகளாக இருப்போம்னு நான் எதிர்பார்க்கல்லே....என் வலிப்பு நோய் நம் தாம்பத்திய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்னு நான் நினைக்கலே.....*

*இங்கே நான் ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு இருக்கேன். மருந்து மாத்திரைகள் சாப்பிட்டுட்டு இருக்கேன். ஏதோ ஒரு நம்பிக்கை– திரும்ப உங்களோட சேர்ந்திடலாம்னு......*

*அன்றே பிறந்து அன்றே சாகும் ஈசல் மாதிரியாயிடுச்சு நம் தாம்பத்திய வாழ்க்கை... அந்த மின்னல் மாதிரியான கண நேர வாழ்க்கைக்குத்தானா, இத்தனை கனவுகளும் இத்தனை ஆர்ப்பாட்டங்களும்? சிரிப்புத்தான் வருகிறது!*

*நான் திரும்பவும் வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்....கல்யாணம் ஆயிட்டா.... கணவர் ஊருக்குப் போகணுமேன்னு, வேலையை ராஜினாமா செய்தேன். இப்போ நிலைமை மாறிடுச்சு. இனி நீங்க என்னை அழைக்காமலே கூட இருந்துடலாம். அதனால், எனக்கொரு பாதுகாப்பு வேணும் இல்லையா? அதனாலதான் வேலைக்குப் போக முடிவு செய்தேன்.*

*கடிதம் கண்டு, விருப்பம் இருந்தால் பதில் எழுதுங்க....."*

இப்படிக்கு, சாந்தி.

சங்கர் அந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதவில்லை. இரண்டு மாதங்கள் ஓடி விட்டன.

ஒருநாள் மதியம் இரண்டுமணி. ஆபிஸில் இருந்து வெளியே வந்தான். அரை நாள் லீவு போட்டு இருந்தான். இப்போது அவனுக்கு எல்லாவற்றின் மீதும் வெறுப்பாய் இருந்தது. மணவாழ்க்கை இப்படி அஸ்தமித்து விட்டதை எண்ணிப் புழுங்கினான்! 'இனி சாந்தியோடு சேர்ந்து வாழ்வது முடியுமா?' என்பது பெருங்குழப்பமாய் இருந்தது.

மெயின் ரோட்டுக்கு வந்தான். பசித்தது. ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து சாப்பிடத் தொடங்கிய போதுதான், ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஓர் ஓரத்தில் ஓர் இளம் தம்பதி உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர். திடீர் என்று அந்தப் பெண் 'வீலெ'ன்று கத்தினாள். சங்கர் திரும்பிப் பார்த்தான். எல்லாரும் பார்த்தனர். அந்தப் பெண்ணின் கணவன், நாற்காலியிலிருந்து சாய்ந்தபடி கையையும் காலையும் உதறத் தொடங்கினான்! எல்லாரும் வேடிக்கை பார்க்கச் சென்றனர். சங்கரும் சென்றான்.

வலிப்பு!.....அந்தப் பெண்ணுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. எவரும் உதவிக்குச் செல்லவில்லை..... எல்லாரும் அருவருப்படைந்தவர்களாய், ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தனர். அந்தப் பெண் பதறினாள். பதற்றத்தில் என்ன செய்வது என்று தெரியவில்லை. கலங்கினாள்.

சங்கருக்கு சாந்தியின் நினைவு வந்தது.

சங்கருக்குள் என்ன நேர்ந்ததோ, தெரியவில்லை... தன் பையில் இருந்த வீட்டு சாவியை எடுத்து அவன் அருகே சென்று அவன் கையில் திணித்தான். நாக்கு பற்களுக்கிடையே சிக்கி இரத்தத்தை இறைத்தது. ஒரு ஸ்பூனை எடுத்து அவன் பற்களுக்கு இடையே வைத்தான்.

அவனது சட்டையின் முன் இரண்டு பட்டன்களை கழற்றி காற்றுப் போக வழி செய்தான். மின்விசிறியை வேகமாக வைக்கச் சொன்னான்.

சற்று நேரத்தில் எல்லாம் சரியாயிற்று.... அந்தப் பெண் "தாங்க்ஸ்" என்று கூறி அழுதாள்.

சங்கருக்கும் கூட அழுகை வந்தது. 'ஏன்' என்று காரணம் தெரியவில்லை..... "இப்போ சரியாயிடுச்சு" என்று வாயில் வழிந்திருந்த எச்சிலைத் துடைத்தவாறு எந்த அருவருப்பும் இன்றிக் கேட்டாள். அவனை நிமிர்த்தி உட்காரச் செய்தாள், அவன் துணைவி. பிறகுதான் தோல்பையைத் திறந்து இரண்டொரு மாத்திரைகளை எடுத்து அவனிடம் சாப்பிடக் கொடுத்தாள்.

சங்கர் பார்த்துக் கொண்டே இருந்தான். அந்தப் பெண்ணின் செய்கை, அவள் கணவரின் தவிப்பு எல்லாம்– தன் அகங்காரத்தை அழித்துவிட்டதை உணர்ந்தான்.

'ஒரு வேளை, நானும் இப்படி வலிப்பு நோயாளியாய் இருந்தால்?– சாந்தியும் எனக்கு இப்படித்தானே பணிவிடை செய்வாள்– எந்த அருவருப்பும் இன்றி?..... என்னைப் போல் அவள் விலகி ஓடிவிடமாட்டாளே?.... அப்படியென்றால், கொஞ்சமும் மனிதாபிமானம் இன்றி நான் அவளை விரட்டியது எத்தனை கேவலமான செயல்?... எனது மாசற்ற அன்பு–அவளின் நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம். சாந்தியைப் பார்த்து மன்னிப்புக் கேட்க வேண்டும்!....'

அன்று கடிதத்தில் எழுதி இருந்தாளே....? 'அன்றே பிறந்து, அன்றே சாகும் ஈசல் மாதிரியாயிடுச்சே. நம் தாம்பத்திய வாழ்க்கை. அந்த மின்னல் மாதிரியான கண நேர வாழ்க்கைக்குத் தானா அத்தனை கனவுகள்!.... ஆர்ப்பாட்டங்கள்... சிரிப்புத் தான் வருகிறது.' என்று.

ஆனால் இப்போது சங்ருக்கு அழுகை வந்தது. நம் வாழ்க்கை ஈசலுக்கு உள்ளது போல் அல்ல....அது நீடித்திருக்கும் ஒன்று...... மின்னல் மாதிரி கணநேரத் தோற்றம் அல்ல– நம் வாழ்க்கை. அது சந்திரனாய் இருக்கும்; இன்று இல்லை, என்பதற்காக– சந்திரன் நாளை வராமல் இருப்பதில்லையே?....

பஸ் குலுக்கலுடன் கிளம்பியது.

இனி இரண்டு மணி நேரத்தில் சாந்தியைப் பார்த்து விடலாம்.

---

# இருவழிப் பாதைகள்

ஷர்மிளா இஸ்மாயில்

**"இளைய தலைமுறை விரும்பியோ, விரும்பாமலோ இந்த நகர வாழ்க்கையை ஏத்துக்க வேண்டியதாயிடுச்சு."**

பெரியவர் உட்கார்ந்திருந்தார். உடலெங்கும் வியர்த்திருந்தது. வீட்டுக்குள் இன்னும் கொஞ்சம் இருந்தால் மண்டையே வெடித்து சிதறுமாப்போல் தலைவலித்தது. உடம்புக்குள் ஒரே அசௌகரிய உணர்வு.

கரண்ட்டும் இல்லை. தண்ணீரும் இல்லை. வாழ்வின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகள் இரண்டும் இல்லாது போய் இன்றோடு இரண்டு நாட்கள். நகர வாழ்க்கை நரக வாழ்க்கையாயிற்று.

இதுதான் தருணமென்று குடிநீரைக்கூட விலைபோட்டு விற்கத் தொடங்கிய அவலமான மனிதம். இரவில் மெழுகு திரியுடன் போராட வேண்டியிருந்தது. பகலில் வெயிலின் கொடுமை தாங்காது குளிக்கவும் வழியின்றி தள்ளாட வேண்டியிருந்தது.

இரண்டு நாட்களா இவை? இரண்டா யிரம் யுகங்களாய்– இருண்ட யுகங்களாய்த் தோன்றின. வீட்டின் முன் பிரதான வீதி. இரைச்சலோடு ஓடும் வாகனங்கள். அவை வெளி விடும் புகை மண்டலங்கள். காற்றுக் கூட கறுப்பாகி சுவாசம் திணறுவதாய் உணர்ந்தார்.

"என்னங்க இது? ஒரு மாதிரியா இருக்கீங்க?" மனைவி ஆதரவாய் வினவினாள். பெரியவருக்கு வார்த்தைகள் வரவில்லை. அவரின் நெற்றியில் வியர்வைத்துளிகள் வழிந்தோடின.

தொண்டையைக் கனைத்துக் கொண்டார். "என்னத்தைச் சொல்றது? எப்படிச் சொல்றது? என்ன வாழ்க்கையிது? பேசாமல் நாம நம்மட கிராமத்துக்கே திரும்பி போயிடலாம்னு தோணுது. தண்ணியுமில்ல, கரண்ட்டுமில்ல.. சுருக்கமாச் சொன்னா மூச்சு விடக்கூட சுத்தமான காத்தில்ல.. எதுக்காக நாம இப்படி இத்தன கஷ்டத்துக்கு மத்தியில இங்க வாழணும்.? விதியா?"

பெரியவர் உரத்து சொல்லிவிட அவரது மனைவி "ஷ்.. மெதுவா பேசுங்க.. மகன் காதுல விழுந்திடப்போவுது. கேட்டா மனவருத்தப் படுவானில்ல? என்ன இந்த கஷ்டம் எந்தநாளுமா நின்று நிலைக்கப் போகுது? இன்னும் இரண்டே நாளில எல்லாம் சரியாயிடும். பொறுமையா இருப்போமே.." தணிந்த குரலில் கூறி அவரைச் சமாதானப்படுத்தினாள்.

"அம்மா, அப்பா.. நீங்க பேசியதெல்லாம் கேட்டுட்டு தானிருந்தேன்" அவர்களது மகன் ரகு அறைக்குள் வந்தான். அவர்களது முகம் பார்த்தான். அவர்கள் இருவரும் தத்தமது பார்வைகளை பரிமாற்றிக் கொண்டனர்.

"நீங்க சொல்றதும் நியாயந்தானப்பா, அதைக் கேட்டு நான் மனவருத்தப்படவோ இல்ல கவலைப்படவோ மாட்டேன். நாங்க இளைய தலைமுறைங்க விரும்பியோ விரும்பாமலோ இந்த நகர வாழ்க்கைய ஏத்துக்க வேண்டியதாயிடிச்சு. என் தொழில் இங்க. எம் மனைவியும் வேலை பார்க்கறது இங்க. பிள்ளைகளும் படிக்கறதும் இங்க. கல்வி, தொழில்னு இயந்திர கதியில ஓடிட்டிருக்கிற இந்த சமுதாயத்துல, இந்த சமுதாய ஓட்டப் போட்டியில நாங்களும் அடக்கம். அடங்கணும்.



அப்பத்தான் நாளைய வாழ்க்கைக்கு ஈடு கொடுக்க முடியும். தோத்துப் போயிடாமலும் இருக்கணும். இனி வருங் காலத்துல பிள்ளைங்களும் வாழணும். தலை நிமிரணும். இதுக்கெல்லாம் அங்க கிராமத்துல வசதிப்படாதுப்பா. இந்த சூழல், சூழ்நிலைல பழக்கப்பட்டுட்டோம். இனிமே அதை நாம விரும்பியோ விரும்பாமலோ மாத்திடமுடியாது..." தொடர்ந்து பேசியவன் இதமாகச் சொன்னான்.

"அம்மா, அப்பா உங்க மேல உள்ள அன்பால, இரக்கத்தால தான் நானும், மனைவியும், பிள்ளைங்களும் உங்கள எங்களோட வந்து இருக்கச் சொன்னோம். எங்க மேல உள்ள பாசத்தால நீங்களும் வந்தீங்க. இருந்தீங்க.. ஆனா இப்போ.. உங்களால, அந்தக் கிராமச் சூழ்நிலைல இதமாக, இனிமையாக வாழ்ந்து பழக்கப்பட்ட உங்களால இந்த வாழ்க்கைய ஜீரணிக்க கஷ்டமாயிருக்கு. சரிப்பா... அதை நாங்களும் புரிஞ்சிக்கிட்டோம். எங்களுக்கும் ஆசைப்பா. அந்த வயல் வெளிகள்ள ஓடித்திரியறதுக்கும், ஓடும் நதியில பாய்ந்து நீந்துறதுக்கும், காடு மலைல ஓடி இரசிக்கிறதுக்கும், தோட்டத்து மரத்துல மாங்காய் பறிக்கிறதுக்கும்... இன்னும் ஆசைப்பா. எனக்கும் ஆசை. ஆசைப்பட்டா முடியுமா? எனக்குன்னு இன்னொரு வாழ்க்கை இங்கே. மறுக்க முடியுமா? விலக முடியுமா? வாழ்ந்தாகணுமே? சரிப்பா.. போகணும்னா போங்க. நினைச்சா நினைக்கிற நேரத்துல திரும்பி வாங்க. சந்தோசமா வரவேற்போம்"

மூச்சுவிடாமல் பேசி யதார்த்தம் உணர்த்தி எழுந்து செல்லும் மகனைப் பார்த்தவாறிருந்தார்கள் பெரியவரும் அவர் மனைவியும்.

---

# எதிர்பார்ப்புக்கள்

யாழ்–ஞானசேகரன்

"பாஸ்கர், நீ கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தியா?"

ரகு கேள்வி வீசப்பட்ட இடம் அந்தப் பல்கலைக்கழகத்தின் ஆண்கள் விடுதியில், கேள்வியின் குறி மதுபோதையில் கிடந்த பாஸ்கரன்.

மின்விளக்குகளால் ஒளிபடர்ந்திருந்த விடுதியின் ஒரு மூலையில் பாஸ்கரன் சுயநினைவற்றவனாய் சுருண்டு கிடந்தான். அவன் அணிந்திருந்த ஆடைகள் முழுவதும் வாந்தியுடன் சேர்ந்த மதுவால் அலங்கோலமாகக் காணப்பட்டன. அந்த நாற்றம் அப்பிரதேசம் எல்லாம் அருவருப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

"எழும்படா, உனக்கு எத்தனை தரம் சொல்லுறது? ஒவ்வொரு நாளும் இதே நிலைமை என்டா எங்கே போய் முடியப் போகுது," கையைப் பிடித்து இழுத்தபடியே மீண்டும் கத்தினான் ரகு.

பின்னர் சேகரின் உதவியுடன் பாஸ்கரனை அவனது படுக்கைக்கு கொண்டு சென்றான் ரகு.

"நான் இவன்ரை வீட்டுக்கு கடிதம் எழுதினால்தான் இனி இவனைத் திருத்தலாம்."

"நீ சும்மாயிரு, எல்லாம் பழகத்தானே வேணும். உன்னை மாதிரி இருக்க முடியுமோ?" இது சேகரின் கூற்று.

"இது யார் சொல்லுறது? உங்களை மாதிரி இதுக்கு அடிமையானவங்கள் தான் சொல்லுறது." ஆத்திரத்துடன் சீறினான் ரகு.

"இது அவன்ரை பிரச்சனை. இது பற்றி உனக்கு..." சேகர் கூறிமுடிக்க முன்னே இடையில் புகுந்தான் ரகு.

"அப்பிடிச் சொல்லாதை. அவனைப் பற்றியும் அவன்ரை குடும்ப நிலைமை பற்றியும் எனக்குத் தான் வடிவாத் தெரியும். இவனை படிப்பிக்க அங்கை அதுகள் எத்தனை தியாகங்களை செய்யுதுகள் தெரியுமோ?"

ரகுவும் பாஸ்கரனும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் குக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள். சிறு பிராயத்திலிருந்தே இவர்கள் இருவரும் நண்பர்கள். ரகு ஓரளவு வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவன். பாஸ்கரன் அதற்கு முற்றிலும் முரணான நிலைமையைச் சேர்ந்தவன்.

பாஸ்கரனின் தகப்பனார் ஒரு சாதாரண விவசாயி தான். ஆனாலும் கடின உழைப்பின் மூலம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்ட தடைகளைத் தகர்த்தெறிந்து, ஒருவாறு குடும்ப வண்டியை ஓட்டி வந்தவர்.

தற்போது அவரின் உடல் நிலை மோசமாக அவர் படுத்தபடுக்கையாகி விட்டார். பாஸ்கரனின் படிப்புச் செலவையும், குடும்ப நாளாந்த வாழ்க்கைச் செலவையும் கொண்டு நடத்த ஒவ்வொரு சொத்துக்களாக விற்கப்பட்டுக் கொண்டு வருகிறது.



***

அன்று நடந்த சம்பவம் குறித்து பாஸ்கரனுக்கும் ரகுவுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. அதன் முற்றிய நிலையால், அவர்கள் இருவரும் தங்கள் நட்பை முறித்துக் கொண்டனர்.

ரகு விடுமுறை காரணமாக தனது சொந்த ஊருக்கு வந்தான். அவன் பாஸ்கரன் வீட்டுக்கு சென்றபோது,

"ஓ.... தம்பி ரகுவோ, வாமோனே, எப்ப வந்தனி? ஏன் ராசா பாஸ்கரன் இந்த முறையும் வரயில்லையாமே?" பழைய கந்தல் உடையுடன் காணப்பட்ட பாஸ்கரனின் தாயார் ரகுவை வரவேற்றார்.

ரகு திண்ணையில் இருந்தபடியே சொன்னான்: "ஆக பத்து நாள் லீவுதான், அதுதான் நான்தனிய வந்தனான். அவன் அங்கை நிண்டா படிக்கலாம் என்று தான் வரயில்லை. சோதினை முடிய வருவான்."

"என்ன தம்பி படிப்பெண்டாப் போலை இனசன உறவுகளை மறக்கிறதே? ஒருக்கா உன்னோடை வந்திட்டுப் போயிருக்கலாம்."

"சோதினை முடிய இஞ்சதானே நிக்கப்போறான். இப்ப படிக்கட்டுமேன்."

"ஓ....அதுவும் சரிதான். அது சரி எப்படி படிப்புகள்....?"

"பரவாயில்லை. பாஸ்கர் நல்லாய் படிக்கிறான்." ரகுவின் குரல் தழுதழுக்க வார்த்தைகள் வெளியேறின.

கதையைக் கேட்டுக் கொண்டு உள்ளே படுத்திருந்த பாஸ்கரின் தகப்பனார் தள்ளாடியபடி வெளியே வந்தார்.

"தம்பி ரகு, அவனுக்கு சொல்லு– ஒழுங்காய் படிக்கச் சொல்லி, அக்காவின்ரை கலியாணமும் குழம்பிப் போச்சு. அவை கேக்கிற அளவு குடுக்க எங்களுக்கு வசதி இல்லை. இனி உவன் தான் உழைக்க வேணும்."

ரகு பாஸ்கரனின் நிலைமையை சிந்தித்தவாறே கொடுத்த தேனீரைக் குடித்தான். இவ்வளவு எதிர்பார்ப்புக்கள் மத்தியில் வாழ்பவர்களிடம் அவனால் எப்படி அங்குள்ள நிலைமையைச் சொல்லமுடியும்? எதுவும் கூறமுடியாதவனாய் தலையை அசைத்தபடி அவர்களிடமிருந்து விடை பெற்றான்.

இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின. மாணவர்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக நின்று முடிவுகள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். பாஸ்கரன் ரகுவின் அருகில் வந்தான். வந்தவன் எதுவும் பேசாமல் நிலத்தைப் பார்த்தபடியே நின்றான்.

"என்ன பாஸ்கர்....?" ரகு ஆரம்பித்தான்.

"நீ ஜெயிச்சுட்டாய். நான்...." வார்த்தைகளுக்காக தவித்தான் பாஸ்கரன்.



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

# கொலை மாலை

**தருவது ரசிகன்**

மாலையானால் போதும் வானதிக்கு இறக்கை முளைத்து விடும்.

நிலைக்கண்ணாடியின் முன்சென்று ஒன்றுக்கு பத்துத்தடவை முகம் பார்த்துக்கொள்வாள். அலங்காரங்களை சரிபார்த்துக்கொள்வாள்.

மாலையாகும் முன்னரே உடலெங்கும் பரபரப்பு வந்து தொற்றிக்கொள்ளும். பரபரப்பு மட்டுமா, குறு குறுப்பும்தான்.

காலையில் எழும்போதே எப்போது மாலையாகும் என்ற நினைப்புத்தான் மனதில் எழும். சூரியன் உதிப்பதற்கு முன்னரே அதனைத் துரத்துகிற அவசரம் அவளுக்கு.

மாலையில்தானே மனம் கவர்ந்தவனின் முகம் காணமுடியும். மாலையில் சந்தித்து தித்தித்து பிரிந்த பின்னர் மறுநாள் மாலை எப்போது வரும் என்று எண்ணுகின்ற ஆவல் காதலர்களுக்கு சகஜம்தானே.

மாலை நேரம்தவிர வேறெந்த நேரமும் மனதுக்கு இனியதல்ல என்றாகி விட்டது. மாலைநேரம் எப்போது வருமென்று எதிர்பார்ப்பில்தான் மீதிப் பொழுதெல்லாம் கரைகிறது.

வானதிக்கு நேற்றைய மாலையில் அவன் செய்த குறும்பெல்லாம் இரவில் தூக்கத்தை தொலையவைத்தது. பிடிவாதமாக தூக்கத்தை அழைத்தபோது பின்னிரவில்தான் தூக்கம் மெல்லத் தழுவியது.

காலையில் சோம்பலாகத்தான் இருந்தாலும், மாலையை நினைத்தவுடன் அந்தச் சோம்பல் போன இடம் தெரியவில்லை. துள்ளி எழுவாள்.

காதலிக்கத் தொடங்கியபின்னர் வானதி மாறித்தான் போனாள். அம்மா வலிந்து கேட்கா மலேயே வலியச் சென்று அம்மாவுக்கு ஒத்தாசை புரிந்தாள்.

மாலைக்குப் பின்னர் செய்ய வேண்டிய இல்லத்து பணிகளைக்கூட மாலைக்கு முன்னரே சுறுசுறுப்பாய் முடித்து வைத்தாள்.

அதில் ஒரு சுயநலமும் இருந்தது. மாலையானதும் வெளியே செல்ல அம்மா அனுமதிக்க வேண்டுமல்லவா. வேலை ஏதும் மீதியிருந்தால் தடங்கல் வருமல்லவா. தவிர, அம்மா மனம் குளிர்ந்தால் தானே அனுமதி துரிதகதியில் கிடைக்கும்.

காதலிக்கத் தொடங்கிய பின்னர் வானதிக்குள் மேலும் ஒரு மாற்றமும் தெரிந்தது. அம்மாவை, அயல்வீட்டு மாமியை, அருகிலிருக்கும் தோழிகளை எல்லாம் முன்பைவிட ஆழமாய் நேசிக்க முடிந்தது.

காதல் சகலரையும் நேசிக்க, சகலவற்றையும் நேசிக்கக் கற்றுக் கொடுக்கிறதோ? முற்றத்து செம்பருத்திப்பூ கூட முன்பைவிட அழகாகத் தெரிகிறது. முழுநிலவுகூட புதிதாகத் தெரிகிறது. மனது முழுக்க புத்துணர்ச்சி பரவி இருக்கிறது.

மனதில் ஒரு சோர்வு எட்டிப்பார்த்தால்கூட மாலைச்சந்திப்பை நினைத்தால் உடலெங்கும் புது இரத்தம் பாய்ந்து வருகிறது.

தோழிகள் கவனித்து கேலி செய்தார்கள். "மாலைவரைதானே நாங்கள் தேவை. மாலையானதும் நிலவு வானத்தின் மார்புக்கு போய்விடுமே. நாமிருக்கிறோம் என்ற நினைப்பே எட்டிப்பார்க்காதே!"

"போங்களடி, போகாமல் இருந்தாலும் பிணக்கா? என்பீர்கள். போய்வந்தாலும், பொல்லாப்பாக பேசி என் மனம் முறிப்பீர்கள்!"



"கவலைப்படுகிறாளாம்: இனிமேல் கேலியே செய்யமாட்டோம் தாயே! நம் கேலி இனிமேல் ருசிக்குமா? செவியில் இனிக்குமா? பால் கண்ட பூனை பச்சைத் தண்ணீரையோ நாடும்?"

"உங்களிடம் எதையும் மறைக்காமல் இருந்தேனே. அது என் தவறு!"

"அப்படியா?" ஒரு தோழி குறுக்கிட்டுக் கேட்டாள்.

"அப்படித்தான்!" என்றாள் வானதி. தோழி விடவில்லை.

"அப்படியானால் நாம் கேட்கும் வினாக்களுக்கு விடை சொல்லு பார்க்கலாம்!"

"என்ன?" என்றாள் வானதி, என்னவெல்லாம் கேட்கப்போகிறார்களோ என்று நினைத்தபடி.

"நேற்று மாலையில் என்ன நடந்தது?"

"சந்தித்தோம். பேசினோம்!"

"தூரம், எட்டவோ, கிட்டவோ?"

"போடி!" என்றாள் சிவந்த முகத்துடன்.

"என்னடி செய்தார்?"

"ம்....பேசிக்கொண்டிருந்தார்."

"பேச்சு மட்டும்தானா?"

"மட்டும்தான்!"

"ஏனடி விரதமிருக்கிறாரோ?"

"இருக்கும்!"

"நீயும் விரதமோ?"

"இருக்கலாம்!"

"பொய் என்று சொல்கிறதடி உன் கழுத்தில் உள்ள பற்குறி!" விஷமமாய் ஒருத்தி சொல்ல, வானதி தன்னிலை மறந்து, கழுத்தை தன் கையால் தொட்டுப் பார்த்தாள். கொல்லென்று நகைத்தனர் தோழிகள்.

"வேறெங்கே தோழி பற்குறி, நகக்குறி தடயங்கள்? விரத வேஷம் வெளுத்து விட்டதே பார்த்தாயா? பிறர் கண்படும் இடத்திலாவது கவனமாக இருந்திருக்கக் கூடாதா?" மற்றொருத்தி கரிசனையான குரலில் பேசினாள்.

தோழிகள் சொல்வது உண்மையாக இருக்குமோ? வெட்கம் பிடுங்கித்தின்றது. உள்ளே ஓடினாள். நிலைக் கண்ணாடி முன் நின்று பார்த்தாள். கழுத்தில் காயம் இருக்கவே இல்லை. 'விஷமக்காரிகள்' என்று சொல்லிக் கொண்டாள்.

நேசமான காயம் இருந்தது உண்மைதான். அது கழுத்திலே அல்ல. அதனால் தான் தோழிகள் சொன்னதும் கழுத்திலுமோ என்று நினைத்து விட்டாள். ஏமாந்து போனாள்.

தோழிகளின் கேலியும், காதலனின் குறும்புகளுமாய் கழிந்த மாலை வேளைகள் எத்தனை, எத்தனை.

ஆனால், இன்றைய மாலை வேளை மட்டும் வரக்கூடாது என்று காலையில் இருந்தே நினைக்கத் தொடங்கிவிட்டாள் வானதி.

வழக்கமாக மாலை வேளைகளில் முளைக்கும் சிறகுகள் இன்று வெட்டப்பட்டுக் கிடந்தன.

வெட்டியது யார்?

பிரிவென்னும் வாள்!

திரும்பிவர ஒருவாரமாகும். "தந்ததையெல்லாம் நினைத்துக்கொள்; நினைத்து முடிப்பதற்கிடையில் நேரில் நிற்பேன் பார்த்துக்கொள்!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

நிலவில்லாத வானம் ஒளிருமா? நீயில்லாத மாலை வேளை குளிருமா? உப்பில்லாத பண்டம் ருசிக்குமா? உன் அருகில்லாத மாலை இனிக்குமா? என்று மனதில் கேள்விக் கணை தொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவன் சந்திப்பை நினைத்து உச்சி முதல், உள்ளங்கால்வரை பரவும் குறு குறுப்பும், மாலையை நினைத்தபடி ஓடியாடி வேலை செய்யும் சுறு சுறுப்பும் இன்று எங்கே போனது?

"என்னடி வானதி, உடல்நலமில்லையா?" என்று அம்மாவும் கேட்டு விட்டாள்.

'உளம் நலமில்லை' என்று எப்படி சொல்ல முடியும்.

மாலை வேளை நெருங்க, நெருங்க மனம் கிடந்து தவித்தது. 'இன்று அவர் இல்லையே!' என்று மனது முழுக்கவும் வெறுமை தோன்றியது.

நேற்றைய மாலை நேரம் இனித்தது. இன்றைய மாலை நேரமோ உடலையும், உள்ளத்தையும் ஒன்றாக எரிக்கிறது.

அவன் இருந்தால் ஒவ்வொரு மாலையும் வசந்தம். இல்லையென்றால் நரகம்.

நேற்றைய மாலைப் பொழுது "நேரமாக்கிவிட்டது வா" என்று காதல் தூதாய் கண்சிமிட்டியது.



இன்றைய மாலைப்பொழுதோ "உன் நிலை தனிமை" என்று சொல்லாமல் சொல்லி என்னைக் கொல்லாமல் கொல்கிறது.

'இன்றைய மாலைப்பொழுதை எதற்கு ஒப்பிடலாம்?' வானதி யோசித்தாள். மாலையை வசைபாடவேண்டும் என்று அவளுக்கு கோபம் வந்தது. திருக்குறளின் நினைவும் வந்தது.

திருவள்ளுவரும் காதலன் இல்லாத மாலையில் காதலியின் துயர் பற்றிச் சொல்லியிருக்கிறாரா? மனதில் பதித்து வைத்திருந்த திருக்குறளை நினைவால் புரட்டினாள். அட, சொல்லியிருக்கிறாரே.

என்ன சொல்லியிருக்கிறார்?

**"காதலர் இல்லாத மாலைப் பொழுது கொலைக்களத்து பகைவர் போல உயிரை மாய்க்கும் விதமான கொடுமை செய்யும்."**

**"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து ஏதிலர் போல வரும்."**

*அதிகாரம்:- 123, குறள்:- 1224*

# விளையாட்டுப்பிள்ளை வினோத் காம்ளி



இந்திய கிரிக்கெட் அணியில் வினோத் காம்ளி மீண்டும் சேர்க்கப்படுவாரா இல்லையா என்று தெரியவில்லை.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் அவரை அழைத்துச் சென்றிருக்கலாம். இங்கிலாந்துக்கு எதிரான போட்டிகளில் வினோத் காம்ளி முன்னர் நன்றாக ஆடியிருந்தார் என்று கூறப்படுகிறது.

வினோத் காம்ளி தன்னை தொடர்ந்து புறக்கணிப்பது தொடர்பாக கவலையுடன் காணப்படுகிறார். என்றாலும் மனோஜ் பிரபாகர், சித்து ஆகியோர்போல கிரிக்கெட் நிர்வாக சபையுடன் அவர் நேரடியாக மோதவில்லை.

வினோத் காம்ளி நீக்கப்பட்டது தொடர்பாக தற்போது புதிய தகவல் ஒன்றை இந்திய பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்ற போது அணியினருடன் தங்கியிருந்த வினோத் காம்ளி இரவில் வெளியே சென்று விடுவார். திரும்பிவருவதற்கு நேரமாகும். இந்தப் பழக்கம் ஒரு வழக்கமாகவே தொடர்ந்தது.

அணி வீரர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் திரும்பவரும் காம்ளியால் வீரர்களது தூக்கம் கெட்டுப்போனது. வினோத் காம்ளியிடம் இந்தப் பழக்கத்தை கைவிடுமாறு கோரியும் பயன் இல்லை. அவர் எங்கு செல்கிறார் என்று அணியின் கப்டனுக்கும் தெரிவதில்லை.

வினோத் காம்ளிக்கு பெண் இரசிகைகள் ஏராளம். அதிலே சிலர் கோடீஸ்வர வீட்டுப் பெண்கள். வினோத் காம்ளி தமது பகுதிக்கு விளையாட வருவதாக அறிந்தால் அவருடன் தொடர்பு கொண்டு வீட்டுக்கு அழைக்கிறார்கள். விருந்து கொடுக்கிறார்கள். அவர்களோடு ஜாலியாக பொழுதை போக்கிவிட்டு திரும்புவதால்தான் நேரமாகிறது என்று ஒரு தகவல் சொல்கிறது.

கிரிக்கெட் போட்டி நடைபெறும் நாட்களில் பெண்களுடன் தொடர்பு கூடாது என்பது இந்திய கிரிக்கெட் சபையின் கட்டுப்பாடு. அதனை வினோத்காம்ளி கருத்தில் கொள்ளவில்லையாம்.

வினோத் காம்ளிக்கு ஒரு தண்டனை மாதிரித்தான்- அணியில் இருந்து தற்காலிக இடைநிறுத்தம். மீண்டும் அவருக்கு அணியில் விளையாட சந்தர்ப்பம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் சமயங்களில் வினோத் காம்ளி ஆடுகளத்தில் மட்டும் தமது திறமையைக் காட்டினால் போதும் என்று விமர்சனம் செய்துள்ளார் ஒரு கிரிக்கெட் விமர்சக குறும்பர்.

# ஆவிகளுடன் பேசலாமா?

# சிந்தியா பதில்கள்

**★ பிரேமதாசாவின் சிலை மாவனல்லையில் உடைக்கப்பட்டது பற்றி?**

எம்.என்.ரபீக், மாவனல்லை.

*ஒரே வார்த்தை; அநாகரீகம்.*

**★ யாழ்ப்பாணத்தில் இருந்து தபால்கள் ஒழுங்காக வரத்தொடங்கிவிட்டதா? நம் உறவினர்களின் கடிதங்களை காணவில்லையே?**

எம்.கனேந்திரன், கொழும்பு-06.

*பூரணமாக சீராகவில்லை சில பகுதிகளில் இருந்து கடிதங்கள் வருகின்றன. இன்னொரு விடயம், சிலர் சுயதணிக்கையோடு எழுதுகிறார்கள். எல்லாம் ஒரு விழிப்புணர்ச்சிதான். ஏனடா வம்பு என்று கடிதமே எழுதாத சிலரும் இருக்கக்கூடும்.*

**★ யாழ் மாணவருக்கு சீருடைகள் அனுப்பப்படுவதாக செய்திகள் பார்த்தேன். கல்வி அங்கு மீண்டும் செழிக்குமா?**

ஆ.பெஞ்சமின், வெள்ளவத்தை.

*சீருடையைவிட முக்கியம் நிலமை சீரடைதல்!*

**★ ஆவிகளுடன் பேசுவது பற்றிய பேச்சுக்கள் பரவலாக அடிபடுகிறதே! உண்மைதானா?**

கே. சுந்தர், கொழும்பு-09.

*ஐயா சுந்தர்! மனிதன் மனிதனோடு பேசியே ஒன்றும் நடக்கமாட்டேன் என்கிறது. இந்த இலட்சணத்தில் ஆவிகளோடு வேறு பேச வேண்டுமாக்கும்! வேலையைப் பாருமய்யா!*

**★ தங்கள் காரியத்தை நிறைவேற்ற நம்மோடு பழகுபவர்களோடு எப்படி நடந்துகொள்ள வேண்டும்?**

செல்வி. ஆர்.ரபீகா, சிலாபம்.

*முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்.*

**★ என் இனிய சங்கவிக்கு கடிதம் போட்டால் புகைப்படம் அனுப்புவாரா?**

ஏ. சந்திரகாந்தன், நுவரெலியா.

*அதற்கெல்லாம் அவருக்கு எங்கே நேரமிருக்கப்போகிறது? களைப்பே தெரியாமல், சளைப்பே இல்லாமல் 'கலைச்சேவை' புரிபவரை தொந்தரவு செய்யலாமா?*

**★ தற்போதைய இந்தியப் பிரதமர் பற்றி சிந்தியாவின் அபிப்பிராயம் என்ன?**

எம்.எல்.ஜவாஹிர், மினுவான்கொட.

*இந்த வருடத்தின் மிகச் சிறந்த அதிஷ்டசாலி.*

**★ டியர் சிந்தியா! இளவரசி டயானாவின் நிரந்தர விலாசத்தை தரமுடியுமா?**

நசீனா நசீன், பூலாச்சேனை.

*டயானாவைப் பொறுத்தவரை எதுவுமே நிரந்தரமில்லை: விலாசமும்தான்!*

**★ இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சனைக்கு எப்போது தீர்வு கிடைக்கும்?**

எஸ்.எம்.மெலோசா, கொழும்பு-08.

*கடவுளையும் கண்ணீர் விடவைக்கும் கேள்வி.*

**★ முத்தக் காட்சிகளில் கமலுக்கு ஏன் அத்தனை ஈடுபாடு?**

வி. அகமட், ஜா-எல.

*"அவர் உதடுகளைக் காதலிப்பவரல்ல" இது கமலின் மனைவி சரிகா ஒரு பேட்டியில் சொல்லியிருப்பது. காதலிப்பவரல்ல- கதைப்படி அவசியப்பட்டால் சட்டென்று கவர்பவர்; அவ்வளவுதான்.*

**★ ஹலோ சிந்தியா! மழை வர பூமி மறுப்பதென்ன?**

என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.

*தவறான கேள்வி அமீனுதீன். பூமி வழிமேல் விழிவைத்து காத்திருக்க, வானம்தான் பூமியை காத்திருக்க வைத்து வேடிக்கை பார்த்தது. பொறுத்துப் பார்த்த பூமி கோபத்தால் வெப்பமாக, பயந்துபோன வானம் மழைச்சரம் பொழிந்து சமரசம் செய்து கொண்டது. பூமிக்கு ஒரே குளிர்ச்சிதான் போங்கள். மகிழ்ச்சியில் தலைகால் புரியாமல் பூமி ஆட, ஆங்காங்கே வெள்ளச் சேதங்கள்.*

**★ பெண் இல்லாத வாழ்வை எதற்கு உவமையாகக் கூறலாம்?**

செல்வி. லெனஷி நிக்கலஸ், கொழும்பு-13.

*உச்ச வெப்பத்தில் தகிக்கும் பாலைவனத்திற்கு.*

**★ காதலின் அர்த்தம் என்ன?**

தி.புவனேசராசா, மகிழூர்-01.

*புரிந்துகொண்டு நேசித்தல்.*

**★ ரஜினிகாந்தின் இன்றைய நிலை என்ன?**

சி. சிறீதரன், திருமலை.

*கோட்டையிலே வைத்து கலைஞரை சந்தித்திருக்கிறார். பதவி ஒரு ரகம். அடுத்தவரை பதவியில் அமர்த்தி நிறைவாக வாழ்த்துவது இன்னொரு ரகம். இதில் ரஜினி இரண்டாவது ரகம். ஆனால் ஒரு விஷயம், கலைஞரை முதல்வர் ஆசனத்தில் அமர்த்தி கண்நிறையக்கண்டு மகிழ்ந்தவர் இன்னொருவரும் இருந்தார். அவர் எம்.ஜி.ஆர்!*

**★ தெய்வீகக்காதல் என்று கூறமுடியுமா?**

ஐ. சக்காரியா, புல்மோட்டை-01.

*கொஞ்சம் பொய் கலப்பது தப்பில்லை என்று நினைத்தீரானால் சொல்லிவிட்டுப் போமேன். காசா.....? பணமா.....?*

**★ இதயமே இல்லாத பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

*மருத்துவ உலகமே வியப்பில் உறைந்து போகக்கூடிய செய்தியை இப்படி சாதாரணமான கேள்வியாக கேட்டுவிட்டீரே?*

**★ நடிகர் ரஜினிகாந்தின் பலத்தாலா கருணாநிதி வெற்றி பெற்றார்?**

எ.என்.எம்.நாஸிர், படகொள்ளாதெனிய.

*பலத்தாலும் தான்; அந்தப் பலத்தால் மட்டுமல்ல!*

**★ தமிழக வாக்காளர்களின் எழுச்சிக்கு யார் காரணம்? கலைஞரா, ரஜினியா, தி.மு.க.- த.மா.கா.கூட்டா?**

வி.சேதுபதி, கண்டி.

*ஜெயலலிதா!*

**★ காதிலை பூ கந்தசாமி கற்பனை செய்தது போல நடிகைகள் கட்சி தொடங்கினால் என்னாகும்?**

ஜெ. மனோகரி, கந்தப்பளை.

*தேகத்தைக் காட்டிப் பிழைப்பவர்கள், தேசத்தைச் சொல்லி பிழைத்துக் கொள்வார்கள்.*

**★ பெற்றோரை மதிக்காத பிள்ளைகளைப் பற்றி?**

என்.சூர்யகலா, நீர்கொழும்பு.

*தாங்களும் பெற்றோர்களானதும் அதற்காக ஒருநாள் வருந்துவார்கள்.*

**★ தமிழ்நாட்டில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி எப்படியிருக்கிறது?**

வி. இரத்தினம், பதுளை.

*இதுவரை எளிமை. தமிழக மக்களைப் பொறுத்தவரை ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் இது ஒரு புதுமை.*

**★ ரசிய தேர்தலில் யார் வெல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்?**

கே. ஜஸ்மீன், கல்முனை.

*நிச்சயமாக யெல்ட்சின் அல்ல.*



**★ மின்சாரம் முற்றாக நின்றுபோன அந்த நாட்களில் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?**

கே. ரவீந்திரன், கருவாஞ்சிக்குடி.

*மின்விசிறி இல்லாதபோதும், மண் வாசனையோடு வீசும் சுத்தமான ஊர்க்காற்றை நினைத்து ஏங்கிக்கொண்டிருந்தேன்.*

**★ காதல்-நட்பு என்ன வித்தியாசம், சொல்லுங்கள் பார்க்கலாம்?**

நர்மதா இராசதுரை, கொழும்பு-07.

*இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தது.*

**★ டியர் சிந்தியா! சசிகலாவை விட்டு பிரியவே மாட்டேன் என்று ஜெயலலிதா பிடிவாதம் பிடிப்பது ஏன்?**

எம். லிங்கநாதன், பூண்டுலோயா.

*கிடைத்தவரை போதும், இனி கலைஞரே ஆளட்டும் என்ற நல்லெண்ணம்தான்.*

**★ நேரமாற்றம் காரணமாக ஜாதகம் பிழைக்கும் என்கிறார்களே: உண்மையா?**

கோ. ஸ்ரீதரன், அப்புத்தளை.

*எனது கேள்வி, ஜாதக பலன் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறதா என்ன?*



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 35

இராமபிரான்-கரன், திரிசிரா, தூடணன் ஆகிய அரக்கர் தலைவர்களையும் அவர்களுடன் வந்திருந்த அரக்க வீரர்களையும் தனியாகவே நின்று சமரிட்டு முறியடித்ததை அறிந்த தண்டகவனத்து முனிவர்கள் அனைவரும் திரண்டு வந்து இராமருக்கு தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டனர்.

வானவர்கள் வானவீதியில் நின்ற வண்ணம் மலர்மாரி சொரிந்து வாழ்த்தினர். தங்களுக்கு நேரடியாகத் தீங்கிழைக்காத அரக்கர்களை ஏன் வதை செய்ய வேண்டும், என்று முன்பு இராமரிடம் விவாதித்த சீதையும் உண்மையை உணர்ந்து அத்தகைய ஐயப்பாடு தனக்குத் தோன்றியமைக்காகத் தன்னையே நொந்தவளாக-கணவனின் தாள் தொட்டு வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

வெற்றிவாகை சூடிய தன் தமயனின் தீரச்செயல் கண்டு உளம் பூரித்த இளவல் இலக்குவனும் அண்ணனின் தாள் தொட்டு வணங்கினான்.



மார்பின் காம்புகளையும் தனது வாளால் வெட்டி விடுகிறான். உண்மையாக நடைபெற்ற இக்கதையை மூடி மறைத்து விட்டு, சீதையின் அழகினால் கவரப்பட்டு, அன்னவள் தன் அண்ணன் இராவணனின் இச்சைக்குகந்தவளாக இருக்கவே தகுதி உடையவள் என்று கருதினாளாம். அதற்காகவே அந்தச் சீதையைப் பிடித் திழுத்துவர எத்தனித்தாளாம். இதனால் இராமனின் தம்பியான இலக்குமணன் இக்கொடிய தண்டனையைத் தனக்கு வழங்கிவிட்டதாக வெறும் கற்பனைக்

எழுந்து அனைவரையும் திகைப்பிலாழ்த்தித் திக்குமுக்காடவைத்து விட்டது.

அண்டமே அதிரும் வண்ணம் அடிகளை விரைவாக வைத்து ஓடோடி வந்த சூர்ப்பணகை இராவணனின் அரசவை புகுந்தாள்.

## இலங்கை நகர் புகுந்த இளவரசி சூர்ப்பணகை

ஜனஸ்தானத்தில் நடைபெற்ற போரில் அரக்கர் தரப்புக்கு நேரிட்ட பேரிழப்புகள் பற்றி அகம்பன் இராவணனிடம் சென்று முறையிடுவதும், பேரழகி சீதைபற்றி அவன் வாயிலாகவே கேள்வியுற்று, அவளைக் கவருவதற்கு எண்ணி தனது தாய் மாமன் மார்சனிடம் ஆலோசனை கேட்பதும் கம்ப ராமாயணத்தில் விரிவாக இடம்பெறவில்லை. சூர்ப்பணகையே தனது தமயன் இராவணனிடம் ஓடிச் சென்று, தனது அங்கங்கள் அறுபட்ட கதையையும், அதற்குப்பழிவாங்கச் சென்ற சகோதரர்கள் அழிந்தது பற்றியும் எடுத்துக் கூறுவதைத்தான் கம்பநாட்டாழ்வார் மிகச் சிறப்பாக வர்ணிக்கிறார்.

இலங்கை மநாகரின் வடவாயில் வழியாக-சூர்ப்பணகை புகுந்து அழுது புரண்டு வரும் காட்சியையும், அவளுடைய அலங்கோலத் தோற்றம் கண்ட இலங்கை வாழ் மாந்தர்-அச்சம் ஒரு புறம், அனுதாபம் ஒரு புறம் கொண்டு தடுமாறும் தன்மையையும் புலவர் பெருமான் வர்ணிக்கும் முறை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. தவிர, சூர்ப்பணகை வரும்போது இலங்கேஸ்வரன் எத்தகைய அழகலங்காரங்களுடன் அரியணையில் அமர்ந்திருந்தான் என்பதையும் உன்னதமாக எடுத்துக் காட்டுகிறார். இலங்கேஸ்வரனின் வீரத்தையும் பெருமையையும் விளக்கும் கம்பநாட்டாழ்வார் பாடல்களில் இதுவும் ஒன்று:

**திசை உறு கரிகளைச்**
**செற்று, தேவனும்**
**வசையுறக் கயிலையை மறித்து,**
**வான் எலாம்**
**அசைவுறப் புரந்தரன்**
**அடர்த்த தோள்களின்**
**இசையினைத் துன்புரு**
**இசையின் ஏத்தவே.**

(ஆரண்ய காண்டம்-3078)

பொருள்:

**எட்டுத்திக்குகளையும் தாங்கி நிற்கின்ற யானைகளுடன் போரிட்டு அவற்றின் செருக்கினை அடக்கியவனும், சிவபிரானே வீற்றிருக்கின்ற கயிலை மலையையே பெயர்த்தெடுத்து அன்னவருக்கே பழியுண்டாக்கியவனும், விண்ணுலக வாசிகளாகிய தேவர்களே நடுநடுங்க இந்திரனுடன் போர் தொடுத்த வலிமை பொருந்திய இருபது தோள்களையுடையவனுமான இலங்கை வேந்தனுடைய புகழை தும்புரு எனும் கந்தர்வன் இசை மீட்டிப்பாடிக் கொண்டிருக்க- இலங்கை மாநகரின் அரியாசனத்தில் இராவணன் வீற்றிருந்தான்.**

### சூர்ப்பணகையின் சூழ்ச்சி

சூர்ப்பணகை தண்டகவனத்தில் நடந்த உண்மைகளை மறைத்து தனது தமயனான இராவணனிடம் பொய்யான கதைகளைக் கூறுவதற்குத்திட்டமிட்டாள். இராமரைக் கண்டதும் அவர் மீது காமுற்று, தன் எண்ணம் ஈடேறாமையினால் சீதை மீது கொண்ட பொறாமையின் காரணமாக அவளைப் பிடித்து விழுங்கிவிட முயற்சிக்கிறாள். இதனைக் கண்ட இலக்குவன் அவளுடைய மூக்கையும் செவிகளையும்

கதை யொன்றை உரு வாக்கி தனது தமயனாரிடம் கூறுகிறாள்.

சீதையினை பல வருடங்களுக்கு முன்னர் ஒரு சில நொடிகள் மட்டுமே கண்டு, அவளுடைய அழகில் அவாக் கொண்டவன் இராவணன். அந்தச் சம்பவத்தை மறந்திருந்த போது அகம்பன் என்பவன் சீதையின் அழகுருவை வர்ணித்தபோது, பசு இரை மீட்பது போல, மீண்டும் சீதையின் எண்ணம் இராவணனின் உள்ளத்தில் புயலை ஏற்படுத்துகிறது. மாமன் மாரீசனின் புத்திமதிகளால் ஒரளவு தெளிவுற்றவன் செவிகளில் தங்கை சூர்ப்பணகை மற்றுமொருமுறை சீதை பற்றிய நினைவுகளைக் கிளர்ந்தெழ வைக்கிறாள்.

ஊழ் வினையின் வலிமையை என்னவென்று சொல்வது? எவராலும் தனக்கு அழிவே வரலாகாது என்று பல்லாண்டு காலம் தவமிருந்து பெற்ற வரமே செயலற்றுப் போகும் காலம் விரைந்தோடி வருவதனாலன்றோ இராவணேசனின் புத்தி தடுமாறுகிறது!? மாபெரும் வீரனான இலங்கேஸ்வரனின் வீழ்ச்சிக்கு வேறு எவரும் காரணமல்ல; அவனுடைய அன்புக்குரிய தங்கையே வழி வகுக்கிறாள். அவள் இராமன் மீது கொண்ட ஆசையை மறைத்து விட்டு-இராமன் தன்னை வெறுத்தமைக்குக்காரணமாக விளங்குபவள் சீதை என்பதனால், தன் அண்ணன் மூலமாக இராமரிடத்திலிருந்து சீதையைப் பிரிக்க சூர்ப்பணகை சதி செய்கிறாள்.

### இலங்கை மக்கள் ஏக்கம்

வட இலங்கையினூடாகப்புகுந்த சூர்ப்பணகையின் கோலம் கண்டு இலங்காபுரி மாந்தர் அனைவரும் நிலை குலைந்தனர். "மூவுலகையும் நடு நடுங்க வைக்கும் ஆற்றலுடைய இலங்கேஸ்வரனின் தங்கைக்கு இத்தகைய கொடுமையை எவன் செய்தான்?" என்று கேட்டனர் பலர். "இந்திரன் செய்திருக்க மாட்டான். ஏனெனில் அவன் இராவணனுக்கு ஏவல் செய்யும் நிலையிலிருக்கிறான். இராவணேஸ்வரனின் தங்கைக்கு திருமால் தீங்கு நினைக்கமாட்டான். இராவணனுக்கு அஞ்சியே திருமால் கடலில் போய் வழ்பவனானான். தியினைக் கையிலேந்திய சிவ பெருமானும் இராவணனிடம் அகப்பட்டுத் திண்டாடவிரும்பாமல் கைலயங்கிரியில் போய் உறைந்து கொண்டான். அவ்வாறிருக்க இராவணனின் தங்கைக்கு இப்பேர்ப்பட்ட கொடுமையினை எவர்தான் செய்திருக்க முடியும்?" என்று விசனப்பட்டனர் பலர்.

"சூர்ப்பணகையின் நடத்தையில் சந்தேகப்பட்ட ஜனஸ்தானத்தின் அதிபனும் அவளுடைய சகோதரனுமான கரன் இவ் வாறு தண்டனை கொடுத்திருப்பானோ?" என்றும் சிலர் சந்தேகப்பட்டனர்.

எப்போதும் இசைக்கருவிகள் இன்னிசை முழங்க, இயல் மற்றும் கூத்தும் இணைந்து முத்தமிழ் பொழியும் இலங்கை மாநகரின் கண் என்றுமே எழுந்திராத அவல ஒலி

அவள் அவையுள் வருவதற்கு முன்னரே அவளுடைய அழுகை ஒலி வந்து அவையிலுள்ளோரை அதிர்ச்சிக்குள்ளாழ்த்திவிட்டது. அவளுடைய அலங்கோலத் தோற்றம் கண்ட அனைவரும் திகைத்தனர்.

இராவணன் தன் தங்கையின் கோலம் கண்டதும் கொடுஞ்சினங் கொண்டவனாக சிம்மாசனத்தை விட்டெழுந்தான். "அண்ணாவோ... அண்ணாவோ...." என்று அலறியவண்ணம் சூர்ப்பணகை இராவணனின் கால்களில் ஓடிச்சென்று விழுந்தாள்.

### வெஞ்சினங்கொண்ட வேந்தன்

இராவணனின் பத்து வாய்களிலுமிருந்து கோபாக்கினி கொப்பளித்தது. மீசைகள் துடித்தன. "தங்கையே! இந்தக் கொடுமையை உனக்கிழைத்தவன் யார்?" என்று சிம்மம்போல் கர்ஜித்தான். இராவணனின் குரல் கேட்டு மூவுலகமுமே அதிர்ந்தது. தேவர்களும் நடுங்கினர். அவையிலுள்ள அனைவருமே மயக்கமுற்று கீழே விழும் நிலைக்குள்ளானார்கள்.

## இராஜகுமாரி

எங்கும் நிசப்தம் நிலவியது. மீண்டும் இராவணனின் இடியோசை போன்ற பேரொலி எழுந்தது. "சூர்ப்பணகையே! அரக்கர் குலக் கொழுந்தே! உன் அங்கங்களை அறுத்து உன்னை அவலெட்சணமாக்கிய அக்கொடியவன் யார், அவன் தேவனா? வாமனனா? என் வெஞ்சினத்தைச் சந்திக்கிழுத்து வேடிக்கை காட்டத் துணிந்த அந்த வாளேந்தி எங்கே இருக்கிறான்? சொல் உடனே! விழி மூடித்திறப்பதற்குள் அந்த வீணனை என்கால் சின்னி விரலால் நசுக்கி விடுகிறேன். எங்கே அவன்..?" இவ்வாறு வினாக்களை ஒன்றன்பின் ஒன்றாக இராவணன்-குமுறும் எரிமலையாக-அடுக்கிக் கொண்டே போனதைக் கண்ட சூர்ப்பணகையே மனம் தடுமாறத் தொடங்கிவிட்டாள்.

தான் கூறப்போகும் பொய்த்தகவல்களை எங்கே தமயன் கண்டு பிடித்து விடுவானோ என்ற ஏக்கம் ஒரு புறம் சூர்ப்பணகையை வாட்டியது. அதுமட்டுமல்லாமல், தன் மனதில் குடிபுகுந்து தன்னை ஆட்டிப்படைக்கும் ஆணழகனுக்கு தன் தமயனால் தீங்கு ஏற்பட்டு விடுமோ என்றும் மறுபுறம் பயப்படலானாள். இராமரிடமிருந்து சீதையைப் பிரித்துவிட்டால், இராமரை எப்படியும் தன் மோகவலையில் சிக்க வைப்பது சுலபமாகிவிடும் என்பதுதான் அவளுடைய திட்டம்.

### "மன்மதனுக்கிணையான மாநிடர்கள்"

ஆரம்பத்தில் தன் அவயவங்கள் அறுபட்டமையினால் ஆத்திரமுண்டானது. வஞ்சம் தீர்க்க எண்ணி தனது சகோதரர்களான கரன் முதலானோரைப் பறி கொடுத்தாள். இருப்பினும் தன்னுடைய சாகசத்தால் சீதையை இராமரிடமிருந்து, அண்ணனைக் கொண்டு பிரித்து விடலாம், என்று திட்டமிட்டு அண்ணனிடம் ஓடிவந்தாள். ஆனால் அண்ணன் இராவணனோ கடுங்கோபம் கொண்டவனாகச் சீறி எழுந்த தன்மையினைக் கண்டு சற்று நேரம் செயலிழந்தாள்.

நொடிப்பொழுதில் சுதாகரித்துக்கொண்டு, தன் அவயவங்கள் அறுபடக் காரணமானவர்கள், அண்ணன் தம்பியாகிய இருவர் என்று கூறலானாள். "அவர்கள் இருவரும் மாநிடப் பிறவிகள்தான். அழகில் மன்மதனுக்கு இணையானவர்கள். வடபாலுள்ள மேருமலையினையே வெற்றி பெறும் அளவு வலிமை பொருந்திய தோள்களை உடையவர்கள். ஏழு உலகங்களையுமே வென்றுவிடும் சக்தி வாய்ந்த வில்லினை உடையவர்கள்" என்று தன்னையும் மீறி-இராம இலக்குவரைப் புகழலானாள்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி : 33**

**சரியானவிடை:- மாணிக்க ஆரம்.**

1. என். பாத்திமா. இல.149/2ஏ, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
2. செல்வி. செ.லதா. திம்புல கீழ் பிரிவு, பத்தனை.
3. செல்வன். பௌஸர்ஸலாம். 148/45, காதிய வத்த வீதி, தர்கா நகர்.
4. செல்வி. வே. யோகேஸ்வரி. இ/இரத்தினபுரி த.ம.வி., இரத்தினபுரி.
5. அருளப்பு-திரேசம்மா. ஏ.5.எஃப்27, புளுமண்டல் கொட்டஹேனா தொடர்மாடிக் கட்டிடம், கொழும்பு-13.

**போட்டி இல. 35** கேள்வி:- இலங்கேஸ்வரனின் வீழ்ச்சிக்குக் காரணமானது எது?

ஜூன் 22 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.35, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# நடக்காதென்பார் நடந்துவிடும்

இந்திய மத்திய ஆட்சியைப் பிடிக்க எம்.பிகளை விலைக்குவாங்கும் முயற்சிகள் எதிர்காலத்தில் நடக்கலாம். இந்தியாவில் மட்டுமல்ல வேறு பல ஜனநாயக நாடுகளிலும் 'இப்படி நடந்தாலும் ஆச்சரியமில்லை' என்று தனது கற்பனைக் குதிரையை தட்டிவிடுகிறார் காதிலை பூ கந்தசாமி.

**காதிலை பூ கந்தசாமி**

## விலைவாசி திடீர் உயர்வு

## "மூன்று எம்.பி.வாங்கினால் ஒருவர் இலவசம்"

எம்.பி.கள் தங்கள் விலையை உயர்த்திக் கொண்டமை கடும் கண்டனத்துக்குரியது என்று கட்சித் தலைவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே மேலும் தமது விலை அதிகரிக்கலாம் என்று கருதி எம்.பிகள் சிலர் பதுங்கியுள்ளனர். விலை மேலும் அதிகரித்தால் அவர்கள் வெளியே வந்து விற்பனையாகக் கூடும் என்று நம்பப்படுகிறது.



கட்டுப்பாட்டு விலையில் எம்.பிகளை வாங்கமுடியாத நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் கறுப்புச் சந்தையை நம்பியிருக்கின்றனர்.

எம்.பிகள் சிலர் ஒன்றுகூடி ஒரு குழுவாக செயற்படுகிறார்கள். மொத்தமாக வாங்கக் கூடிய கட்சித் தலைவர்கள் தம்மோடு தொடர்பு கொள்ளலாம். மூன்று எம்.பிகளை மொத்தமாக வாங்கினால் ஒரு எம்.பி. இனாமாக தரப்படுவார் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

தனி எம்.பிகள் அதற்குப் போட்டியாக வெளியிட்டுள்ள உத்தியோக பற்றற்ற விளம்பரத்தில், தம்மை வாங்குவோருக்கு ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்படும். ஒருவருடத்திற்கு இடையில் வாங்கும் கட்சியின் பாவனைக்கு உறுதியாக உழைப்போம். கட்சி மாற மாட்டோம் என்று கூறியுள்ளனர்.

கறுப்புச் சந்தையில் கறுப்பு சூட்கேஸ்களோடு கட்சித் தலைவர்கள் கடும் வெய்யிலில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

நியாயமான விலையில் கிடைக்கும் எம்.பி.களுக்கு அவர்கள் விருப்பப்படி உழைக்க உத்தரவாதம் தரப்படும். உபத்திரவம் தரப்பட மாட்டாது என்றும் கா.கே.கா கூட்டணி இரகசிய அறிவிப்புச் செய்துள்ளது.

ஆளுக்கு ஒரு மந்திரிப்பதவி வழங்கி புரட்சி செய்யப்போவதாகவும், அதனால் தாம் மட்டுமே எம்.பிகளது நிரந்தர வருமானத் திற்கும், நிகரற்ற இலாபத்திற்கும் உறுதிதரக் கூடியவர்கள் என்று சன தளக் கட்சியினர் அறிக்கை விட்டுள்ளனர்.

"சமதர்மமே எமது கொள்கை. திரளும் சம்பளமும், கிம்பளமும் பொது இடத்தில் வைத்து கணக்கிடப்படும். பின்னர் சமமாகப் பிரிக்கப்படும். அதன்மூலம் கிம்பளம் சுருட்டும் திறமை சற்றுக் குறைவான எம்.பி.களும் பயனடையலாம்." என்று புரட்சி அணியென்னும் மூன்றாவது அணியினர் கூறியுள்ளனர்.

அரசியல் கட்சித் தலைவர்களின் அறிவிப்புக்கள் தொடர்பாக ஐந்து நட்சத்திர விடுதிகளில் உள்ள சமையலறைகளில் ஒளிந்திருந்து எம்.பிகள் ஆலோசனை நடத்திவருகின்றனர்.

ஹோட்டல் அறைகளில் இருந்தால் உடனடியாக அடையாளம் கண்டு தாம் அபகரிக்கப்படலாம் என்பதால் சமையலறையில் ஒளிந்திருப்பதாக ஒரு எம்.பி. நமது நிருபருக்கு கொள்கை விளக்கமளித்தார்.

"சமையலறைகளில் எம்.பிகளை பதுக்குவது சட்டப்படி குற்றமாகாதா?" என்று ஹோட்டல் உரிமையாளரிடம் நமது நிருபர் கேள்வி எழுப்பினார்.

பதுக்கல் எம்.பிகளை கறுப்புச் சந்தையில் வாங்குவது மட்டும் குற்றமாகாதா? என்று அவர் திருப்பிக் கேட்டார்.

இன்னும் சில நாட்களில் எம்.பிகளது விலை மேலும் அதிகரிக்கக்கூடும். அதனால் அரசியல் கட்சித் தலைவர்களின் சூட்கேஸ்கள் வற்றி அவர்கள் நிதி வளத்தில் வறட்சி ஏற்படலாம் என்று அரசியல் வானிலை அவதானிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

### விற்பனைக்கு

போனால் கிடைக்காது-பொழுது பட்டால் இருக்காது. இப்போதே வாங்குங்கள். பதவியைப் பிடியுங்கள்.

தரமான விலையில்-நீண்டகால ஆதரவுக்கு உதவும் எம்.பிகளை எம்மிடம் மொத்தமாகவும், தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

நாலே நாலு எம்.பிகள் மட்டுமே கையிருப்பில் உள்ளதால் உடனே முந்துங்கள்.

**எம்.பிகள் விநியோகமையம்.**
**5 ஸ்டார் ஹோட்டல் சமையலறை.**





### தேவை

**உடனடியாக நாலு எம்.பிகள் தேவை. தகுந்த விலை தரப்படும்.**

நாட்டின் பிரபல கட்சியொன்றுக்கு குறைந்தது ஒருவருட உத்தரவாதமுள்ள எம்.பிக்கள் தேவை.

தங்குமிடவசதி, தொங்குமிடவசதி, சுரண்டுமிடவசதி என்பவை உட்பட சகல வசதிகளும் செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு; சூட்கேஸ்பெட்டி இல. 1666.**

### விண்ணப்பம்

அன்பார்ந்த ஐயா.

வணக்கம்

எம்.பிகள் தேவை என்று தாங்கள் வெளியிட்ட விளம்பரத்தை கண்ணுற்றேன். அதனடிப்படையில் இந்த விண்ணப்பத்தை தங்கள் மேலான பதவியாசை முன்பாக சமர்ப்பிக்கிறேன்.

பாராளுமன்றத்தில் நான் தங்களுக்கு பல வழிகளிலும் பயன்படமுடியும். மல்யுத்தம், மைக் யுத்தம், செருப்பு வீச்சு, வெறுக்க வைக்கும் வார்த்தை வீச்சு போன்றவற்றில் போதிய முன் அனுபவம் உண்டு.

ஒரு வருடமோ அல்லது ஐந்து வருடமோ என்னை.. மன்னிக்க.. என் எம்.பி. பதவியைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

இதுவரை 16 கட்சிகளில் பணியாற்றிய தகுந்த அனுபவமும் எனக்கிருக்கிறது.

தாங்கள் தகுந்த விலை தரத்தயாராக இருந்தால், தங்கள் முதலீட்டுக்கு ஏற்ற இலாபம் கிடைக்கும் என்பதை என் குருநாதர் பயில்வான் ரவுடி சந்தர்பால் மேல் ஆணையாக இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தங்கள் உண்மையுள்ள,**
**பயில்வான் ரவுடி சந்தர்பாலின் சிஷ்யன், ஜஸ்வந்சின்.**



படிப்பகம்

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433631




## பாவனைக்கல்ல

மிகச் சிறிய கௌ போய் சப்பாத்து இது. 3 அங்குல சுற்றளவும் 7.6 செமீட்டர் உயரமும் கொண்ட இதனை பாதணி தயாரிப்பாளரான கள் மவ்றாக்கிஸ் என்பவர் வடிவமைத்தார். அமெரிக்காவின் மொன்ரானா மாநிலத்தில் பில்லிங்ஸ் என்ற ஊரில் பிறந்தவர் மவ்றாக்கிஸ். பாதணி வடிவமைப்பிற்காக அரசினால் பல பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

பரிசுகளை வாங்கிய மகிழ்ச்சியில் உலக சாதனை படைக்கவும் ஆசைப்பட்டார். உலகிலேயே மிகச் சிறிய சப்பாத்தை உருவாக்கிக்காட்டிவிட்டார். மிக நுணுக்கமாக கலைநயத்தோடு பலசித்திரங்களையும் வரைந்து அனைத்தையும் சிறிய சப்பாத்துக்குள் அடக்கி வடிவமைத்துள்ளார். பாருங்கள் எத்தனை அழகாக இருக்கிறது. ஒரு கௌ போய் சப்பாத்து எப்படி இருக்குமோ அதே போலவே மூன்று அங்குல சப்பாத்திலும் துளியும் வேறுபாடில்லை. அதுதான் சாதனை. கின்னஸிலும் இது இடம்பெற்றுள்ளது.


அம்மன் ஜீவல்

AMMAN JEWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

332033


## நெஞ்சில் இட்டதீ



சமீபத்தில் நடந்த நெஞ்சை உலுக்கும் கொடுமையைத்தான் மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள். இஸ்ரேலிய யுத்த விமானங்கள் பொழிந்த குண்டுகளால் ஒரு கிராமமே எரிந்து கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (PFLP) இயக்கத்தின் ஒரு பிரிவின் முகாம் இக்கிராமத்தில் இருந்தது. எப்படியோ தகவலறிந்த இஸ்ரேலிய விமானங்கள் முகாமை மட்டுமல்ல, கிராமத்தையே நாசம் செய்துவிட்டுப் போய்விட்டன. இக்கிராமத்தின் பெயர்; நாமெய்ஷ். இது ஒரு மலைப்பகுதி கிராமம்.

விமானக்குண்டுவீச்சு, ஆட்டிலறிப் பீரங்கி வீச்சு (உள் படம்) என்பவற்றை இஸ்ரேலியர்கள் கைவிட்டபாடில்லை.

பாலஸ்தீனத்தில் சமாதானம் என்று வெளியே பேசப்பட்டாலும் அங்கு இன்னமும் பகை தீர்ந்தபாடில்லை. பலிகளும் நின்றபாடில்லை.

## சுமையோடு வேகம்

'ஒரம்போ, ஒரம்போ' என்று தெருக்களை அடைத்துக் கொண்டு நகரும் பாரம் இழுக்கும் 'ட்ரக்' வண்டிகளைப் பார்த்திருப்பீர்கள்.

சில ட்ரக் வண்டிகள் வீதிகளில் சென்றால் பின்னால் செல்லும் வாகனங்கள் பாடு அதோகதிதான். மெல்ல, மெல்லத்தான் வீதியில் நழுவி நகரும் ட்ரக் வண்டிகள்.

அதனால் போக்குவரத்து பிஸியாக உள்ள நேரங்களிலும் வீதிகளிலும் ட்ரக் வண்டிகள் செல்ல தடை விதிக்கப்படுவதும் உண்டு.

இனிமேல் அந்தச் சிரமம் எல்லாம் கிடையாது. பாரத்தை சுமந்தபடி வீதியில் புகுந்து சீறிச் சென்று விடக் கூடிய ட்ரக் வண்டி தயாராகிவிட்டது. (படத்தில் இருப்பது அதுதான்)

அமெரிக்காவில் கன்சாய் மாநிலத்தைச் சேர்ந்த லெஸ் சொக்லிய் என்பவர் இந்த ட்ரக் வண்டியை வடிவமைத்துள்ளார்.

இதன் விசேஷ குணங்கள் பின்வருமாறு: 3 ஜெட் இன்ஜின்களை கொண்டிருக்கும். மொத்த வலு: 36000 குதிரைவலு. முதல் ¼ மைல் தூரம்வரை 412 கிலோமீற்றர் மணி வேகத்திலும், 1 மணி நேரத்திற்குள் 605 கி.மீ மணி வேகத்திலும் செல்லக்கூடியது.

பாரம் இழுக்கும் ட்ரக் வண்டிகளில் வேகமான முதலாவது ட்ரக் வண்டி இதுதான். அதனால் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.



## அந்தரத்தில் சாகசம்

ஒலிம்பிக் போட்டிகளில் முக்கியமான ஒரு விளையாட்டு ஜிம்னாஸ்ரிக்.


'ஜிம்னாஸ்ரிக்' விளையாட்டுக்களில் பல ரகங்கள் இருக்கின்றன. எந்த ரகமாக இருந்தாலும் உடலை சொன்னபடி கேட்கவைக்கும் கடும் பயிற்சிதான் பிரதானம்.

1992 இல் ஒலிம்பிக் போட்டியில் ஜிம்னாஸ்ரிக் போட்டியில் வெளுத்து வாங்கியவர், விற்றாலி ஸ்சேர்போ(என்ன பெயரப்பா) ரசிய நாட்டவர்.

ஜிம்னாஸ்ரிக் விளையாட்டில் பல ரகங்களிலும் தேர்ச்சிபெற்றவர். அதனால் 1992 ஒலிம்பிக் போட்டியில் ஆறு தங்கப் பதக்கங்களை தட்டிக்கொண்டு சென்றுவிட்டார். இது ஒலிம்பிக் சாதனை. கின்னஸ் புத்தகத்திலும் ஒலிம்பிக் உலக சாதனையாக இது குறிக்கப்பட்டுள்ளது.

ஒரே ஒரு தங்கம் வாங்கவே நமது நாடு போன்ற பல நாடுகள் மூச்சவாங்க கஷ்டப்படும் போது, ஒரேஒரு மனிதன் ஒரேயடியாக ஆறு தங்கங்களை வெல்வது எத்தனை பெரிய சாதனை.

ஜிம்னாஸ்ரிக் விளையாட்டில், சமாந்தர பார்களில் சாகசம், வளையத்தில் சுழன்று ஆடுதல், உட்பட ஆறு ரக விளையாட்டுக்களில் தான் ஆறு தங்கம் கிடைத்தது.




## ஸ்டைலு




சமீபத்தில் பிரிட்டனில் நடைபெற்ற ஆடை அலங்காரக் கண்காட்சியில் பார்வையாளர்களை கவர்ந்திழுத்தது இந்த ஆடை அலங்காரம்தான். குள்ளமான ஆடையிலும் ஆபாசமில்லாத அழகும், அதை அணிபவருக்கு தேவையான சௌகரியமும் இருக்கக்கூடியதாக இந்த ஆடை வடிவமைக்கப்பட்டதாம். நீளமான ஆடை அலங்காரங்களையே ஒரம்கட்டிவிட்டு இந்த ஆடை அலங்காரம் வரவேற்பைப் பெற்றுவிட்டது. ஆள் பாதி, ஆடை பாதி என்பதுபோல, அழகியின் வசீகரமும் இந்த ஆடைக்கு பெருமை சேர்த்துவிட்டது. அழகியின் பெயர், பென் டி லிசி. செல்லமாக 'லிசி' என்று அழைக்கலாம். ஸ்டைல் மன்னி (மன்னனுக்கு பெண்பால் ;-)

இந்த ஆடையை வடிவமைத்ததும் லிசிதான். அதனால் நீங்கள் ஆளைப்பார்க்காமல் ஆடையைப்பபார்த்தாலும் சரி, ஆடையைப் பார்க்காமல் ஆளைப் பார்த்தாலும் சரி, சகல பெருமையும் லிசிக்குத்தான்.




வாழை மரம் பூ பூக்கும். காயாகி, கனியாகும் என்பதெல்லாம் சொல்லித்தான் தெரிய வேண்டிய சங்கதிகளல்ல. ஆனால் படத்தில் காணும் காட்சி அபூர்வமானது. பூத்திருப்பது வாழைக் கன்று. பருவத்துக்கு முன்னரே பூத்துக்குலுங்கும் இந்த வாழைக் கன்று காண்போரையெல்லாம் வியக்கவைத்துவிட்டது. தமிழ்நாட்டில் உள்ள வேம்பனி என்னும் ஊரில் இந்த அபூர்வ வாழைக்கன்று தோன்றியது.



படிப்பகம்